# குர்ஆனின் குரல்

رَمَضَان - ١٤٤٥

மார்ச் - 2024

₹25/-



சென்ட்ரல் பள்ளிவாசல் - பங்களாதேஷ்

999 BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



**K.A.S. ZAINULABDIN & Co.**

New No. 196, Angappan Street, Chennai - 600 001.

www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475

KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# நோன்பின் தத்துவம்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُتِبَ عَلَيْكُمُ ٱلصِّيَامُ
كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

"இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது விதியாக்கப்பட்டிருந்தது போல், உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) விதியாக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் பயபக்தி உடையவர்களாகலாம்" – அல்குர்ஆன் (2 : 183)

---

ரமளான் மாதம் தனக்குள் பரக்கத்துகளையும், ரஹ்மத்து களையும், இறை மன்னிப்புகளையும் சுமந்து கொண்டு நம்மிடம் விருந்தாளி போன்று வருகை தருகிறது. விருந் தாளியை உபசரிப்பது கட்டாயமல்லவா? ரமளானை கண்ணியப்படுத்துவோருக்கு அடுத்த ரமளானும், நோன்பு நோற்கும் பாக்கியமும் கிடைக்கும். இரண்டு ரமளானுக்கு மத்தியிலுள்ள நாட்கள் அனைத்தும் பாவங்களிலிருந்து பாது காப்பு கிடைக்கும். நிம்மதியான வாழ்க்கையும் கிடைக்கும்.

அனைத்து சமூகத்தாருக்கும் நோன்பு கடமையாக்கப் பட்டிருந்தது. முறைகளில் வித்தியாசம் இருந்தது. நமது பாவா ஆதம் (அலை) அவர்களுக்கு பிரதி மாதம் 13, 14, 15 பிறைகளில் நோன்பு கடமையாக இருந்தது. நபி நூஹ் (அலை) அவர்கள் எப்பொழுதும் நோன்பாளியாக இருந்தார்கள். நபி தாவூத் (அலை) அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோறபவர்களாக இருந்தார்கள். நபி ஈஸா (அலை) அவர்கள் இரண்டு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் உம்மத்தினராகிய நமக்கு வருடத்தில் ஒரு மாதம் நோன்பு நோற்பதை கடமையாக்கப்பட்டுள்ளது.

அனைத்து நற்காரியங்களுக்கும் வானவர்களைக் கொண்டு கூலி கொடுப்பவன், நோன்பிற்கு மட்டும் அல்லாஹ்வே கூலி வழங்குகிறான். தன்னையே கூலியாக தரு கிறான். காரணம் : பகல் காலங்களில் உண்ணாமல், பருகா மல், உறவு கொள்ளாமல் இறைதன்மையுடன் ஒத்திருப்பதனால் அல்லாஹ் சந்தோஷமடைந்து அவனது உள்ளத்தைக் கழுவி சுத்தப்படுத்தி இறையச்சத்தைக் கொண்டு நிரப்பி விடுகிறான்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# ஜக்காத்

## அல்-அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை – 625007.

அஸ்ஸலாமு அலைக்கும்
அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால்...

**நமது மதுரை அல்-அமீன் எத்தீம்கானா**
**60 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

உலகெங்கும் பணியாற்றி கொண்டிருக்கும்
ஆயிரமாயிரம் மாணவர்களே அதற்கு மகத்தான சாட்சி.

எத்தீம் பிள்ளைகளுக்கு முழுமையான தீன்கல்வி, கல்லூரிப் படிப்பு வரை உலக கல்வி, உணவு, உடை, மருத்துவம், தங்கும் வசதி என அத்துணையும் இலவசமாக வழங்கி தாயன்புடன் பராமரித்து பாதுகாத்து வரும் நமது அல்-அமீன் எத்தீம் கானாவிற்கு

**உங்கள் ஜக்காத்தை பெருமளவில் வழங்கி**
**எத்தீம் பிள்ளைகளின் உயர்வுக்கு உதவிடுமாறு**

அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜக்காத் / சதக்கா போன்ற உதவிகளை கீழ்க்கண்ட வங்கி கணக்கு அல்லது QR Code மூலமாக அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## BANK ACCOUNT DETAILS

**A/c Name : AL-AMEEN ETHEEM KHANA**
**Current A/c No: 435401010010013**
**IFSC Code: UBIN0803499**
Union Bank of India,
South Masi Street, Madurai-625 001

Scan & Donate

**நமது எத்தீம் கானா சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை**

மேலும் விபரங்களுக்கு **98420 21786 | 97894 89494**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

குரல் : 67
ஷஅபான் – ரமளான் 1445

எதிரொலி – 3
மார்ச் – 2024

# இந்தியாவுக்கு வெளிச்சம் கிடைக்குமா?

சங்கிகளின் பத்தாண்டு கால ஆட்சியில் இந்தியா முழுவதும் கடும் இருள் சூழ்ந்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தல் மூலம் சங்கிகள் வீழ்த்தப்பட்டு, இந்தியாவுக்கு வெளிச்சம் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு இந்தியா முழுவதிலும் உள்ள மக்களின் ஏக்கமாக உள்ளது.

1992-ல் புனித பாபரி மஸ்ஜிதை இடித்து தரைமட்டமாக்கினார்கள்.

இப்போது உச்சநீதிமன்ற உதவியோடு பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோவில் கட்டி இவ்வாண்டு ஆரம்பத்தில் திறப்பு விழா நடத்தினார்கள்.

குஜராத் முதல்வராக இருந்த மோடி, குஜராத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோது வாயை மூடி மவுனம் காத்தது போன்று, மணிப்பூரில் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டபோதும் இந்தியாவின் பிரதமரான மோடி வாயை மூடி மவுனம் காத்தார்.

ஜம்மு கஷ்மீர் மாநிலத்தை இரண்டு துண்டாக்கினார்கள். ஜம்மு கஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை நீக்கினார்கள்.

ஷரீஅத் சட்டத்தில் கை வைத்து முத்தலாக் தடைச்சட்டத்தை கொண்டு வந்தார்கள்.

நாடு முழுவதும் குடியுரிமைச் சட்டத்தையும், பொது சிவில் சட்டத்தையும் கொண்டு வர திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவில் பத்திரிகை சுதந்திரம் 167வது இடத்தில் இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் முதலாவது நாடாக இந்தியாவைக் கொண்டு வரப்போகிறாராம் மோடி.

நம் தாய்நாடாம் இந்தியாவிற்காக உலகளவில் விளையாடி பதக்கங்களைப் பெற்றுத்தந்த வீராங்கனைகளை "தவறாக" சங்கிகள் பயன்படுத்த முயற்சி செய்தபோது விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் நடுவீதியில் இறங்கிப் போராடினார்கள். ஆனால், அவர்களுக்கு கடைசி வரை நீதி கிடைக்கவில்லை.

விவசாயிகள் தாங்கள் விதைத்து விளைவித்த விளைபொருட்களுக்கு உரிய விலை இல்லாததால் கடந்த பத்தாண்டுகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

எந்த ஒரு நாட்டில் சிறுபான்மை மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்களோ அந்த நாடே சிறப்பான நாடாகக் கருதப்படும்.

ஆனால், இந்தியாவில் சிறுபான்மை மக்களின் நிலை என்ன?

இந்தியா முழுவதிலுமுள்ள சிறுபான்மை மக்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களின் சொத்துகள் நாசமாக்கப்படுகின்றன. சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமை கேள்விக்குறியாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சங்கிக் கூட்டம் தவிர, மற்ற அனைவருமே நிம்மதியின்றி பதற்ற நிலையிலேயே உள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே செல்வத்தை குவித்து வருகின்றனர். ஆனால், ஏழைகள் ஏழைகளாகவே வாழ்க்கையைத் தொடர்கிறார்கள்.

வரும் மக்களவைத் தேர்தலில் சங்கிகள் வெற்றி பெற்று ஆட்சியைத் தொடர்ந்தால் இந்தியா சிதறிவிடும் என்பதே எதார்த்த உண்மை!

சங்கிகளால் இந்தியாவை சூழ்ந்துள்ள இருள் அகன்று, வரும் மக்களவைத் தேர்தல் மூலம் வெளிச்சம் கிடைக்க வேண்டும்.

இந்தியாவிற்கு வெளிச்சம் கிடைக்க நாம் அனைவரும் ஊண், உறக்கமின்றி அயராது பாடுபடுவோமாக!

இன்ஷா அல்லாஹ் வெற்றி உறுதி! வெளிச்சம் நிச்சயம்!!

☛ வங்கியில் ஏலத்திற்கு வரும் வீடு அல்லது நகைகள் போன்றவற்றை முஸ்லிம்கள் வாங்கலாமா?

**பழனிகவுண்டன்புதூரிலிருந்து**
**பானு**

✍ தவிர்த்துக் கொள்வது நல மாகும். ஏனெனில், அப்படி ஏலம் விடப்படக்கூடிய வீடுகளும், நகைகளும் அதன் உரிமையாளர் களின் மிகுந்த மன எரிச்சல் களை பெற்றிருக்கலாம். மிகுந்த வேதனைக்குப் பின்னால் வேறு வழியின்றி அந்தப் பொருட்கள் விற்கப்படலாம். எனவே, இன் னொருவரின் மன எரிச்சலுக்கும், சிரமத்திற்கும் ஆளான ஒரு பொருளை அல்லது ஒரு வீட்டை வாங்குவது பரக்கத் இல்லாமல் போவதற்கு காரணமாகி விடலாம். எனவே, தவிர்த்துக் கொள்வதே நல்லதாகும்.

☛ சமீப காலமாக வட இந்தியா வில் மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளிலும் இஸ்லாமிய பெயர்களைக் கொண்ட ஊர் களையும், தெருக்களையும் பெயர் மாற்றம் செய்யப்படு கிறது. இது பற்றிய தங்களின் கருத்துஎன்ன?

**வேடசந்தூரிலிருந்து**
**அ.ஷேக் முஹம்மது**

✍ இந்த நிலை மாறவேண்டுமா னால் நம் சமுதாயம் தங்களின் பிரிவினை சிந்தனைகளை மாற்றிக் கொள்ளும் ஒரே வழி யைத் தவிர வேறு வழியில்லை. எனவே, வரக்கூடிய தேர்தலில் நம் சமுதாய மக்கள் ஒரே குடை யின்கீழ் ஒன்று சேர்ந்து அல்லாஹ் வும், அவனது ரஸூலும் கட்டளையிட்டிருக்கக்கூடிய ஒற்றுமையை முழுமையாக எடுத்துக் கொண்டாலே அதன் தொடரில் நமக்கு கிடைக்கக் கூடிய வெற்றியில் மிகப் பெரிய பலனை நாம் காண முடியும். மென்மேலும் கட்சி என்றும், அமைப்பு என்றும், இயக்கம் என்றும், தலைமை என்றும் பிரிந்து செல்வதால் எந்த விதமான சாதனைகளையும் நிச்சயமாக நாம் நிகழ்த்த முடியாது. அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். வரக்கூடிய தேர்தல் ஒன்றே நமக்கு விடிவாக அமை யும் இன்ஷா அல்லாஹ்! அத்துடன் நமது வீணான செலவுகளையும், ஆடம்பரங்களையும் தவிர்த்து

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

சமுதாயத்தின் பொது முன்னேற்றத்திற்காக நம் செல்வங்கள் செலவிடப்பட வேண்டும்.

☛ குழந்தைகளுக்கு கண் திருஷ்டி ஏற்படாமல் இருக்க, கருப்பு மையினால் பொட்டு வைக்கலாமா?

**திருப்பூரிலிருந்து**
**எம்.முஹம்மது ரபீக் அலீ**

✍ கண் திருஷ்டி ஏற்படாமல் இருக்க மேற்கண்ட வழிமுறையை செய்யலாம். எனினும், நமது நம்பிக்கை அதன் மீதே சென்றுவிடாமல்பார்த்துக்கொள்வது மிக மிக அவசியமாகும்.

☛ நான் ரமளான் காலங்களில் மட்டும் எனது ஏழ்மையான உறவினர்களுக்கும், அந்நியர்களுக்கும் துணிமணிகள் எடுத்து ஜகாத்தாக வழங்கி வருகிறேன். என்னுடைய இந்த செயலை அல்லாஹ் பொருந்திக் கொள்வானா? இதன் மூலமாக அவனின் அன்பும், ரஹ்மத்தும் எனக்கு கிடைக்குமா?

**நாமக்கலிலிருந்து**
**ஜே.சையத் ரஹீமான்**

✍ கண்டிப்பாக கிடைக்கும். ஜகாத்துடையவகையில்கொடுத்திருந்தால் ஜகாத்துடைய கடமை நீங்கி விடும். ஜகாத்துடைய கணக்கிற்கு அப்பாற்பட்டு கொடுத்திருந்தால் நம்முடைய மனத்தூய்மையின் அளவு நன்மைகள் அதிகமாக கிடைக்கும்.

☛ இன்றைய காலக்கட்டத்தில் குழந்தைகள் கூட மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். அதனால், மன நோயாளிகளாகவும் மாறி விடுகிறார்கள். விடிவுதான் என்ன?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

✍ உலக ஆசைகளும், ஆடம்பரமான சிந்தனைகளும் குழந்தைப் பருவத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அல்லாஹ்வுடைய அச்சம் சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். இந்த இரண்டு வழிகளையும் ஆழமாக ஏற்படுத்தி விட்டால், இன்ஷா அல்லாஹ் மன அழுத்தங்களை விட்டும், அதனால், ஏற்படக்கூடிய பாதிப்புகளை விட்டும் குழந்தைகளை இன்ஷா அல்லாஹ் நாம் காப்பாற்ற முடியும்.

☛ நம் இஸ்லாமிய திருமணங்களிலும், மற்ற இஸ்லாமிய நிகழ்ச்சிகளிலும் நம் சகோதர சமுதாயத்தவர்களை வாழ்த்தி பேசுவதற்கு அழைக்கலாமா?

**திண்டுக்கலிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

✍ தவறில்லை.

☛ ரமளானில் நாம் தொழக்கூடிய தராவீஹ்வுடைய தொழுகை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்தில் ஆரம்பிக்கப் பட்டதா? அல்லது கலீஃபாக்

களின் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டதா? விபரம் என்ன?

**பணங்காட்டூரிலிருந்து**
**ஜெ.முஹம்மது யூசுஃப்**

✍ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமளானுடைய இரவுகளில் மேற்படி தொழுகையை தொழுதி ருக்கிறார்கள். பொதுவாக, நபி (ஸல்) அவர்கள், பள்ளிவாச லில் தொழ நின்றுவிட்டால், அவர்களுக்கு பின்நின்று தொழுவதை பெரும் பாக்கிய மாக கருதி வந்த ஸஹாபாக்கள், தாங்களாகவே அந்த நபி (ஸல்) அவர்களுக்கு பின்னால் நின்று பின் தொடர்ந்து தொழ ஆரம்பித்து விடுவார்கள். அந்த வகையில், அந்த இரவு நேரங் களிலும் பள்ளியில் உட்கார்ந்து கொண்டிருந்த ஸஹாபாக்கள், நபி (ஸல்) அவர்களின் தொழுகையை பார்த்து அவர் களை பின்தொடர ஆரம்பித்து விட்டார்கள். அடுத்த நாளும் நபி (ஸல்) அவர்கள் தொழ, கொஞ்சம் கூட்டம் அதிகமாகி விட்டது. மூன்றாவது நாளும் நபி (ஸல்) அவர்கள் தொழ, கூட்டம் **இன்னும்** அதிகமாகி விட்டது. நான்காவது நாளாக ஸஹாபாக்கள், நபி (ஸல்) அவர் களின் வருகைக்காக காத்திருந்த போது, நபி (ஸல்) அவர்கள் வீட்டி லிருந்து வெளியே வரவில்லை. சுப்ஹுடைய நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளியே பள்ளிவாசலுக்கு வந்து, கூடியிருந்த ஸஹாபாக் களை பார்த்து "நான் உங்களின் ஆர்வமிக்க செயல்பாடுகளைப் பார்க்கிறேன். எனினும், நான் இப்படியே தொடர்ந்து உங் களுக்கு இந்த நஃபிலான தொழுகையை தொழ வைத்துக் கொண்டிருந்தால் அல்லாஹ் அந்த தொழுகையை உங்கள் மீது கட்டாயமாக்கி விடுவானோ என்று நான் பயந்ததன் காரண மாகவே நான் இன்று வீட்டை விட்டும் வெளியே வரவில்லை" என்று கூறினார்கள். எனினும், நபி (ஸல்) அவர்களுடைய காலத் திற்கு பின்னரும் ஸஹாபாக்கள் தனித்தனியாகவும், ஒரு சில பேர்கள் சேர்ந்து ஜமாஅத் தாகவும் ஆங்காங்கே நின்று பள்ளிவாசல்களின் இடங் களில் தொழுவதும், தொழ வைப்பதும் ரமளானுடைய இரவுகளில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

பின்னர் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுடைய காலத்தில் இந்த நிலையை கண்ட அவர்கள், இப்படி தனித்தனியாக தொழக் கூடிய அனைவரையும் ஒரே இமாமின் கீழ் ஒன்று சேர்த்து தொழ வைத்தால் நன்றாக இருக்குமே! என்று கருதி அவர் களில் ஒருவரை இமாமாக நிற்க வைத்து தராவீஹுவுடைய தொழுகையை ஜமாஅத்தாக தொழ வைக்க ஆரம்பித்தார்கள். இதற்கு பின்பு கலீஃபாக் களுடைய காலங்களிலும், இமாம்

களுடைய காலங்களிலும் தராவீஹ்வுடைய தொழுகை 20 ரக்அத்துகளை ஜமாஅத்தாக தொழுகக்கூடிய வழமை உலகம் முழுவதிலும் அல்லாஹ்வின் அருளால் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்! கலீபாக்களின் செயல்களையும், அந்த விஷயத்தில் ஸஹாபாக்களின் ஒற்றுமையையும் அடிப்படையாக கொண்டுதான் எல்லா இமாம்களும் தராவீஹ்வுடைய இருபது ரக்அத்துகள் ஜமாஅத்தாக தொழ வைக்கப்பட வேண்டும் என்ற வரைமுறையையும், அந்த 20 ரக்அத்துகளிலே அல்குர்ஆனின் 30 ஜுஸ்வுகளை முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என்ற வழிமுறையையும் ஏற்படுத்தினார்கள். இதுவே இஸ்லாமிய சமுதாயத்தின் உயர்விற்கு வழிவகுக்கக்கூடிய சிறந்த வழிமுறையாகும்.

☛ ஒருவர், மனைவியை தலாக் சொன்ன பின்பு மஹர் தொகையை திரும்ப கேட்டு பெற்றுக் கொண்டார். இது விஷயத்தில் மார்க்கம் என்ன சொல்கிறது?

**நாகையிலிருந்து**
**முஹம்மது யூசுப்**

✍ நாம் மஹர் தொகையை திருப்பிக் கேட்பதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. எனினும், அந்தப் பெண்ணாக அந்தத் தொகையை மனமுவந்து திருப்பிக் கொடுத்து விட்டால் வாங்குவதும் தவறு இல்லை.

☛ இன்றைய நவீன காலக் கட்டத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை செல்போன்களை பயன்படுத்துகிறார்கள். அதில் பார்ப்பதற்கு தடுக்கப்பட்ட பல்லாயிரம் விஷயங்களை ஆர்வத்தோடும், வேகத்தோடும் பார்க்கிறார்கள். சில பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களோ வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறையாவது திரையரங்கிற்கு செல்வதை வழமையாக்கிக் கொள்கிறார்கள். மார்க்கம் இது விஷயத்தில் என்ன சொல்கிறது?

**சேலத்திலிருந்து**
**கே.பஷீர் முஹம்மது**

✍ நம் கண்ணியமான மார்க்கம் சாதாரணமாகவே போட்டோ எடுப்பதையும், வீடியோ எடுப்பதையும் ஆரம்பத்திலிருந்தே தடுத்து வந்திருக்கிறது. எந்த கள்ளிச் செடியையும் முளையிலேயே கிள்ளியெறிந்து விட்டால் அது அத்தோடு எங்காவது போய் தொலைந்து விடும். வளர விட்டால் எதிர்பாராத விபரீதங்களும், கொடூரமான பிரச்சனைகளும் ஏற்படும் என்ற காரணத்தினால்தான் மார்க்கம் இதுபோன்ற தடைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வகையில்தான் அந்த சினிமாக்களும், மனித சமுதாயத்திற்கு அறவே

# இஃதிகாஃபிற்கான கூலி!

(٢) عن ابن عباس أن رسول الله صلى الله عليه وسلم قال في المعتكف هو يعتكف الذنوب ويجرى له من الحسنات كعامل الحسنات كلها.

(مشكوة عن ابن ماجة)

“ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஃதிகாஃப் இருப்பவருடைய விஷயத்தில் ‘அவர் பாவங்களைவிட்டும் பாதுகாக்கப்படுகிறார். நற்செயல்கள் அனைத்தையும் செய்பவரைப் போன்ற நன்மைகள் அவருக்கு எழுதப்படுகின்றன’ என்று அருளினார்கள்.”

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்.

(நூல் : மிஷ்காத்)

புனித ரமளானே
வருக! வருக!
அருளை அள்ளித் தருக! தருக!

செய்யது சகோதரர்கள்
நாகூர்.

ஒவ்வாத ஆபாச படங்களும், முளையிலேயே கிள்ளியெறியப் பட வேண்டும் என்பதில் எள்ள ளவும் சந்தேகமில்லை. இதன் மூலமாக நாமும், வரக்கூடிய நம் சமுதாயக் குழந்தைகளும், இளைஞர்களும், வாலிப பெண் களும் நிறைய பாதிக்கப்படு கிறார்கள் என்பதை கண் கூடாகவே நம் சமுதாயம் பார்த்து வருகிறது. எனவே, இப்பொழுதிலிருந்தாவது நம் குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் மிக மிக கண்ணும் கருத்துமாக செயல்படுவது ஒவ்வொரு பெற்றோர் மீதும் கட்டாயக் கடமையாகும்.

☛ சில இள வயது பிள்ளைகள் விபத்தில் இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு ஆசைகள் நிறைய இருக்கும். அவர்கள் இறந்த பின்பும் உலகில்தான் இருப்பார் கள் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா? மார்க்கம் என்ன சொல்கிறது?

**சிக்மளூரிலிருந்து**
**வியாகத் அலீ**

✍ ஷரீஅத் ரீதியாக அப்படி எதுவும் சொல்லப்படவில்லை. அவர்கள் இறந்தபின்பு அடக்கம் செய்யப்பட்டுவிட்டால் அவர் களின் உடலும், உயிரும் அந்த மண்ணுக்குள் அடக்கம் செய்யப் பட்டு விடுகிறது. அது வெளியே வருவதற்கு வேலை கிடையாது. அதில் குழப்பம் ஏற்படுவதற்கு வழி இல்லை. அதைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியமும் நமக்கு இல்லை.

☛ குர்பானி கொடுக்கும் நபர், குர்பானியின் பெருநாளைக்கு முன்பு ஒரு நோன்பு அல்லது இரண்டு நோன்பு வைப்பது கட்டாயமா? அப்படியானால், அந்த நோன்பிற்கு எப்படி நிய்யத் செய்ய வேண்டும்?

**சேலத்திலிருந்து**
**அப்பாஸ்**

✍ குர்பானியின் பெருநாளைக்கு முன்பு துல்ஹஜ் பிறை 9 அன்று அரஃபாவுடைய நோன்பு வைப் பது சுன்னத்தாகும். இதனன்றி, துல்ஹஜ் மாதத்தில் முதல் பத்து நாட்களின் சிறப்பைக் கருதி அவர் விரும்பினால், அவருக்கு சக்தியிருந்தால் முடிகின்ற நாட் களில் நோன்புகளை வைத்துக் கொள்ளலாம். அதற்கான அதிகப் பட்சமான நன்மைகள் அல்லாஹ் விடமிருந்து அவருக்கு வழங்கப் படும். ரமளான் மாதத்துடைய முப்பது நோன்புகளைத் தவிர, மற்ற நாட்களில் வைக்கப்படக் கூடிய எந்த நோன்பும் கட்டாய மானதாக கிடையாது. அரஃபா வுடைய நோன்பை சுன்னத்தான நோன்பு என்று மட்டும் நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்.

☛ ஸதகா செய்வதற்கு நிய்யத் எதுவும் செய்ய வேண்டுமா?

**திருப்பூரிலிருந்து**
**ஜக்கரிய்யா**

ஃபர்ளான அல்லது வாஜிபான தர்மங்களுக்கு நிய்யத் அவசிய மாகும். அந்த நிய்யத் இல்லா விட்டால் அந்தக் கடமைகள் அவரை விட்டும் நீங்காது.

ஃபர்ளு என்பது அல்லாஹ்வி னால் மனிதர்கள் மீது கட்டாய மாக்கப்பட்ட ஜகாத்துடைய வகையைச் சார்ந்ததாகும்.

வாஜிபு என்பது மனிதன் தானாக ஏதாவது ஒன்றை நேர்ச்சை செய்து அதன் மூலம் அவன் தன் மீது கட்டாயமாக்கிவிட்ட தர்மமாகும்.

இதனன்றி, சாதாரணமாக கொடுக்கப்படக்கூடிய தர்மங் கள் நஃபிலான வணக்க வழிபாடு களில் கட்டுப்படும். அதற்கு நிய்யத் அவசியமில்லை. நிய்யத் செய்தாலும், செய்யாவிட்டா லும் அவர் கொடுக்கும் தர்மத் திற்கு நிச்சயம் கூலி கொடுக்கப் படும். எனினும், அவர் மறுமை சம்பந்தப்பட்ட எந்த நிய்யத்தும் இல்லாமல் புகழுக்காக அல்லது ஆடம்பரத்திற்காக அல்லது வேறு ஒன்றை எதிர்பார்ப்பதற்காக தர்மம் கொடுத்தால் அதற்கு இம்மையிலும், மறுமையிலும் எந்தக் கூலியும் கொடுக்கப்பட மாட்டாது என்பதுடன், அவர் மனதில் உதிர்த்த தீய எண்ணத் தின் காரணமாக அதற்குரிய அல்லாஹ்வின் தண்டனையை அந்த மனிதர் ஏதாவது ஒரு வகையில் அனுபவித்தேதீருவார். நவூதுபில்லாஹ்!


# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

☛ இஸ்லாமிய எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

✍ எழுதப்படும் விஷயம் இம்மை - மறுமை எது சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், போதுமான ஆதாரங்களுடன் எழுதப்பட வேண்டும். மனத்தூய்மை மிக மிக அவசியம். இந்த இரண்டும் இல்லாத பட்சத்தில் அவரின் எழுத்துக்கு வர வேண்டிய பலன்கள் அனைத்தும் பறிபோய் விடும்.

☛ என்னிடம் சுமார் 25 பவுன் நகைகள் இருக்கின்றன. என் மீது ரூபாய் 50,000/- அளவு கடனும் இருக்கிறது. நான் எவ்வளவு ஜகாத் கொடுக்க வேண்டும்? வரக்கூடிய ரமளானில் கொடுக்க முடியவில்லையானால் ரமளான் முடிந்த பின்பு கொடுக்கலாமா?

✍ ஜகாத் கடமையாகிவிட்டால் அந்தந்த வருடத்தில் அந்த கடமையை முடித்து விட வேண்டும். கால தாமதம் செய்யக் கூடாது. 25 பவுன் நகைகளுக்கு 5 கிராம் தங்கத்தின் அளவு ஜகாத் கொடுக்க வேண்டும். எனினும், உங்கள் மீது கடன்கள் இருப்பதால், அந்த 25 பவுனிலிருந்து ரூபாய் 50,000/ அளவு கழித்து மீதியுள்ள நகைகளுக்கு மட்டும் ஜகாத் கொடுத்தால் போதுமானது.

☛ நானும், என் தம்பியும் ஒரு சொத்தில் உரிமையாளர்களாக இருந்தோம். இப்போது அவரும், அவரது மனைவியும் இறந்து விட்டனர். அவருக்கு ஒரே ஒரு மகன் மட்டும் இருக்கிறார். அந்த சொத்தை எவ்வாறு பிரிப்பது?

**திருச்சியிலிருந்து**
**முக்தார் அஹமது**

✍ மேற்படி சொத்து இருவருக்கும் சம பாகங்களாக இருந்தால், இருக்கின்ற அந்த சொத்தை சமமாக இரண்டு பகுதிகளாக பிரித்து, ஒரு பகுதியை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்னொரு பகுதியை உங்களின் தம்பி மகனுக்கு கொடுத்து விட வேண்டும்.

☛ இரவில் பால், தயிர், எண்ணெய் போன்றவற்றை அண்டை வீட்டார்கள் கேட்டால் நாம் கொடுக்கக் கூடாது என்றும், அப்படி கொடுத்தால் நம்மிடமுள்ள பரக்கத் போய் விடும் என்றும் சிலர் கூறுகிறார்கள். விளக்கம் தேவை?

**ஆத்தூரிலிருந்து**
**ஷமீமா பீவி**

✍ மார்க்கம் அப்படி எதையும் சொல்லவில்லை.

☛ சில நேரங்களில், இமாம் சுதைஸி போன்றவர்கள் ஓதும் போது, நம் உள்ளம் அதிலேயே லயித்துப் போய் விடுகிறது. இவ்வாறே, நாகூர் ஹனீஃபா போன்றவர்களும், சில மாற்று மத பாடகர்களும் பாடும்போது கூட நம் உள்ளம் அந்த பாடல்

## மறுமையில் தாகம் ஏற்படாமலிருக்க....

"இன்னும் எவர் ஒரு நோன்பாளிக்கு நீர் புகட்டுவாரோ, (கியாமத்து நாளில்) என்னுடைய ஹவ்லுல் கவ்தரிலிருந்து அல்லாஹ் அவருக்கு நீர் புகட்டிடுவான். அதனால் சொர்க்கம் செல்லும் வரை அவருக்குத் தாகம் என்பதே ஏற்படாது" என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள். (நூல் : தர்ஃகீப்)


வாழ்த்துக்களுடன்....

ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்
ஓர் உறுதியான இணைப்பு

30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு

சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்
கம்பி | கெமிக்கல்ஸ்

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

களின் பக்கம் ஈர்க்கப்பட்டு விடுகிறதை பார்க்கிறோம். இந்த நிலையிலும்கூட நம் மார்க்கம் இசையை அனுமதிக்கவில்லையா?

**சென்னையிலிருந்து**
**அப்துர் ரஜ்ஜாக்**

✍ இசையும், இசைக்கருவிகளும் ஹராமாக்கப்பட்டு விட்டனஎன்பதில்மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அழகிய குரல் வளங்களை கொண்டு, மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட அரபி, உருது, தமிழ் பாடல்களை பாடுவதும், மார்க்கத்தை உலகத்தில் பரப்புவதற்கு ஏதுவான சம்பவங்களை பாடல்கள் மூலம் உலகிற்கு வெளிக் கொண்டுவந்து சொல்வதும், அல்குர்ஆனின் அருமையான வசனங்களை இமாம் சுதைஸியை போன்று, இந்தியாவின் காரீ அப்துல் பாஸித் (ரஹ்) அவர்களைப் போன்று ஓதிக் காட்டி அதன் மூலம் பல்லாயிரம் பேர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்ப்பதும் தவறான விஷயங்கள் அல்ல. மிக சிறந்த விஷயங்களாகும். அத்தோடு மட்டுமின்றி அந்தப் பாடல்களைப் பாடுபவர்களும், அல்குர்ஆனை ஓதுபவர்களும் மனத்தூய்மையோடு, அல்லாஹ்விற்காகவே ஓதுவார்களேயானால் நிச்சயம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து சிறந்த நன்மைகள் வழங்கப்படும்.

எனினும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் கடுமையாக தடுக்கப்பட்டிருக்கக்கூடிய இசைக்கருவிகள் அந்தப் பாடல்களில் பயன்படுத்தப்படுமானால் எந்த சந்தேகமுமின்றி அப்படி பாடுவது ஹராமாகி விடும். ஹராம் என்று அல்லாஹ்வின் தூதரால் தெளிவாக கூறப்பட்ட ஒரு விஷயத்தை ஹலாலாக்குவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அந்த ஹராமின் மூலம் ஆயிரம் பலன்கள் கிடைத்தாலும் அதைக் கொண்டு மறுமை நாளில் அல்லாஹ்விடம் பரிகாரம் தேட முடியாது.

☛ சிறு சிறு காரணங்களைக் கூறி ரமளானுடைய நோன்புகளை விட்டுவிடுவதற்கு மார்க்கம் அனுமதிக்கிறதா?

**பூணாவிலிருந்து**
**மஜீத் பாய்**

✍ மார்க்கம் கூறியிருக்கக்கூடிய தொலை தூர பயணம் அல்லது நோன்பு வைக்க முடியாத அளவுக்குள்ள நோய் ஆகிய இரண்டு காரணங்களால் மட்டும் நோன்பை தற்காலிகமாக விட்டு விட்டு நோன்பு காலம் முடிந்ததும், முடிந்தளவு விரைவாக தாமதமின்றி அந்த நோன்புகளை களாச்செய்துகொள்வதுகட்டாயமாகும். சாதாரண காரணங்களைக் கூறி நோன்பை விட்டு விட்டால் அல்லாஹ்வின் மிகப் பெரிய தண்டனையை நாம் எதிர்கொள்ள வேண்டியது வரும். **உஷார்!**

# புனித ரமளான் மாதம்

## ரமளான் நோன்பின் நிய்யத்து

نَوَيْتُ صَوْمَ غَدٍعَنْ اَدَاءِ فَرْضِ رَمَضَانَ هٰذِهِ السَّنَةِ لِلّٰهِ تَعَالٰي

**நவைத்து ஸவ்ம ஃகதின் அன் அதாயி ்பர்ளி ரமளான ஹாதிஹிஸ் ஸன[த்]தி லில்லாஹி தஆலா**

(நூல்: அல்அத்கார் – பக்கம் – 546, 547)

## நோன்பு திறப்பதற்கு பொதுவான துஆ!

اَللّٰهُمَّ لَكَ صُمْتُ وَعَلٰي رِزْقِكَ اَفْطَرْتُ

**அல்லாஹும்ம ல[க்]க ஸும்து வ அலா ரிஜ்கிக அஃப்தர்து**

(நூல் : அபூதாவூது, மிஷ்காத், பக்கம் : 175)

## நோன்பு திறந்தபின் ஓதும் துஆ

ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوْقُ وَثَبَتَ الْاَجْرُ اِنْ شَاءَاللهُ

**தஹபேள் ளமஉ வபேத்தல்லத்தில் உரூ[க்]கு வ ட்தபேத்தல் அஜ்ரு இன்ஷா அல்லாஹ்**

(நூல் : மிஷ்காத் – மற்றும் அல்அத்கார்–பக்கம்:551)

## பிறரிடம் நோன்பு திறந்த பின் ஓதும் துஆ

اَفْطَرَعِنْدَكُمُ الصَّائِمُوْنَ وَاَكَلَ طَعَامَكُمُ الْاَبْرَارُ وَصَلَّتْ عَلَيْكُمُ الْمَلَائِكَةُ

**அF்ஃப்தர இந்தகுமுஸ் - ஸாயிமூன வ அ[க்]கல தஆம[க்]கு முல் அபேர்ராரு வ ஸல்லத் அலை[க்]குமுல் மலாயி[க்]கத்து.**

(நூல் : கன்ஜுல் உம்மால் ஹதீஸ் எண் : 25988)

## முதல் பத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ ارْحَمْنِيْ بِرَحْمَتِكَ يَاأَرْحَمَ الرَّاحِمِيْنْ

**“அல்லாஹும் மர்ஹம்னீB பி ரஹ்மத்[த்]திக்க யா அர்ஹமர் ராஹிமீன்”**

பொருள் : கிருபையாளர்களுக்கெல்லாம் கிருபையாளனாகிய அல்லாஹ்வே! உனது ரஹ்மத்தால் எனக்கு அருள்புரிவாயாக!

## இரண்டாம் பத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ ذُنُوْبِيْ يَا رَبَّ الْعَالَمِيْنْ

**“அல்லாஹும் மஃஃபிர்லீ துனூபீ யாரப்பல் ஆலமீன்”**

பொருள்: அகிலத்தார்களை போஷித்து வளர்க்கக் கூடிய அல்லாஹ்வே! எனது குற்றங்களை மன்னித்து அருள்வாயாக....!

## மூன்றாம் பத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَعْتِقْنِيْ مِنَ النَّارِ وَاَدْخِلْنِيْ الْجَنَّةَ يَا رَبَّ الْعَالَمِيْنْ

**“அல்லாஹும் மஃஃதிக்னீ மினன் னாரி வ அத்ஃகில்னில் ஜன்ன[த்]த யாரBப்Bபல் ஆலமீன்”**

பொருள் : அகிலம் அனைத்தையும் படைத்து பரிபாலிக்கக் கூடிய இரட்சகனே! என்னை நரகத்திலிருந்து விடுதலையாக்கி, சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக!

# தலையெழுத்தை மாற்றும் துஆ

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"நபியே உங்களிடம் என்னைப் பற்றி என்னுடைய அடியார்கள் கேட்டால், நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாகவே இருக்கிறேன். அழைப்பவரின் அழைப்புக்கு என்னை அவர் அழைக்கும் போது நான் அவருக்கு பதிலளிக்கிறேன். எனவே அவர்கள் நேர் வழி பெற்றவர்களாவதற்கு என் கட்டளைகளை ஏற்று எனக்கு அவர்கள் வழிபட்டு என் மீது அவர்கள் ஈமான் கொள்ளட்டும் என்று கூறுவீர்களாக"

- அல்குர்ஆன் (2 : 186)

"முஃமின்களே! உங்களுடைய ரப்பை தாழ்மையுடனும், மெதுவாகவும் நீங்கள் பிரார்த்தியுங்கள். நிச்சயமாக அவன் வரம்பு மீறுகிறவர்களை நேசிக்கமாட்டான்"

- அல்குர்ஆன் (7 : 55)

"அல்லாஹ் என்று நீங்கள் அழையுங்கள் அல்லது அர்ரஹ்மான் என்று அழையுங்கள்; எதைக் கொண்டு நீங்கள் அழைத்தாலும் அவனுக்கு அழகிய திருநாமங்கள் உள்ளன. நபியே உங்கள் தொழுகையில் நீங்கள் சப்தமிட்டு ஓத வேண்டாம். மிக மெதுவாகவும் ஓத வேண்டாம். இவற்றுக்கிடையே நடுத்தரமாக ஒரு வழியை தேடிக் கொள்வீராக"

- அல்குர்ஆன் (17 : 110)

"எங்களுடைய ரப்பே! நாங்கள் உன் மீது நம்பிக்கை கொண்டோம். எனவே, எங்களை மன்னித்து எங்களுக்கு கிருபை செய்வாயாக. கிருபை செய்வோரில் நீ மிகச் சிறந்தவன்"

- அல்குர்ஆன் (23 : 109)

"அவர்கள் பொறுமையாக இருந்ததால் நிச்சயமாக நான் இன்று அவர்களுக்கு பிரதிபலனை வழங்கினேன். நிச்சயமாக அவர்கள்தாம் வெற்றியாளர்கள்"

- அல்குர்ஆன் (23 : 111)

துஆ, பிரார்த்தனை குறித்து குர்ஆனில் பல்வேறு இடங்களில் கூறப்படுகிறது.

ஹள்ரத் நபி ஆதம் (அலை), ஹள்ரத் நபி மூஸா (அலை), ஹள்ரத் நபி யூனுஸ் (அலை), ஹள்ரத் நபி யூசுஃப் (அலை), ஹள்ரத் நபி (ஸல்)

அவர்கள் என நபிமார்கள் கேட்ட துஆகளெல்லாம் குர்ஆனில் நினைவு கூறப்பட்டுள்ளன.

துஆ ஒரு வலிமைமிக்க ஆயுதம். துஆ எனும் ஆயுதத்தை மிகச் சரியாகப் பயன்படுத்த தெரிந்து கொண்டால் போரில் வெற்றி பெறுவதைப்போல்துஆவைகேட்கும் முறைப்படி கேட்டால் நிச்சயமாக பதில் கிடைக்கும்.

நபி (ஸல்) அவர்களுடைய வெற்றிகளெல்லாம் துஆகள் மூலமாகவே கிடைத்திருக்கின்றனஎன்பதுவரலாற்று உண்மை.

உலக சரித்திரத்தில் இடம் பெற்ற பத்ருப் போர்க்களத்தின் வெற்றிக்கு மூல காரணமே துஆதான்.

ஹள்ரத் நபி யூனுஸ் (அலை) மீன் வயிற்றினுள்ளிருந்து கேட்ட துஆதானே மீண்டும் அவர்களை உலகத்தைப் பார்க்க வைத்தது.

ஹள்ரத் நபி யூசுஃப் (அலை) அவர்களின் பல்லாண்டு சிறை வாழ்க்கை வசந்த வாழ்க்கையாக ஆனதே துஆவால் தானே!

ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்களின் துஆ கடலைப் பிளக்க வைத்து, ஃபிர்அவ்னை மூழ்க வைத்து, வெற்றி பெற வழி வகுத்தது பிரம்மாண்டம்தானே!

ஹள்ரத் நபி ஆதம் (அலை) அவர்கள் கேட்ட துஆவும், அழுகையும் ஆஹா எத்தகைய பிரமிப்பூட்டுபவையாக இருக்கின்றன.

துஆ களா கத்ர் எனும் தலையெழுத்தையும் பலாய் முஸீபத்துக்களையும் மாற்றக்கூடிய ஆற்றலுடையது என்பதை சொல்லித் தந்திருக்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள்.

ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் துஆ கேட்குமாறு கற்றுத் தந்துள்ளார்கள் நபி (ஸல்) அவர்கள்.

ஒவ்வொரு பிரச்சனைக்கும் இப்படிக் கேளுங்கள் என்று துஆவை கற்றுக் கொடுத்துள்ளாாகள் நபி (ஸல்) அவர்கள்.

## ரமளான் வழங்கும் ரய்யான்!

“சொர்க்கத்தில் “ரய்யான்” என்று கூறப்படும் ஒரு வாசல் இருக்கிறது! மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள்! நோன்பாளிகள் எங்கே ? என்று கேட்கப்படும். உடனே அவர்கள் எழுவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள்! அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் அடைக்கப்பட்டுவிடும். அதன் வழியாக வேறு எவரும் நுழைய மாட்டார்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் சஹ்ல் (ரளி) அவர்கள் (புகாரி 1896)

ஸஹாபாக்கள் துஆ கேட்கும்போது அக்கூட்டத்தில் அமர்ந்து ஆமீன் சொல்லி இருக்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் உம்ராவுக்குச் செல்ல நபி (ஸல்) அவர்களிடம் சொல்லிக் கொண்டபோது, "உமரே! எனக்காக துஆச் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள்.

துஆ மனிதனுக்கு கிடைத்த வரப்பிரசாதம். எத்தனை பாவங்கள் எத்தகைய குற்றங்களாயிருப்பினும் மீண்டும் நான் இப்பாவத்தை செய்ய மாட்டேன் என்று அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கும் போது அனைத்தையும் மன்னித்துவிடும் மாபெரும் கிருபையாளனாயிருக்கிறான் அல்லாஹ்.

நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கக் கூடியவனாக, தவ்பாவை ஏற்கக் கூடியவனாக இருக்கிறான்.

தவ்வாபுர் ரஹீம் என்று தன்னைப் பற்றி அல்லாஹ் குர்ஆனில் கூறி, தவ்பாவை நினைவுபடுத்துகிறான் என்றால் அவன் மாபெரும் கிருபையாளனாக இருப்பதால்தான்.

தவ்பாவும், பிரார்த்தனையும் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இரு நிபந்தனைகளை

CityAds BOOKS www.cityadsbooks.com

# இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்- நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர்ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds For More Details Call/Whatsapp: 98410 16016

நபி (ஸல்) அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஒன்று : பொய் சொல்லா மல் இருப்பது. மற்றொன்று : ஹராமான பொருட்களை சாப்பிடாமல் இருப்பது.

"நாயகமே! துஆ செய்யுங் கள்" என்று ஸஹாபாக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளைச் சொல்லி கேட்டிருக்கிறார்கள்.

உம்மஹாத்துல் முஃமினீன் களான நபிமணியின் நல்லறத் துணைவியர்கள் நபிமணியிடம் துஆ செய்யும்படி கேட்டிருக் கிறார்கள்.

அப்படிக் கேட்டவர்களில் ஒருவர் அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள். நபி (ஸல்) அவர்கள் துஆச் செய்த வுடன் துள்ளிக் குதித்து சந்தோஷப்பட்ட நிகழ்வுகளும் உண்டு.

நான் துஆ கேட்கிறேன். நீங்கள் ஆமீன் சொல்லுங்கள். பிறகு நீங்கள் துஆ கேளுங்கள்; நான் ஆமீன் சொல்கிறேன் என்று இரு ஸஹாபாக்கள் துஆ கேட்ட சம்பவமும் உண்டு.

அழுது கேட்பது கெஞ்சிக் கேட்பது, நடுநிசியில் கேட் பது, இவையெல்லாம் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற் கான வழிமுறைகளாகும்.

தர்மம் செய்து விட்டுக் கேட்பது என்பது பெரியோர் கள் காட்டிய வழிமுறையாகும்.

மன்னர் ஔரங்கஜீப் பள்ளிக்குத் தொழ வரும் வழியில் ஒருவர் யாசகம் கேட்க, "இங்கேயே இரு; வரும் போது கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனவர், நீண்ட நேர மாகியும் வராததால் யாசகம் கேட்டவர் பள்ளிக்கு உள்ளே எட்டிப் பார்க்கிறார். மன்னர் துஆ கேட்டுக் கொண்டிருந்தார்.

ஓஹோ! நீங்களே கேட்டுத் தான் வாங்குகிறீர்களா! அப்படி யெனில் நானும் அவனிடமே கேட்டு வாங்கிக் கொள்கிறேன் என்று அந்த இடத்தை விட்டு வேறிடத்தில் போய் அமர்ந்து இவரும் துஆ கேட்டுக் கொண்டிருந்தார்.

குறிப்பிட்ட இடத்தில் யாசகம் கேட்டவர் இல்லாத தால் அவர் வேறிடத்தில் இருப் பதைப் பார்த்து அங்கே போன போது மன்னரே! நீங்களே அல்லாஹ்விடத்தில் கேட்டு தான் வாங்குகிறீர்கள் என்ப தைப் பார்த்து நானும் அவ னிடமே கேட்டு வாங்கிக் கொள்ள இங்கு வந்து விட் டேன் என்றார்.

எனவே, துஆ பிரதானமான ஒன்று! உலக வாழ்க்கை, மறுமை வாழ்க்கை இரண்டை யும் மாற்றக்கூடிய ஆற்றலுள்ள அதனை முறைப்படி பயன்படுத்திக் கொள்வோமாக!

# காக்கும் கேடயம்

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

أَيَّامًا مَعْدُودَاتٍ

"குறிப்பிட்ட நாட்களில் தான் [நோன்பு நோற்பது கடமையாகும்.]"
- அல்குர்ஆன் (2 : 184)

நோன்பு என்பது பகல் முழுவதும் உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் ஆகியவற்றை மாண்புமிக்க அல்லாஹு தஆலாவுக்காக தூய்மையான எண்ணத்தோடு தவிர்த்துக் கொள்வதாகும். நோன்பு நோற்பதால் உள்ளத் தூய்மையும், பரிசுத்தமும் ஏற்படுகின்றன. நோன்பானது அற்ப குணங்களிலிருந்தும், தாழ்ந்த பண்புகளிலிருந்தும் உள்ளத்தை தூய்மைப்படுத்துகிறது.

இந்தச் சமுதாயத்தார் மீது மட்டுமின்றி முந்தைய சமுதாயங்களுக்கும் அது கடமையாக இருந்தது என்று திருகுர்ஆன் (2 : 183) தெரிவிக்கின்றது. ஆகவே இந்த முன்மாதிரியை கருத்தில் கொண்டு முந்தைய மக்களை விடவும் நிறைவான முறையில் இந்தச் சமுதாயத்தார் இக்கடமையை நிறைவேற்ற வேண்டுமென அல்லாஹ் விரும்புகிறான்.

மேலும் நோன்பால் உள்ளம் மட்டுமின்றி உடலும் தூய்மையடைகிறது. ஷைத்தானின் பாதைகள் மூடப்படுகின்றன.

இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் மாதந்தோறும் மூன்று நாட்கள் மக்கள் நோன்பு நோற்பார்கள். பின்னர் ரமளான் மாதம் முழுக்க நோன்பு நோற்க வேண்டும் எனும் கட்டளை பிறந்தது. அதை அடுத்து பழைய சட்டம் காலாவதியானது.

## புனித ரமளான்

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "பரக்கத் - அருள்வளம் உள்ள மாதமாக ரமளான் உங்களிடம் வந்து விட்டது. அதில் இறைவனின் கிருபை இறங்குகிறது; சிறு பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுகிறது; அந்த மாதத்தில் வணக்கங்கள் புரிய ஆர்வமுடன் போட்டி போடக் கூடியவர்களை இறைவன் உற்று நோக்குகிறான்.

எனவே, நீங்கள் (நல்லறங்கள் புரிந்து) உங்கள் ஆன்மாக்களுக்கு நன்மைகளை சேகரியுங்கள்.''

அறிவிப்பாளர் : ஹள்ரத் கஅப் பின் உஜ்ரா (ரளி) அவர்கள் (நூல் : ஹாகிம், தப்ரானீ)

அல்லாஹ் கூறுவதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (ஹதீஸ் குத்ஸீ ஒன்றில்) கூறினார்கள் : "நபி மூஸாவே! ரமளான் மாதம் வந்துவிட்டால் நோன்பாளிகள் பிரார்த்தனை செய்யும்போது ஆமீன் சொல்ல வேண்டும் என்று அர்ஷை சுமக்கும் வானவர்களுக்கு நான் கட்டளையிட்டுள்ளேன். நோன்பாளிகள் கேட்பதை வழங்க வேண்டும் என எனக்கு கடமையாக்கி கொண்டுள்ளேன்."

(நூல் : ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ)

"ரமளான் மாதம் குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். அந்தக் குர்ஆன் மக்களுக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது.''

- அல்குர்ஆன் (2 : 185)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"இப்ராஹீம் (அலை) அவர்களின் ஸுஹுஃபுகள் (ஏடுகள்) ரமளான் மாதம் முதல் இரவில் அருளப்பெற்றன. (நபி மூஸா அலை அவர்களது) தவ்ராத் வேதம் ரமளான் மாதம் ஆறாம் நாளில் அருளப்பெற்றது. (நபி ஈஸா - அலை அவர்களது) இன்ஜீல் வேதம் ரமளான் மாதம் பதின்மூன்றாம் இரவில் அருளப் பெற்றது.''

அறிவிப்பாளர்: ஹள்ரத் வாஸிலா பின் அல்அஸ்கஉ (ரளி) அவர்கள் (நூல்: முஸ்னத் அஹ்மத், அல்பிதாயா வந்நிஹாயா)

மாமேதை இப்னு ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "நபியூசுப்(அலை) அவர்களுடன் ரமளானை ஒப்பிடலாம். நபி யாகூப் (அலை) அவர்களுக்கு பனிரெண்டு ஆண்மக்கள் இருந்தது போன்றே ஒரு வருடத்துக்கு பனிரெண்டு மாதங்கள் உள்ளன. பனிரெண்டு ஆண் மக்களில் யூசுப் (அலை) அவர்கள் மட்டும்தான் தந்தைக்கு மிகவும் பிரியமானவர் களாக இருந்தார்கள். அது போன்று பனிரெண்டு மாதங்களில் ரமளான் மாதம் மட்டும் தான் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியத்திற்குரிய மாதமாகும். யாகூப் (அலை) அவர்களின் ஏனைய பதினோரு ஆண் மக்கள் செய்த குற்றங்களை யூசுப் (அலை) அவர்களின் பிரார்த்தனையால் அல்லாஹ் மன்னித்தது போல், தனது அடியார்கள் கடந்த பதினோரு மாதங்களாக செய்த பாவங்கள் அனைத்தையும் ரமளானின் (பரக்கத்தால்) அருள்வளத்தால் அம்மாதத்தில் அல்லாஹ் மன்னிக்கிறான்."

(நூல்: புஸ்தானுல் வாயிளீன்)

அஸ்ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ரமளானில்

(சொல்லும்) ஒரு தஸ்பீஹ் (சுப்ஹானல்லாஹ்) ஏனைய மாதங்களில் (சொல் லும்) ஆயிரம் தஸ்பீஹை விட மிகவும் சிறந்ததாகும்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ பிஷ்ர் (ரஹ்) அவர்கள் (நூல் : திர்மிதீ - 3384)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நோன்பு பொறுமையில் பாதியாகும்"

(நூல் : திர்மிதீ)

இதில் இரண்டு கருத்துகள் கொள்ளலாம்.

1) நோன்பு நோற்பது வழிபாடு சார்ந்த பொறுமையாகும். அது பொறுமையில் பாதி யாகும். பாவம் செய்யாமை மற்றும் சோதனைகளைத் தாங்கிக் கொள்வது அதன் மீதிப் பாதியாகும்.

2) வாய் மற்றும் இன உறுப்பை அடக்குவது பாதி பொறுமை யாகும். ஏனைய உறுப்பு களைக் கட்டுப்படுத்துவது அதன் மீதிப்பகுதியாகும்.

(நூல்: துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "வானவர் கள் நோன்பாளிகளுக்கு, அவர் கள் நோன்பு திறக்கும் வரையில் பாவமன்னிப்பு கோருகிறார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல்: முஸ்னது அஹ்மது, அல் பஸ்ஸார்)

வானவர்கள் அல்லாஹ்வின் மரியாதைக்கும், நெருக்கத் திற்கும் உரியவர்கள். அவர் களின் பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். அப்படிப்பட்ட வானவர்கள் நோன்பாளிகளுக்காக பாவ மன்னிப்பு கோரிட அல்லாஹ் அனுமதி கொடுத்திருப்பதன் நோக்கம், நோன்பாளிகளின் அந்தஸ்தைப் பிரகடனப்படுத்து வதும், அவர்களின் புகழை உயர்த்துவதும், அவர்கள் நோற்ற நோன்பின் சிறப்பை விளக்குவதுமேயாகும்.

## சொர்க்கச் சோலை

ஹள்ரத் முஆத் பின் அல் ஜபல் (ரளி) அவர்கள் கூறியதா வது : "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்று, (ஐவேளைத்) தொழுகைகளை நிறைவேற்றி, இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்த மனிதருக்குப் பாவ மன்னிப்பு அளிப்பது அல்லாஹ் வின் பொறுப்பாகாமல் இருப்ப தில்லை. அவர் அல்லாஹ்வின் பாதையில் புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத்) சென்றாலும், அல்லது பிறந்த மண்ணில் அவர் தங்கியிருந்தாலும் சரியே" என்று கூறினார்கள்.

(நூல் : திர்மிதீ - 2453)

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறியதாவது :

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **56 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ 'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

(மத்திய & மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

## கனிவான வேண்டுகோள்

மதுரை மாநகரில் 56 ஆண்டுகளாக அநாதை ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி, அரசுப் படிப்பு, தையல் பயிற்சி, மருத்துவ உதவி, 3 வேளை உணவு, தங்குமிடம் யாவும் இலவசமாக வழங்கி ஏராளமான மாணவிகளுடன் வெகு சிறப்பாக எமது நிறுவனம் சேவை செய்து வருகின்றது. அல்ஹம்து லில்லாஹ்!

ஆகவே, தங்களின் நன்கொடை/ஜகாத்/சதகா உதவிகளை

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

என்ற பெயரில் **DD / செக் / M.O.** மூலமாக மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்த உதவுமாறு அன்புடன் விழைகிறோம்.

**ICICI Bank : A/c No.601601081642**

**MADURAI K.K.NAGAR BRANCH**

**MICR Code : 625229006 ⋆ IFS Code : ICIC0006016**

இன்ஷா அல்லாஹ் வங்கியின் மூலம் பணம் அனுப்பி விட்டு தயவு செய்து தகவல் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

'அருமை நாயகம் (ஸல்) அவர்கள் "சொர்க்கத்தில் சில (கண்ணாடி) மேலறைகள் உள்ளன. அவற்றின் உட்பகுதியிலிருந்து வெளியேயும் வெளிப்பகுதியில் இருந்து உள்ளேயும் பார்க்க முடியும்" என்றார்கள். அப்போது ஒரு கிராமவாசி எழுந்து அண்ணலாரை நோக்கி, "நாயகமே! அவை யாருக்கு உரியவை?" என்று வினவினார். அதற்கு அண்ணலார், "இன்சொல் பேசி, அன்னதானம் வழங்கி, வழக்கமாக நோன்பு நோற்று, மக்களெல்லாம் உறங்கும் போது இரவில் (எழுந்து) அல்லாஹ்வை தொழுகின்றவருக்கு அவை உரியவை யாகும்" என்றார்கள்.

(நூல் : திர்மிதீ- 2450)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"யார் ஒரு நாள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியவராக நோன்பு நோற்பாரோ அல்லாஹ் நரகிலிருந்து அவரை தூரமாக்குவான். ஒரு பறவைக் குஞ்சு பறக்கத் துவங்கி வயோதிகமாகி மரணமடையும் வரை பறந்தால் எவ்வளவு தூரம் பறக்குமோ அவ்வளவு தூரத்தை ஏற்படுத்துவான்".

(நூல் : முஸ்னது அஹ்மது, ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ)

ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு, தொழுகையை கடைபிடித்து, ரமளானில் நோன்பு நோற்ற மனிதரைச் சொர்க்கத்தில் அனுமதிப்பது அல்லாஹ்வின் மீது கடமையாகிவிட்டது. அவர் இறைவழியில் அறப்போர் புரிந்தாலும் சரி; அல்லது அவர் பிறந்த பூமியில் உட்கார்ந்து கொண்டாலும் சரியே" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ-2790)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"நோன்பாளியின் தூக்கம் வணக்கமாகும். அவரின் மௌனம் தஸ்பீஹாகும். அவரின் செயல்கள் இரட்டிப்பு மடங்கு கூலிக்கு சொந்தமானவை, அவரின் துஆ அங்கீகரிக்கப்படும்; அவரின் குற்றங்கள் மன்னிக்கப்படும்".

(நூல்: ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ)

தல்ஹாபின்உபைதுல்லாஹ் (ரளி) அவர்கள் கூறியதாவது : பலீ எனும் இடத்தில் இரண்டு பேர் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து இஸ்லாத்தைத் தழுவினர்.

அவர்களில் ஒருவர் மற்றவரை விட கடினமாக உழைத்துப் பாடு படுபவராக இருந்தார். அந்தக் கடின உழைப்பாளி அறப்போர் புரிந்து வீரமரணமடைந்தார். இன்னொருவர் அவருக்குப் பின் ஓராண்டு வாழ்ந்தார். பின்னர் மரணமடைந்தார்.

ஒருநாள் நான் கனவு ஒன்று கண்டேன். (அதில்) அவ்விருவரும் சொர்க்கத்து வாசலுக்கு அருகில் இருப்ப தாகக் கண்டேன். அப்போது சொர்க்கத்திலிருந்து ஒருவர் வந்தார். அவ்விருவரில் இறுதி யாக இறந்தவருக்கு (சொர்க்கம் செல்ல) அனுமதியளித்தார். பின்னர் அவர் (வானவர்) மீண்டும் வெளியே வந்து, அறப் போரில் வீர மரணமடைந்தவ ருக்கு (சொர்க்கம் செல்ல) அனுமதியளித்தார்.

நான் காலையில் எழுந்ததும் கண்ட கனவை மக்களிடம் கூறலானேன். அதைக் கேட்ட மக்கள் வியப்புற்றனர். இத் தகவல் நபியவர்களுக்கு சென் றது. அப்போது நபியவர்கள், "எதனால் வியப்புறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்குத் தோழர்கள், "நாயகமே! இ(ந்த முதலாம)வர் அவ்விருவரில் கடின உழைப் பாளியாக இருந்தார். பிறகு அறப்போரிட்டு வீரமரண மடைந்தார். (எனினும்) கடைசி யாக இறந்த (இரண்டாம)வர் அவருக்கு முன்பாக சொர்க்கம் சென்று விட்டாரே (எனவே தான் வியப்புறுகிறோம்) என்றனர்.

அப்போது நபியவர்கள், "இவர் அவருக்குப் பின் ஓர் ஆண்டு வாழ்ந்தார் அல்லவா?" என்று வினவினார்கள். அதற்குத் தோழர்கள், "ஆம்! (உண்மைதான்)" என்றனர். நபியவர்கள், "இந்த ஓராண் டில் இரண்டாமவர் ரமளான் மாதத்தை அடைந்து நோன்பு நோற்றிருக்கிறார். மேலும் அந்த ஆண்டில் எத்தனையோ தொழுகைகளை (சஜ்தா) சிர வணக்கம் புரிந்து நிறைவேற்றி இருக்கிறாரே!" என்று கூறினார் கள். அதற்குத் தோழர்கள், "ஆமாம்" என்று கூறி ஆமோதித் தனர். அப்போது நபியவர்கள், "எனவே, அவ்விருவரிடையே வானத்திற்கும், பூமிக்கும் இடையேயுள்ள தூரத்தை விட அதிகமாக (தர வரிசையில்) இடைவெளி ஏற்பட்டுவிட்டது" என்று கூறினார்கள்.

நூல்: இப்னுமாஜா – 3915,
முஸ்னது அஹ்மத்,
இப்னுஹிப்பான்.

## பசி உணர்வை அறிய

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நபி தாவூது (அலை) அவர்கள் (நாடாளும் மன்னராக இருந்தும்

கூட தமது வாழ்நாளில்) ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்கும் பழக்கமுள்ளவராக வாழ்ந்துள்ளார்கள்."

(நூல் : புகாரீ -1976, முஸ்லிம் -2137)

மிஸ்ரு நாட்டின் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த நபி யூசுஃப் (அலை) அவர்கள் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் அதிகமதிகம் நோன்பு நோற்று வந்தார்கள். "நான் வயிறு நிரம்ப சாப்பிட்டுக் கொண்டிருந்தால் ஏழைகளை மறந்து விடுவேனல்லவா! பசித்து பழக்கப்பட்டால் தானே ஏழைகளின் பசிக் கொடுமைகள் எனக்குத் தெரியும்; அதனால் தான் அதிகம் நோன்பு நோற்கிறேன்" என்று காரணம் கூறுவார்கள்.' (நூல் : இஹ்யா)

நம்மை போன்று தானே பிறருக்கும் பசிக்கும், மற்ற தேவைகள் இருக்கும் என ஒவ்வொரு மனிதனையும் நோன்பு உணர வைக்கிறது.

## குற்றப் பரிகாரம்

ஹஜ்ஜின் போது இஹ்ராம் ஆடை அணிந்த நிலையில் செய்ய வேண்டிய கிரியைகள் செய்வதற்கு முன்னரே ஏதேனும் தங்கடத்தால் தலைமுடி இறக்கிவிட்டால் அதற்கு குற்றப்பரிகாரமாக மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும் என திருகுர்ஆன் (2:196) இயம்புகிறது.

சத்தியத்தை முறிப்பது பாவமாகும். அதற்கான பரிகாரம் பத்து ஏழைகளுக்கு உணவளித்தல்; அல்லது பத்து ஏழைகளுக்கு ஆடை அளித்தல்; அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்தல். இதற்கு சக்தி இல்லாதவர் (பொருளாதார பலமற்றவர்களுக்கான இறுதிப் பரிகாரமாக) மூன்று நாள் நோன்பு நோற்க வேண்டும் என திருகுர்ஆன் (5 : 89) சத்தியத்திற்கான குற்றப் பரிகாரத்தை சொல்லித் தருகிறது.

ஒரு மனிதன் தன் மனைவியுடன் உடலுறவு கொள்ள முயலும்போது அவனது மனைவி பிடிவாதமாக மறுத்து விடுகிறாள். அதனால் அவனுக்கு மிகுந்த ஆத்திரம் உண்டாகிறது. அவன் கோபத்தில் "இனி என்றும் உன்னுடன் சேர மாட்டேன்; நீ என் தாய் போலாகும்" என்று கூறி விட்டான். அவன் மனைவிக்கு (தலாக்) மணவிலக்கு கூறும் நோக்கத்தில் இதைக் கூறவில்லை. உடலுறவு கொள்ளமாட்டேன் என்னும் கருத்திலேயே இதைக்கூறினான். பின்னர் தன் செயலை நினைத்து வருந்துகிறான். இதைத்தான் இஸ்லாமிய மார்க்க சட்டத்தில் "ளிஹார்" என்று கூறப்படும்.

(தாய், உடன்பிறந்த சகோதரி போன்ற யாரைத் திருமணம் செய்வது கூடாதோ அத்தகைய

பான் கார்டு எண் : AABTI - 8324E **நெல்லை ஏர்வாடியில்** பதிவு எண் : 4/4/2020

# இம்தாதீ டிரஸ்ட் நடத்தும்
# அல்-ஜாமிவுல் அஸ்ஹர் அரபிக் கல்லூரி

காந்தி காலனி, **வள்ளியூர்.**

அலுவலகம் : 1–7/1, இம்தாதி நகர் 6வது தெரு, **ஏர்வாடி** - 627103. நெல்லை மாவட்டம்.

இம்தாதீ டிரஸ்ட் மூலம் ஐந்து ஆண்டுகளாக நடத்தப்படுகின்ற நம் அரபிக் கல்லூரி முதலாவது ஆண்டில் 18 மாணவர்களுக்கு பாழில் அஸ்ஹரி பட்டமும், ஒருவருக்கு ஹாஃபிழ் பட்டமும், இரண்டாம் ஆண்டில் 15 மாணவர்களுக்கும், 3வது – 4வது ஆண்டு சேர்த்து 40 மாணவர்களுக்கும் பாழில் அஸ்ஹரி பட்டம் வழங்கியுள்ளது. 5வது ஆண்டில் இன்ஷா அல்லாஹ் 41 மாணவர்கள் பாழில் அஸ்ஹரி பட்டம் பெறவுள்ளனர்.

கட்டிட வாடகை 13 ஆயிரம்; மின் கட்டணம் ஏறக்குறைய ஏழாயிரம்; ஒரு மாணவருக்கு 85 ரூபாய் தினசரி உணவு வகைக்கு செலவாகிறது. ஊழியர்களின் ஊதியங்களையும் சேர்த்து மாதம் இரண்டு இலட்சம் தேவைப்படுகிறது. மாணவர்களிடம் எந்தக் கட்டணமும் பெறாமல் செல்வச் சீமான்களான கொடை மனம் படைத்தவர்கள் வழங்கி வரும் சந்தா, நன்கொடை, நேர்ச்சை, ஹதியா, ஸதக்கா, ஜகாத் ஆகியவற்றை வைத்து சிரமத்துடன் நடத்தி வருகிறோம்.

6வது வருடத்திற்கு (2024–25) 35 மாணவர்களை சேர்க்க உள்ளோம். செலவினத்தைக் கவனித்து 35 மாணவர்களைவிட அதிகமாகச் சேர்க்க முடியவில்லை. ரமளான் விடுமுறைக்கு பின் ஷவ்வால் 15 (25.04.2024) 6வது வருட பாடங்கள் தொடங்கப்படவுள்ளன. தொடர்ந்து வாடகை கட்டிடத்தில் நடத்துவது சிரமமாக இருப்பதால் கட்டாயம் சொந்த இடமும், கட்டிடமும் தேவைப்படுகிறது.

தாங்கள் தரும் சிறிய தொகையும், முறையாக செலவழிக்கப்பட்டு வரவு, செலவுகளை திறந்த புத்தகமாக வைத்துள்ளோம். ரமளானில் உங்களுடைய ஜகாத், ஹதியாக்களை அதிகமாக எங்கள் கல்லூரியின் **வங்கிக் கணக்கில்** அல்லது **Google Pay நம்பரில்** போடவும் அல்லது எங்களின் வசூலகர் கத்தமல்லி K.M.A. நகர் ஷேக் சிக்கந்தரிடம் வழங்கி அல்லாஹ்வின் பேரருளைப் பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் ஒருவருக்கு மாதம் உணவுக்கு ரூ.2,550/– 35 மாணவர்களுக்கு தினசரி உணவு வகைக்கு ரூபாய் 2,975/– தாங்கள் உங்களின் பங்களிப்பிற்கு இதில் பொறுப்பேற்று மாணவர்களின் துஆவைப் பெறும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம். உங்களின் நாட்டம், தேட்டங்களைத் தெரிவித்தால் விசேஷ துஆவிற்கு ஏற்பாடு செய்யப்படும்.

---

தொடர்பு முகவரி : மவ்லானா 'அஷ்ரபுல் உலமா' அல்ஹாஜ் **P.அபுல்கலாம் ஆலிம் இம்தாதி ஹஸ்ரத்,**
நிறுவனர் & தலைவர், இம்தாதீ டிரஸ்ட், முதல்வர் A.J.A.அரபிக் கல்லூரி,
**Google Pay : 9865339670**

**Bank Details :**

**AL-JAMIUL AZHAR ARABIC COLLEGE A/c No.1054101030540**
**CANARA BANK, ERUVADI BRANCH, IFSC CODE : CNRB0001054**
**MICRO CODE : 627015026**

**குறிப்பு :** வங்கி மூலம் பணம் அனுப்புபவர்கள் அல்லது Google Pay மூலம் அனுப்புபவர்கள் தொலைபேசி மூலம் அல்லது மேலேயுள்ள நம்பரில் வாட்ஸப் மூலம் முகவரி தெரிவிக்கவும். இரசீது போட்டு அனுப்பப்படும்.

வருடன் தன் மனைவியை ஒப்பிடுதல் "ளிஹார்" எனப்படும். உடலுறவு கொள்வது கூடாது என்னும் எண்ணத்தில் கூறி னால் தான் "ளிஹார்" ஆகும். தாய் போல் அன்பாக இருக் கிறாய்... என் சகோதரி போன்ற ஜாடை இருக்கிறது என்றால் இது "ளிஹார்" ஆகாது.)

மனைவியுடன் "ளிஹார்" உடைய இந்த வாசகங்கள் கூறப்பட்டால் அதற்கு (கஃப் பாரா) குற்றப் பரிகாரம் உள்ளது. அதை நிறைவேற்றிய பின்பு தான் மனைவியுடன் உடலுறவு கொள்ள வேண்டும்.

இதன் (கஃப்பாரா) குற்றப் பரிகாரம் இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும். இது முடியா விட் டால் அறுபது ஏழைகளுக்கு ஒரு நாள் (இரு வேளை) உண வளிக்க வேண்டும். அல்லது ஓர் ஏழைக்கு தொடர்ந்து அறுபது நாட்களுக்கு உணவளிக்க வேண்டும். உணவளிப்பதற்கு பகரமாக உணவு தானியங் களும் வழங்கலாம். அளிக்க வேண்டிய உணவு தானியத்தின் அளவு (ஸதக்கத்துல் ஃபித்ரு) பெருநாள் தர்மத்தின் அளவா கும். ஒருவருக்கு அறுபது நாட் களின் உணவு தானியத்தை ஒரே நாளில் தருவது கூடாது.
(நூல் : குதூரி - பாபுல் ளிஹார்)

"ளிஹார்" உடைய இந்த சட்டத்தை திருகுர்ஆன் (58 : 2,3,4) அழகிய முறையில் எடுத்துரைக்கிறது.

ஹஜ்ஜின் கிரியைகளை முழுமைப்படுத்துவதற்கு முன்னரே தலைமுடி இறக்கிவிட் டாலோ, சத்தியத்தை முறித்து விட்டாலோ, மனைவியை "ளிஹார்" செய்து விட்டாலோ இது போன்ற குற்றங்களுக் கெல்லாம் நோன்பு நோற்பதன் மூலம் (கஃப்பாரா) நிவர்த்தி யாகும் என்கிறது இஸ்லாமியச் சட்டம்.

## அதிசயம் நிகழ்த்துவதற்கு...

நபி மூஸா (அலை) அவர் கள் அல்லாஹ்வை சந்தித்துப் பேசுவதற்கு ஆசைப்பட்டார் கள். அதற்கு அல்லாஹ் முப்பது நாட்கள் நோன்பு நோற்று வரவேண்டும் என்று அவர் களுக்கு கட்டளையிட்டான். அவ் வாறே முப்பது நாட்கள் நோன்பு நோற்று முடித்த நபி மூஸா (அலை) அவர்கள், மிஸ்வாக் குச்சியின் மூலம் வாயை சுத்தம் செய்துவிட்டு வந்த போது பல் துலக்காமல் நோன்பு வைத்த வாய் வாடையுடன் வரவேண்டும் என்பதற்காக மீண்டும் பத்து நோன்புகள் நோற்குமாறு அல்லாஹ் அவர் களுக்கு கட்டளையிட்டான். இவ்வாறுதான் திருகுர்ஆன் (7:142) எடுத்துரைக்கிறது.

அன்னை மர்யம் (அலை) அவர்கள் குழந்தை ஈஸாவை பெற்று எடுத்துக்கொண்டு மக்களுக்கு முன் வந்தபோது, கணவன் இல்லாமல் குழந்தை பெற்றுக் கொண்டது குறித்து மக்கள் கேள்விக்கு மேல்கேள்வி எழுப்பினர். எனவே தான் அவர் அன்றைய தினம்நோன்புநோற்க வேண்டும்; யாரிடமும் பேசக் கூடாது என கட்டளையிடப்பட்டார். அதன் மூலம் அவர் தமது பிரச்சனைக்கு தீர்வு காணலாம்; அவரது தூய்மைக்கான சான்று நிறுவப்படலாம் என்று அவருக்கு சொல்லப்பட்டிருந்தது.

மர்யம் (அலை) அவர்களும் வல்லமையும், மாண்பும் மிக்க அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து அவனது முடிவை ஏற்று அன்றைய பொழுது நோன்பு நோற்றார்கள். அந்த மக்கள் குழந்தை பிறப்பை பற்றி கேள்வி மேல் கேள்வி கேட்ட போதுதான் மர்யம் அவர்கள் எந்த பதிலும் சொல்லாமல் குழந்தையிடமே கேட்குமாறு சைகை செய்தார்கள். அவர்கள் வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே குழந்தை ஈஸா (அலை) அவர்கள் அதிசயமாக பேசினார்கள் என்று திருகுர்ஆன் (19 : 26-33) எடுத்துரைக்கிறது.

அன்னை மர்யம் (அலை) நோன்பு நோற்று பேசாதிருந்


"அல்லாஹ" தஆலாவும், அவன் மலக்குகளும் ஸஹர் சாப்பிடுவோரின் மீது அருள் புரிகின்றனர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் (நூல் : தர்கீப்)

**பாவா மெடிக்கல்ஸ்**

**53/4, பெரிய தெரு,**

**பட்டுக்கோட்டை-1.**

04373-254354; 253339; 99444 54354

ததால், இயற்கைக்கு மாறாக பேசமுடியாத பால்குடி பருவத்தில் குழந்தையாக இருந்த ஈஸா (அலை) அவர்கள், பேச வேண்டிய அனைத்தையும் பேசி தனது அன்னையின் கற்பொழுக்கத்தையும், அல்லாஹ்வின் வல்லமையையும் விவரித்தார்கள்.

நபி மூஸா (அலை) மற்றும் அன்னை மர்யம் (அலை) ஆகிய இருவரிடமும் அல்லாஹ் அங்கே ஓர் அதிசயத்தை நிகழ்த்துவதற்கு தனக்கு மிகவும் விருப்பமான வணக்கமாகத் திகழும் நோன்பு நோற்கவே கட்டளையிட்டுள்ளான்.

## பிறந்த நாளுக்குரிய வழிபாடு

ஹள்ரத் அபூகத்தாதா அல் அன்சாரி (ரளி) அவர்கள் கூறியதாவது : நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திங்கட்கிழமை நோன்பு நோற்பது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு "அன்று தான் நான் பிறந்தேன். அதில் தான் எனக்கு குர்ஆன் (முதன் முதலில்) அருளப் பெற்றது" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்லிம் - 2153)

அதாவது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தாம் பிறந்த நாளும் திங்கட்கிழமைதான்; மேலும் தான் இறைத்தூதராக அறிவிக்கப்பட்டு முதன்முதலில் திருகுர்ஆன் அருளப்பட்டதன் மூலம் அல்லாஹ்வுடன் நேரடி தொடர்பு ஏற்பட்ட மகிழ்ச்சிக்குரிய திருநாளும் திங்கட்கிழமைதான். ஆகவேதான் அண்ணலார், அன்றைய தினம் தாம் நோன்பு நோற்று அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆகவே (இரு பெருநாட்களைத் தவிர்த்து) நமது மகிழ்ச்சிக்குரிய நாட்களிலும், நமது வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்த நாட்களிலும் நோன்பு நோற்று அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதே மிக உயர்ந்த வழிபாடாகும்.

## கட்டுப்பாடுகள்

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நோன்பு (பாவங்களிலிருந்து காக்கும்) கேடயமாகும்.

அறிவிப்பாளர்:- ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம்-2117)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் நாளில் அருவருப்பாக (ஆபாசமாக)ப் பேசவேண்டாம்; கூச்சலிட்டு சச்சரவு செய்ய வேண்டாம். யாரேனும் அவரை ஏசினால் அல்லது வம்புக்கிழுத்தால் நான் நோன்பு நோற்றிருக்கிறேன் என்று அவர் கூறி விடட்டும்."

அறிவிப்பாளர்:- ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல் : முஸ்லிம்-2118)

# வாய் மணக்க
# தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

இச்சைகளும், மனதின் ஆர்வங்களும்மிகைத்துவிடுவதால்மனிதன்அல்லாஹ்வை அலட்சியப்படுத்துகிறான். அவன் விதித்துள்ள வரம்புகளைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. மனிதனை இவற்றிலிருந்து சீர்படுத்துவதற்காகவே அல்லாஹ் நோன்பு எனும் இறைவணக்கத்தை கடமையாக்கியுள்ளான்.

இன்ஷா அல்லாஹ்
அடுத்த இதழ்
ஈத் பெருநாள் சிறப்பிதழ்
படிக்கத் தவறாதீர்கள்!
குர்ஆனின் குரல் உங்கள் குடும்பத்தில் ஓர் அங்கம்

மனித மனதில் வலிமையோடு காணப்படுபவை; இச்சைகள், ஆர்வங்கள் ஆகும். இவை இயல்பாகவே உணர்ச்சிமயமானவை; கொந்தளிப்பு குணமுடையவை; ஆகையால் இவற்றை கட்டுப்படுத்த நோன்பின் மூலம் கடும் பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. இச்சைகளையும், ஆர்வங்களையும் வலு சேர்க்கின்ற விஷயங்கள் மீது நோன்பு ஏராளமான கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அதனால் மனிதனுடைய உணவும், உறக்கமும் குறைந்து விடுகின்றன. மற்ற இன்பங்கள், விருப்பங்கள் மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு விடுகின்றன. இதனால் ஏற்படுகின்ற தாக்கம் என்னவென்றால், மனோ இச்சைகளுடைய நாலுகால் பாய்ச்சல்கள் வெகுவாக குறைந்து விடுகின்றன. ஆன்மாவுக்கு தன்னுடைய விருப்பக் களத்தில் பாய்ந்து செல்ல வாய்ப்பு கிடைக்கிறது.

நோன்புடைய இந்த தனித்தன்மையை கவனத்தில் கொண்டு தான் தன்னோடு அதற்கு ஒரு தனிப்பட்ட தொடர்பு உண்டு என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

## அல்லாஹ்வின் மீதே சத்தியம் செய்க!

“எவர் சத்தியம் செய்ய விரும்புகிறாரோ அவர் அல்லாஹ்வின் மீதே தவிர (வேறெவர்மீதும்) சத்தியம் செய்ய வேண்டாம்” என்றுநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஏனெனில், குறைஷியர் தம் முன்னோர்கள் மீது சத்தியம் செய்து வந்தார்கள். ஆகவே நபி (ஸல்) அவர்கள், “உங்கள் முன்னோர்கள்மீது சத்தியம் செய்யாதீர்கள்” என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரீ : 3836)

தொலைபேசி : 04554-275289 செல் : 94861 49928

# முஹம்மதிய்யா எத்தீம்கானா

## அனாதை இல்லம்

**16B/11, கம்பம் மெட்டு ரோடு, கம்பம்-625 516.**
தேனி மாவட்டம்.

## அன்பான வேண்டுகோள்!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.....!

மர்ஹூம் அல்ஹாஜ் **C.A.முஹம்மது இப்ராஹீம்** (ரஹ்) M.A.,B.L., (அட்வகேட், சென்னை) அவர்களால் **முஹம்மதிய்யா எத்தீம்கானா** நிறுவப்பட்டு இறையருளால் 48 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இங்கு அனாதை ஏழை மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம், ஆடைகள், பள்ளிக் கட்டணம் மற்றும் எல்லா செலவுகளையும் நிர்வாகம் செய்து வருகிறது.

மேற்படி செலவுகளுக்கு உங்களுடைய ஜகாத், ஸதகாகளை கொடுத்து உதவி ஏழை அனாதை மாணவர்களை ஆதரித்து அல்லாஹ்விடம் சிறப்பான நற்கூலியை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

DD அல்லது செக் **"MUHAMMADIYA ORPHANAGE"** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

**வங்கி மூலம் செலுத்தும் விபரம் :**

**INDIAN OVERSEAS BANK**
**Cumbum Branch**
A/c No. **017601000003546**
IFSC : **IOBA 0000176**

இப்படிக்கு,
**M.முஹம்மத் ஹாலித்**
செயலாளர் :
**முஹம்மதிய்யா எத்தீம்கானா, கம்பம்.**

குறிப்பு : எத்தீம்கானாவிற்கு வசூல் செய்ய எவரையும் நியமிக்கவில்லை.

நோன்புக்கு தன்னுடைய கரங்களாலேயே வெகுமதி அளிப்பதாக அல்லாஹ் வாக்குறுதி கொடுத்துள்ளான். இஸ்லாம் விதியாக்கியுள்ள எல்லா இறை வணக்கங்களும் அல்லாஹ்வுக்கென்றே உள்ளவைதாம். ஆனாலும் மனிதன் நோன்பு வைத்து உலகத்தையும், உலக இன்பங்களையும் துறந்து விடுகிறான். இறைவனை நெருங்கவும், வானவர்களுடன் சேர்ந்து நிற்கவும், இணைந்து கொள்ளவும் பெரும் முயற்சி செய்கிறான். அம்முயற்சியில் கஷ்டங்களையும் சகித்துக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நோன்பைத் தவிரவேறுஎந்தஇறைவணக்கங்களிலும் பார்க்க முடியாது.

இச்சைகள், ஆர்வங்கள் போன்ற வாசல்களின் வழியே பாய்ந்து வரும் ஷைத்தானின் ஏவுகணைகள் மற்றும் ஈட்டிகளை எல்லாம் தடுக்கக் கூடிய ஆயுதமாக முஸ்லிமிடம் இருப்பது நோன்பேயாகும். இந்த அடிப்படையில் தான் மேற்கண்ட நபிமொழி நோன்பை கேடயமாக வர்ணிக்கிறது. நோன்பை ஒரு கேடயமாகபயன்படுத்துவது எப்படி? என்ற பயிற்சியும் நோன்பாளிக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. "யாரேனும் திட்டினால் வம்புச் சண்டைக்கு வந்தால் நான் நோன்பாளி என்று அவனிடம் சொல்லிவிட வேண்டும்" என்று நபிமொழி அறிவுறுத்துகிறது.

ஆன்மா, உள்ளம், உடல் ஆகியவற்றுக்கு ஏற்படும் நோய்களில் இருந்து காக்கும் கேடயமாக நோன்பு திகழ்கிறது. இதன் பயன்கள் கணக்கற்றவை. உடலின் உறுப்புகள் முறையாக இயங்கி ஆரோக்கியத்தைக் காப்பதிலும், உடலில் தேங்கியுள்ள கழிவுகளை கரைப்பதிலும், இடையூறு தருபவற்றை உண்பதைவிட்டும் ஆன்மாவை தடுப்பதிலும் இதற்கு பெரும் பங்குண்டு.

மாவீரன் நெப்போலியன் கூறினான். "எனது இராணுவத்தில் முஸ்லிம்கள் நிறைந்திருந்தால் என்னால் வெற்றிக் கனிகளை எளிதாகத் தட்டிப் பறிக்க முடியும். ஏனென்றால் நீண்ட நேரமாக உணவருந்தாமல், நீரருந்தாமல் இருக்கும் (நோன்பு என்ற) கட்டுப்பாடு அவர்களிடம் இருக்கிறது"

நோன்புடைய காலங்களில் உணவு விஷயத்தில் நடுநிலையை கடைபிடித்தால் இடையூறுகள் தருபவற்றை விட்டும் தடுத்துக் கொள்ளலாம். உபரியான தொழுகைகள் தொழ, திருகுர்ஆன் மற்றும் திக்ரு, தஸ்பீஹ்கள் ஓத என பற்பல இறைவணக்கங்களில் ஈடுபட இலகுவாகிவிடும். எனவே, ரமளான் மாதத்தில் முறையாக இறைவணக்கம் புரிந்து இறையருளைப் பெறுவோமாக!

# நோன்பு நோற்பது உடல் சார்ந்த இறைநம்பிக்கை!

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

“இறை நம்பிக்கை என்பது எழுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டதாகும்” என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (முஸ்லிம் 57)

எழுபது கிளைகளைக் கொண்ட இறைநம்பிக்கை முத்தான மூன்று விதங்களில் வகைப்படுத்தப்படுகிறது.

1. உள்ளம் சார்ந்த இறை நம்பிக்கை.
2. நாவு சார்ந்த இறை நம்பிக்கை.
3. உடல் சார்ந்த இறை நம்பிக்கை.

உள்ளம் சார்ந்த இறை நம்பிக்கைக்கு 24 கிளைகள். நாவு சார்ந்த இறை நம்பிக்கைக்கு 8 கிளைகள். உடல் சார்ந்த இறை நம்பிக்கைக்கு 38 கிளைகள். ஆக எழுபது கிளைகளாக இறை நம்பிக்கை விருட்சம் பெறுகிறது. இவற்றில் ஒன்று தான் புனித ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும் அடங்கும்.

இவற்றில், நோன்பு நோற்பது எந்த வகையைச் சார்ந்தது? எந்தக் கிளைகளினுள் அடங்கியுள்ளது? ஆம் நோன்பு நோற்பது மூன்றாவதாக இடம் பெற்ற உடல் சார்ந்த இறைநம்பிக்கையின் பட்டியலில் இடம் பெறுகிறது.

புனித ரமளானின் பகல் காலங்களில் முஸ்லிம்களின் உடல் சார்ந்த பகுதிகள் உண்ணாமலும், பருகாமலும், மனோ இச்சைகளை அனுபவிக்காமலும் தவமாய் தவமிருந்து இறைவனுக்காக நோன்பிருந்து உடல் ரீதியாக இறை நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

நோன்பு உடல் சார்ந்த இறை நம்பிக்கையின் ஓர் அங்கமாக இருப்பதால் அவரவர் உடல்நலம் சார்ந்து நோன்பு நோற்பதும், நோன்பை விடுவதும், அதை தற்காலிகமாகவிட்டுவிட்டுபிறகு வைப்பதும் அல்லது நிரந்தரமாக விடுவதும் போன்ற பலவிதமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

உள்ளம் சார்ந்த, நாவு சார்ந்த இறை நம்பிக்கையில் இத்தகைய மாறுபட்ட பலவிதமான நகர்வுகள் ஏற்பட வாய்ப்பு கிடையாது.

நோன்பு உடல் சார்ந்த வணக்கமும் கூட. வணக்கம் நான்கு விதங்களில் நிறைவேற்றப்படுகிறது.

1.உள்ளம் சார்ந்த வணக்கம்;
2.சொல் சார்ந்த வணக்கம்;

3.பொருள் சார்ந்த வணக்கம்; 4. உடல் சார்ந்த வணக்கம்.

உள்ளம் சார்ந்த வணக்கம் என்பது இக்லாஸ் மற்றும் நிய்யத் தாகும். மேலும் இறையச்சம் "தவக்குல்" அதாவது இறைவனை மட்டுமே சார்ந்திருப்பது, ஈமான் எனும் இறைநம்பிக்கை.

யகீன் எனும் இறைஉறுதி மேலும் உள்ளம் சார்ந்த இறைநம்பிக்கையில் இடம் பெற்ற 24 கிளைகள் கொண்ட வணக்க வழிபாடுகள் ஆகும்.

சொல் சார்ந்த வணக்கம் என்பது கலிமா தய்யிபா, துஆ, நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது, திருகுர்ஆன் ஓதுவது, பாவமன்னிப்பு தேடுவது, திக்ர் செய்வது, தஸ்பீஹ் ஓதுவது, கல்வி கற்பது, அதைக் கற்றுக் கொடுப்பது, ஒவ்வொரு செயலையும் ஆரம்பிக்கும் போது பிஸ்மில்லாஹ் கூறுவது, வீண் பேச்சுக்களை தவிர்ப்பது யாவும் அடங்கும்.

பொருள் சார்ந்த வணக்கம் என்பது அழகிய கடன், ஸதகா, ஸதகத்துல் ஜாரியா, ஜகாத், குடும்பத்தாருக்கு செலவு செய்வது யாவும் அடங்கும்.

உடல் சார்ந்த வணக்கம் என்பது தொழுகை, ஹஜ் மற்றும் நோன்பு, உறவுகளுடன் உறவாடி வாழ்வது. மேலும் உடல்சார்ந்த இறை நம்பிக்கை யில் இடம் பெற்ற அனைத்து செயல்பாடுகளும் வரும்.

இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், நோன்பு நோற்பது இறைநம்பிக்கை யின் முதல் படித்தரத்தை கடந்து, அது இறை வணக்கமா கவும் மாற்றம் பெறுகிறது.

அது உடல் சார்ந்த வணக்க மாகவும் உள்ளதால் நோய் போன்ற காரணங்களுக்காகவும், முதுமை போன்ற கஷ்டங் களுக்காகவும், பிரயாணம் போன்ற அசௌகரியங்களுக்கா கவும் நோன்பை தற்காலிகமாக விட்டு விடுவதற்கு இஸ்லாத் தில் அனுமதியும், சலுகையும் உண்டு. சிரமங்கள் நீங்கிய தும் விடுபட்ட நோன்புகளை நடப்பு ரமளான் நிறைவடைந்த பின் எதிர்வரும் ரமளானுக்குள் நிறைவேற்றிட வேண்டும்.

அவரவரின் உடல் அவருக்கு நன்றாக ஒத்துழைக்கும் நேரம் பார்த்து வசதி வாய்ப்பை பெற்று சீதோஷ்ண நிலையையும் கருத்தில் கொண்டு விடுபட்ட நோன்புகளை நோற்பதில் அவர் மீது எந்தத் தவறும் கிடையாது.

இஸ்லாம் மனிதன் தன் உடல் நலன்களை பேணிப் பாதுகாப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

இறைநம்பிக்கைக்குப் பிறகு செல்வங்களில் சிறந்த செல்வம் உடல் ஆரோக்கியமே என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

“நீங்கள் இறைவனிடம் மன்னிப்பையும், உடல் சுகத்தையும் கேளுங்கள்! ஏனெனில், இறைநம்பிக்கைக்குப் பிறகு உடல் சுகத்தைவிட சிறந்த வேறு பாக்கியம் யாருக்கும் வழங்கப் படவில்லை” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ, இப்னுமாஜா)

கஷ்டப்பட்டு ஒருவர் நோன்பு நோற்பதை இஸ்லாம் விரும்பவில்லை. நலமாக இஷ்டப்பட்டு நோன்பு நோற்பதைத்தான் இஸ்லாம் விரும்புகிறது.

சிறுவர்கள், வயது முதிர்ச்சி அடைந்தவர்கள், புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள், நீங்காத நோயுள்ளவர்கள் மீது இஸ்லாம் நோன்பு நோற்பதை கட்டாயப்படுத்தவில்லை.

82 கிலோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்பவர்கள், மாதவிலக்கு அல்லது பேறு கால உதிரப்போக்கு உடைய பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள், நோன்பு நோற்பதால் நோய் குணமாகுவது தாமதமாகலாம் என அஞ்சும் நோயாளிகள் ஆகியோர் நோன்பை தற்காலிகமாக விட்டு விட்டு பிறகு விடுபட்டதை பூர்த்தி செய்ய வேண்டும்.

தள்ளாத வயது, நீங்காத நோயுடையோர் நோன்பை நிரந்தரமாக விட்டு விடலாம். பின்பு இவர்கள் நோன்பு நோற்க வேண்டிய அவசியமில்லை. எனினும் விடுபட்ட ஒரு நாள் நோன்பு எனும் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும். தானியமாக இருந்தால் நாள் ஒன்றுக்கு 600 கிராம் வீதம் வழங்க வேண்டும்.

நோன்பை விடுபவர் பிரயாணியாக இருப்பார்; அல்லதுநோயாளியாகஇருப்பார்; அல்லது மாதவிலக்கு உடையவராக இருப்பார். நான்காம் நபரான ஷைத்தானின் உடன் பிறந்தவராக மாற மாட்டார்.

இறைநம்பிக்கை கொண்டாரே! உங்கள் முன்னோர்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் விதியாக்கப்பட்டிருக்கிறது. (அதனால்) நீங்கள் பரிசுத்தமானவர்களாகக் கூடும். (இவ்வாறு விதிக்கப் பெற்ற நோன்பு) சில குறிப்பிட்ட நாட்களில் (கடமையாகும்); ஆனால், (அந்நாட்களில்) எவரேனும் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் பின்னால் வரும் நாட்களில் நோற்க வேண்டும்; எனினும், (கடுமையான நோய், முதுமை போன்ற காரணங்களினால்) நோன்பு நோற்பதைக் கடினமாகக் காண்பவர்கள்

அதற்குப் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும்; எனினும், எவரேனும் தாமாகவே அதிகமாகக் கொடுக்கிறாரோ அது அவருக்கு நல்லது. நீங்கள் [நோன்பின் பலனை அறிந்தால்] நோற்பதே உங்களுக்கு நன்மையாகும்"
- அல்குர்ஆன் (2 : 183, 184)

நோன்புக்கு அரபியில் ஸவ்ம் என்பதாகும். இதற்கு தடுத்து நிறுத்துதல் என்று பொருள். வாயையும், வயிற்றையும், பாலின உறுப்பையும் உணவு, பானம், இச்சை ஆகியவற்றை விட்டும் தடுத்துக் கொள்வதுதான் நோன்பு என நாம் நினைப்பது முற்றிலும் தவறு. நோன்பு உடல் சார்ந்த வணக்கமாகவும், இறை நம்பிக்கையாகவும் இருப்பதால் உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் கட்டுப்பாடுடன் இருந்து, தேவையில்லாதவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.

## நோன்பின் ஒழுக்கங்கள் எட்டு

1. வயிற்றைப் பேணுதல்; 2. கண்களைப் பேணுதல்; 3. காதுகளைப் பேணுதல்; 4. மூக்கைப் பேணுதல்; 5. நாவைப் பேணுதல்; 6. கைகளைப் பேணுதல்; 7. கால்களைப் பேணுதல். 8. பாலுறுப்பைப் பேணுதல்.

ஆக ஒட்டுமொத்த உறுப்புகளையும் தடை செய்யப்பட்ட, அறுவெறுக்கத்தக்க, ஆபாசங்கள் நிறைந்த, அனாச்சாரங்கள் மிக்க, பாவமான செயல்பாடுகளிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

பசித்திருப்பது, தாகித்திருப்பது மட்டுமே நோன்பு அல்ல! தகாத காரியங்கள் யாவற்றைவிட்டும் உடலுறுப்புகளை பேணிப் பாதுகாப்பதுதான் உண்மையான நோன்பு என உத்தம நபி (ஸல்) அவர்கள் உவமை கூறுகிறார்கள்.

எத்தனையோ நோன்பாளிகள் அவர்களின் நோன்புகளிலிருந்து பசியையும், தாகத்தையும் தவிர வேறெது (கூலியு)ம் கிடைப்பதில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : தாரமீ)

சுருக்கமாகச் சொன்னால் நோன்பு என்பது பார்த்தறிதல், கேட்டறிதல், சுவைத்தறிதல், நுகர்ந்தறிதல், தொட்டறிதல் ஆகிய ஐம்புலன்களையும் அடக்கி ஆளுமை செலுத்துவது தான் உண்மையான நோன்பு.

நோன்பு உடல் சார்ந்த இறை நம்பிக்கையாகவும், இறை வணக்கமாகவும் அமைந்திருப்பதால் காரண காரியமின்றி விடுவது உடலுக்கு அழகல்ல! அது உடலுக்கு நரகின் பாதுகாப்பு கவசம்! உயிருக்கு உயர்வான கவசம்!

# பாபரி மஸ்ஜிதின் இடத்தில் இராமர் கோவில்

தொகுப்பு : செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை

மஸ்ஜித் என்பது இறையில்லமாகும். அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகள் நடைபெறும் இடமாகும். முஸ்லிம்களின் மிகவும் பரக்கத் பொருந்திய புண்ணியத்தலமும், இரவு பகலாக சர்வ வல்லமை மிக்க படைப்பாளனின் ஏகத்துவத்தை ஏற்று புகழ்பாடும்பூமியின்சிறந்த பகுதியும் பள்ளிவாசல்கள் ஆகும். ஹம்து எனும் இறை புகழும், திக்ரு எனும் இறை துதியும். தஹ்லீல் எனும் ஏகத்துவ முழக்கமும் மஸ்ஜிதின் எட்டுத்திக்கும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.

## இஸ்லாமியர்களின் ஏகோபித்த முடிவு :

உலகிலுள்ள அனைத்து மஸ்ஜிதுகளையும் கியாம நாள் வரை பாதுகாப்பதும், அவற்றை எக்காரணத்திற்காகவும் வேறு இடங்களுக்கு மாற்றாமல் இருப்பதும் அவசியமாகும்.

காரணம் : மஸ்ஜிதின் கீழே பூமி எவ்வளவு ஆழத்திற்கு செல்லுமோ அதுவரையும், மஸ்ஜிதிற்கு மேல் ஏழு வானம் வரை அது மஸ்ஜிதாகவே இருக்கும்.

ஈமான், இஸ்லாத்தின் பரக்கத்தை இழந்தவன். மேலும் குஃப்ர், ஷிர்கில் மூழ்கியிருப்பவனே மஸ்ஜிதை சேதப்படுத்துவது, அதனை இடிப்பது, அதன் புனிதத்தை கெடுப்பது போன்ற இழிசெயல்களில் ஈடுபடுவான். ஈமான் கொண்ட மக்கள் மஸ்ஜிதின் உருவாக்கம், அதன் வளர்ச்சிக்காக பாடுபடுவார்கள்.

இறைமறுப்பாளர்களும், இணைவைப்பாளர்களும் மஸ்ஜிதை அழிக்கும் சூழ்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

**“இன்னும், அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லித் துதிப்பதைத் தடுத்து, இவற்றைப் பாழாக்க முயல்பவனை விட, பெரிய கொடுமைக்காரன் யார் இருக்க முடியும்? இத்தகையோர் அச்சமுடனன்றி பள்ளிவாயில்களில் நுழைவதற்கு தகுதியே இல்லாதவர்கள்; இவர்களுக்கு இவ்(வுலக) வாழ்வில் இழிவு தான்; மேலும், மறுமையில் இவர்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு”**

- அல்குர்ஆன் (2:114)

தற்போது, ஒரு திட்டமிட்ட சதித்திட்டத்தின்கீழ், இந்திய முஸ்லிம்களை பல்வேறு பிரச்சனைகளில் சிக்க வைத்து, அவர்களின் கூட்டமைப்பை சிதறடித்து, அவர்களின் அதிகாரத்தை அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ந்து விஷமக் கருத்துக்களை கக்கி வருகின்றன.

இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகள், சட்டதிட்டங்கள் மற்றும் இஸ்லாத்தின் புனிதர்கள் பற்றிய சந்தேகங்கள் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் இஸ்லாத்தின் வளர்ச்சியை தடுப்பதற்கான முயற்சிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

புனித குர்ஆன் பிரதிகள் எரிக்கப்படுகின்றன. நாட்டில் பல மஸ்ஜிதுகள் இடிக்கப்படுகின்றன அல்லது முஸ்லிம்கள் அதில் தொழுகையை நடத்த விடாமல் தடுக்கப்படுகிறார்கள்.

இதன் ஒரே நோக்கம், இந்திய முஸ்லிம்கள் தங்கள் தனித்துவ அடையாளங்களை இழந்து, கங்கையை புனிதமாகக் கருதவும், ஜெய் ஸ்ரீ ராம் என்று கோஷமிட வும், இந்து மதத்தை தங்களின் தாய் மதமாக ஏற்று “கஹ்ர்வாப்ஸீ” என்ற பெயரில் மதம் மாறவும் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள்.

ஆனால், இந்திய முஸ்லிம்கள் தங்களின் ஈமானையும், மார்க்கத்தையும் பாதுகாக்க அனைத்து வகையான தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

அவர்களை எந்த சக்தியாலும், எவ்வளவு விலை கொடுத்தாலும் இஸ்லாத்திலிருந்து வெளியேற்ற முடியாது.

ஏனெனில், வரலாற்றில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்திய முஸ்லிம்கள் தங்களின் மத, வழிபாட்டு சுதந்திரத்திற்காக உறுதியான ஈமானோடு இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளுக்கு எதிராகப் போராடியுள்ளனர்.

இந்த நம்பிக்கையின் காரணமாகவே இந்திய முஸ்லிம்கள் இதுவரை தங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

மேலும், ஆயிரம் எதிர்ப்புகள் இருந்தாலும், அவர்கள் தங்களின் மார்க்கம், கலாச்சாரம் நாகரீகத்தை பாதுகாப்பதில் மும்முரமாக உள்ளனர்.

## ஜனநாயகம் தகர்க்கப்பட்ட தினம்

டிசம்பர் 6 இந்திய முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத நாளாகும். இதே தினத்தில் தான் 1992ஆம் ஆண்டு உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி நிலத்தில் கட்டப்பட்ட ஐநூறு ஆண்டுகளைக் கடந்த வர

லாற்று சிறப்புமிக்க பாபரி மஸ்ஜித், மதவெறி கொண்ட தேச விரோத பாசிஸ சக்திகளால் திட்டமிட்டு இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து,

இஸ்லாமியர்களின் உயிர், உடைமைகள், மானம், மரியாதை ஆகியவற்றின் மீது அநியாயமாக தாக்குதல்கள் நடந்த போது, அன்றைய அரசும், நிர்வாகமும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குறைந்த பட்சம் வருத்தம் கூட தெரிவிக்காமல் மௌனம் காத்தன.

இத்தகைய நியாயமற்ற போக்கை ஒரு நீதியான ஆட்சியாளரிடம் பார்க்க முடியாது. கொடுங்கோலன், கிளர்ச்சியாளன், கலகக்காரன், மதவெறி மற்றும் பொறாமை கொண்ட ஆட்சியாளன் தான் இப்படி நடந்து கொள்வான்.

இந்த வெளிப்படையான அநீதி மற்றும் ஒடுக்குமுறைக்குப் பின்னால் பெரும்பான்மையினராக உள்ள இந்துக்கள் அதன் கூட்டு ஆற்றலுடன் சிறுபான்மையினரான முஸ்லிம்களை ஒரு முறையேனும் தாக்கி கட்டாயப்படுத்திடவும், ஆதரவற்றவர்களாகவும் ஆக்கிட வேண்டும் என்ற சிந்தனையும் நாடெங்கிலும் பரவியது.

மேலும் இங்கு மீண்டும் தலை தூக்க முடியாத அளவுக்கு அவர்களை நசுக்கி, மற்ற இடங்களிலும் அநீதிக்கு எதிராக குரல் எழுப்பினால், அதே கொடுமை தான் என்ற செய்தியை நாட்டின் சிறுபான்மையினருக்கு பகிரங்கமாகவே எச்சரிக்கப்பட்டது. அங்கேயும் வற்புறுத்துவது, அடக்குமுறைக்கு ஆளாக்குவது என்பது தொடர் கதையானது.

கலவரக்காரர்களை தடுக்கவோ, அநீதமிழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவோ எந்த அரசாங்கமும் முன்வரவில்லை.

இந்நாட்டின் இந்துக்கள் வந்தேறிகள் அல்லர் என்றும், முஹம்மது பின் காசிம், சுல்தான் மஹ்மூத் கஸ்னவி, ஷஹாபுதீன் கோரி, ஹுமாயூன், ஜஹீருதீன் பாபர், ஔரங்கஜீப் ஆலம்கீர் போன்றவர்களே வந்தேறிகள் என்றும், இந்நாட்டின் மீது அவர்கள் படையெடுத்தார்கள் என்றும், இவர்களை வரலாற்றுப் புத்தகங்களில் தீவிரவாதிகளாக சித்தரிக்கவும் சங்கிகள் விரும்புகிறார்கள். அதனால் இவர்கள் கோவில்களை இடித்து மஸ்ஜிதுகளை கட்டினார்கள் என்கிற கட்டுக்கதையை திணிக்கவும் முயற்சிக்கின்றனர்.

ராஜா தஹார், பிருத்விராஜ், சிவாஜி போன்ற இந்துமன்னர்களை நமது தேச நாயகர்களாகவும், திப்புசுல்தான், ஔரங்கஜீப் போன்ற முஸ்லிம் மன்னர்களை தேசவிரோதிகளாகவும் சித்தரித்து வரலாற்றை மாற்றி எழுதிவிட்டனர்.

சிறுபான்மையினருக்கு அரசமைப்புச்சட்டத்தில் அளிக்கப்

Reg No : 25/13

# ஜனாப் அப்துற் ரஹ்மான் ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லம்

**Run by: Attheen Educational and Charitable Trust**

**குறிஞ்சி நகர், மேலமெஞ்ஞானபுரம். தென்காசி - 627814.**

சமுதாயப் பெரியோர்களே ! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.....

வயோதிகத்தின் காரணத்தால் ஆதரவற்ற நிலையிலுள்ள நமது இஸ்லாமிய முதியவர்கள் மாற்று மத மடங்களில் தஞ்சமடைந்து தமது ஈமானை இழக்கக்கூடிய பேராபத்தில் இருக்கிறார்கள். அவர்களின் ஈமானையும், இஸ்லாத்தையும் பாதுகாக்கும் விதமாக இருபாலருக்கும் கடந்த 2017–ம் ஆண்டு முதல் தென்காசி மாவட்டம் மேலமெஞ்ஞான புரத்தில் வாடகைக் கட்டிடத்தில் **அத்தீன் கல்வி மற்றும் சமூகத் தொண்டு நிறுவனத்தின் மூலம்** (Reg 25/13), இயங்கி வரும் **ஜனாப் அப்துற் ரஹ்மான் ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லம்** தற்போது தென்காசி மாவட்டம் வீரசிகாமணி என்ற ஊரில் புதிதாக இடம் வாங்கப்பட்டு கட்டடம் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது. தென்காசி வட்டார ஜமாஅத்துல் உலமா சபையின் ஆதரவு பெற்ற மேற்கண்ட இல்லத்திற்கு உங்கள் ஜகாத், ஸதகாக்களை தாராளமாகத் தந்து இஸ்லாமிய ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களின் ஈமானைப் பாதுகாக்க உதவுவீர்களாக.

attheen trust

Karur Vysya Bank 3674

UPI ID: attheen25@oksbi >

Scan this code to pay me

இப்படிக்கு :

மவ்லவீ **M.S.முஹம்மது நூஹ்** காஷிஃபீ தேவ்பந்தீ

தொடர்புக்கு : 9994838798, 7904838713

மேலும் பார்க்க :
www.attheen.online

**CSR NO : 00046960**

குறிப்பு : நீங்கள் தரும் சதகா ஜகாத்துகளுக்கு *80 G* சட்டப்படி வரி விலக்கு உண்டு.

வங்கி விபரம் : KARUR VYSYA BANK

**ATTHEEN EDUCATIONAL AND CHARITABLE TRUST**

வங்கி கணக்கு எண் : A/C No. **1273115000003674**

IFSC – KVBL0001273 Branch – Tenkasi

உணவு, மருத்துவம், ஊழியர்களின் சம்பளங்கள், மின் கட்டணம், மராமத்துப் பணிகள், அலுவலகச் செலவினங்கள் இன்னும் பல செலவுகள் முதியோர் ஒருவருக்கு மாதம் ரூ.5,000/– வீதம் 8 நபருக்கு 40,000/– வரை செலவாகிறது.

புனிதமிக்க ஈமானியப்பணி தொய்வின்றி தொடர **தங்களது ஜகாத், ஸதகா, தான தர்மங்களை நன்கொடையாகவும், மாதம்/வருடச் சந்தாக்களாகவும் வழங்குவீர்கள்** என்று பெரிதும் ஆதரவு வைக்கின்றோம்.

பட்டுள்ள பாதுகாப்பையும், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்களின் சலுகைகளையும் ஒழித்து, பெரும்பான்மையினரின் வழிமுறைகள் எதுவோ அவற்றையே கடைபிடிக்கவேண்டும்என்கிறதிட்டத்தையும்மதச்சார்பற்றஇந்தியாவை இந்து ராஷ்டிரா நாடாக மாற்ற வேண்டும் என்கிற திட்டத்தையும்தீட்டிமுழுவீச்சில் அவற்றை செயல்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

## நீதி குழித்தோண்டி புதைக்கப்பட்ட தினம்

இந்திய இஸ்லாமிய சமூகம் நீதிமன்ற தீர்ப்பு தமக்கு சாதகமாக வரும் என்று 27 வருட சட்டப் போராட்டத்தின் எதிர்பார்ப்புகளுக்கு இடையில் பாபரி மஸ்ஜித் தீர்ப்பு,பாசிஸ மதவாதிகள் எழுதிக் கொடுத்ததை வாசித்ததைப் போல இருந்தது. “இடித்தவர்களுக்கே இடம் சொந்தம்” என்கிற தீர்ப்பு பேரிடியாக வந்தது.

## பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோவில்

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் கடந்த ஜனவரி 22ஆம் தேதி இந்தியப் பிரதமரின்தலைமையில்பாபரிமஸ்ஜித் இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோவில் திறப்பு விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டது.

இதற்காக பல்வேறு பிரபலங்கள், பக்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் வாக்குறுதியில் பாரதீய ஜனதா, ராமர் கோவிலை அயோத்தியில் கட்டித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தது. அதே போன்று கடந்த 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலிலும் பாரதீய ஜனதா, இராமர் கோவில் விவகாரத்தை வைத்து பிரச்சாரம் நடத்தி இருந்தது.

அதே சமயம் தொடர்ந்து பாரதீய ஜனதா இரண்டு முறை மத்தியில் ஆட்சியைப் பிடித்திருக்கும் நிலையில், இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கிற நிலையில், அயோத்தியில் ராமர் கோவில் திறக்கப்பட்டது. கோவில் வேலைகள் முழுமையாக முற்றுப்பெறாத நிலையில், பாரதீய ஜனதா அரசு தேர்தலை காரணம் காட்டி முன் கூட்டியே கோவிலை திறப்பதாகவும், இது அரசியல் செயல் திட்டம் எனவும் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளன.

மீண்டும் இவர்கள் ஆட்சியில் அமர்ந்தால் இந்தியாவை "இந்து ராஷ்டிரா" என அறிவித்து விடுவார்கள்.

இந்தியாவை "இந்து ராஷ்டிரா" என அறிவித்து விட்டால் இங்கே இஸ்லாமியர்களின் நிலை என்ன?

இதற்கான பதில்!

ஹள்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) அவர்கள் தங்களின் "தஃப்ஹீமாத்" எனும் நூலில் எழுதுகிறார்கள்:

**நான் உறுதியாக கூறுவேன்; எப்பொழுது இந்தியா இந்துத்துவா வாதிகளின் ஆளுகையின் கீழ் செல்லுமோ அப்பொழுது அல்லாஹ்வின் நாட்டப்படி அதிகார வர்க்கத்தினரும், ஆட்சியாளரும் இஸ்லாத்தை ஏற்கும் நிலை ஏற்படும். அப்பொழுது இந்தியா இஸ்லாமிய நாடாக மாறும்.**

**காரணம் : வரலாற்றில் துருக்கி ஆதிக்க சக்திகளின் ஆளுகைக்குக் கீழ் சென்றதற்குப் பின்னால்தான் இஸ்லாமிய நாடாக மாறியது.**

**பொதுவாகவே ஹள்ரத் முஹம்மது நபி [ஸல்] அவர்களின் உம்மத்திற்கு வெற்றிக்கு முன்னால் சோதனை வரும்.**

அல்லாஹ் இந்த சோதனையான கால கட்டத்தில் நம் சமுதாய மக்களுக்கும், இஸ்லாமிய அடையாளச் சின்னங்களுக்கும் பாதுகாப்பை தந்தருள்வானாக!

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

தொடர்-10

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## நான் ஒரு முஸ்லிம்!

அபூயஜீதுல் புஸ்தாமி அவர்கள் மலைச் சரிவில் அமர்ந்து மனதில் எழும் கேள்விகளுக்கெல்லாம் விடை காண முயன்றார்கள். அந்த முயற்சியில் மூழ்கியிருந்த அவர்களுக்கு காற்றும், மழையும், கடுமையான கதிரவனின் கனலும், இருளும், ஒளியும் ஒன்றாகவே தெரிந்தன. தவத்தின் உச்சக்கட்டத்தை நெருங்கிய போது பசி அவர்களை அலைக்கழித்தது. ஒரு நாள் பசியல்ல. இரண்டு நாள் பசியல்ல. பதினைந்து நாட்கள் பசியோடு இருந்து தவமிருந்த அவர்கள், பசியின் தாக்கத்தால் பலமிழந்து சாய்ந்தார்கள்.

விழிகள் பஞ்சடைந்தன. செவிகள் ஒளியேற்கும் தன்மையை இழந்தன. இதனால் தட்டுத் தடுமாறி தள்ளாடி நடந்தார்கள். தடுமாறி விழுந்தார்கள். முடிவில் ஒரு வீட்டு வாயிலில் வந்து கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தார் வீட்டுக்காரர்!

“பசிக்கிறது ஏதேனும் உணவு தருகிறீர்களா?” என்று கேட்டார்கள் அபூயஜீ துல் புஸ்தாமி! “தருகிறேன்” என்று சொல்லி விட்டு உள்ளே சென்ற வீட்டுச் சொந்தக்காரர், மூன்று ரொட்டியை பெரியாரிடம் கொண்டு வந்து கொடுத்தார். அந்த வீட்டு வாயிலில் படுத்திருந்த நாய், அபூயஜீதுல் புஸ்தாமி அவர்களைப் பார்த்து குரைத்தது. இறைநேசரை படி இறங்கவிடாமல் தடுத்தது. உடனே பெரியார் அவர்கள், “நாயே! ஏன் குரைக்கிறாய்? பசிக்கிறதா உனக்கும்? பரவாயில்லை” என்று சொல்லி விட்டு ஒரு ரொட்டியை நாயிடம் போட்டார்கள். அந்த நாய் அதை தின்றுவிட்டு குரைத்தது. இன்னொரு ரொட்டியையும் போட்டார்கள். அந்த நாய் அதையும் தின்று விட்டு குரைத்தது. எனவே அந்த மூன்றாவது ரொட்டியையும் அந்த நாயிடமே போட்டார்கள் பெரியார் புஸ்தாமி அவர்கள். நாய் அதையும் தின்று விட்டு குரைத்தது; முறைத்தது. உடனே பெரியார் அவர்கள், “நாயே! உன் புத்தியைக் காட்டி விட்டாயே! இருந்த மூன்று ரொட்டிகளையும் உனக்கே போட்டுவிட்டேன். இன்னும் ஏன் குரைக்கிறாய்?” என்று கேட்டார்கள். நாய் தன் தலையை உயர்த்திப் பார்த்து விட்டுச் சொன்னதை இறையருளால்

அவர்கள் அறிந்து கொண்டார்கள். "பெரியாரே! என்னைப் பார்த்தா குறை சொல்கிறீர்? உம்முடைய புத்தியைப் பார்த்து நானல்லவா வியப்படைகிறேன். நான் இந்த வீட்டின் காவல் நாய்! வீட்டுக்காரர்கள் உணவு போட்டால் உண்பேன். போடாவிட்டாலும் பொறுமையாக இருப்பேன்.

எனினும் இந்த வீட்டை விட்டு நான் நகர மாட்டேன். ஆனால் நீரோ இறைவனிடம் நெருக்கம் பெற தவமிருந்தீர். இடையில் வந்த பசி தாளாமல் இறைவனுடைய வாயிலை விட்டுவிட்டு அவனுடைய அடியானின் வாயிலுக்கு வந்துவிட்டீர். இப்பொழுது சொல்லுங்கள் நான் புத்தி கெட்டிருக்கிறேனா? அல்லது நீங்களா?" என்று நாய் கேட்பதாக இறைவன் அறிவித்துக் கொடுத்தான். "நாயே! நல்ல பாடம் தந்தாய். இறைவா! உனக்கு நன்றிகள் கோடி" என்று கூறிவிட்டு, அந்த வீட்டிலிருந்து வெளியேறினார்கள். இது அவர்களுடைய பயிற்சியின் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்.

## இறைவன் தருகின்றான்

ஒரு நாள் பல்குப் பேரரசர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் வேட்டையாடுவதற்காக காட்டுக்குச் சென்றார்கள்.

நண்பகல் வரை வேட்டை எதுவும் கிடைக்காததால் தாம் கொண்டு வந்திருந்த உணவை உண்பதற்காக ஒரு மரத்தடியில் அமர்ந்து உண்ண ஆரம்பித்தார்கள். உணவை அவர்கள் எடுத்து வைத்ததும், எங்கிருந்தோ வந்த காகம் ஒன்று அவர்கள் உண்ண வைத்திருந்த ரொட்டித் துண்டைத் தூக்கிக் கொண்டு பறந்தது.

இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களுக்கு காகத்தின் செயல் ஆச்சரியமாக இருந்தது. இயற்கையிலேயே பயந்த சுபாவமுடைய காகம் இவ்வளவு துணிச்சலாக வந்து இந்த ரொட்டியைத் தூக்கிச் செல்வதில் ஏதோ ஓர் இரகசியம் அடங்கியுள்ளதாக எண்ணினார்கள்.

எனவே, தம்முடைய குதிரையின் மீதேறி அந்த காகத்தைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் பார்வையில் படும் வண்ணம் பறந்து சென்ற அக்காகம், வெகுதூரம் சென்றபின் ஓரிடத்தில் பாதையோரத்தில் கைகளும், கால்களும் கட்டப்பட்டுக் கிடந்த ஒரு மனிதருடைய வாயில் அந்த ரொட்டித் துண்டைக் கொண்டு போய் வைத்தது. இதைக் கண்டதும் அரசரின் ஆச்சரியம் பன்மடங்காகப் பெருகியது.

அம்மனிதனின் அருகே சென்று அவனுடைய கட்டுக்களையெல்லாம் அவிழ்த்துவிட்டு, "நீ ஏன் இப்படிக் கட்டப்பட்டுக் கிடக்கிறாய்?" என்று வினவினார்கள்.

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)


என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

THE QURAN
A GUIDANCE FOR MANKIND

## அன்பான வேண்டுகோள்

# இஸ்லாமிக் செண்டர் வேலூர்

இறையருளால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்காக 1978–ஆம் ஆண்டு முதல் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தனித்துவம் வாய்ந்த சிறந்த கல்வி நிறுவனம் **இஸ்லாமிக் செண்டர்.**

இஸ்லாமிக் செண்டரின் பணிகள்பற்றி ஒவ்வொரு ஆண்டும் பத்திரிகை விளம்பரம் மூலமாக தாங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள்,

எனவே, இப்பணிகள் தொடர்ந்து நடைபெறவும், விலைவாசி உயர்வை கருத்தில்கொண்டும் **இஸ்லாமிக் செண்டரை** மறந்துவிடாமல், இந்த ஆண்டும் தங்களின் ஜகாத் மற்றும் நன்கொடை களை எங்களுக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**BANK DETAILS :**
**Union Bank of India Vellore Branch**
**A/c No : 33300 10100 19006**
**IFSC : UBIN0533301**

Address for Correspondence :

**ISLAMIC CENTRE,**
**# 19/4, Madar Saheb Street, R.N. Palayam,**
**Vellore - 632001. (Vellore Dist. Tamilnadu)**
தொடர்புக்கு : Cell : **9500190520** Ph : **0416-2223825**

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் அளப்பெரும் பேரருளால்...

புனிதமிகு ரமளான் மாதத்தில்

# மதுரை J.M.S. அரபு கல்லூரியில்

## நோன்பாளிகளுக்கு உணவூட்ட ஒரு நல்ல வாய்ப்பு!

ஒரு நாள் நோன்புக் கஞ்சிக்கு.............. ரூ. 3,500/-

இரவு நாஷ்டா நாள் ஒன்றுக்கு.......... ரூ. 3,500/-

கோழி, மீன் அல்லது ஆட்டிறைச்சியுடன்

ஸஹர் உணவு நாள் ஒன்றுக்கு......... ரூ. 8,000/-

அன்பு கூர்ந்து இதன்படி... ஒரு முழு நாளுக்காவது புனித ரமளானில் நோன்பாளிகளுக்கு வழங்கி, பொன்னான நன்மைகளை அளவின்றிப் பெற்றிட அன்போடு வேண்டுகிறோம். – நிர்வாகக் குழு

தங்களின் மேலான உதவிகளை "AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST RICE FUND" எனும் பெயரில் மதுரை இந்தியன் வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code : 1437) எங்கள் கணக்கு எண். 411322239 (IFSC Code : IDIB000K136) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

J M S

## J.M.S. ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road, MADURAI - 625020.

மொபைல் எண்கள் : 94430 66539, 94860 17570

# மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோர்களுக்காக) மேல்விஷாரம்

★ அல்ஹம்துலில்லாஹ்! 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது நாழிரா, ஹிஃப்ழு, ஜுஃம்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

★ மதரஸாவில் 100 மாணவர்கள் 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்) இதுவரை சுமார் 31 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

★ ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில்

★ சுமார் 900 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர் ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

★ மதரஸாவில் 20 ஆசிரியர்கள் மற்றும் 11 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

★ மதரஸாவிற்காக சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. தற்காலிக கட்டிடத்தில் தான் (Sheet Hall) மதரஸா செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்களுக்கு மழை, வெயில், குளிருக்கான போதிய வசதிகள் இல்லை.

★ அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும், மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்து வம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

**கனிவான வேண்டுகோள் :** மதரஸாவின் வருடாந்திர, மாதாந்திர, வாராந்திர மற்றும் தினசரி செலவுகளில் தங்களின் (நன்கொடை, ஸதகா, ஜகாத், ஸதகத்துல் ஜாரியாவை) கொண்டு பங்கெடுத்துக் கொள்ளவும். ஜஸாக்கல்லாஹு கைரா.

SBI

BHIM | UPI

For Online Transations

Please Share the
Name, Contact Number & Address (Mandatory)
For Further Enquiries : +91-9952120340

**A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**STATE BANK OF INDIA**
CURRENT ACCOUNT NO : 35612371063
Melvisharam Branch Code : 3783
IFSC : SBIN0003783

**INDIAN BANK**
CURRENT ACCOUNT NO : 6288904753
Melvisharam Branch Code : 1312
IFSC : IDIB000M139

G Pay PhonePe
UPI ID :
imdadiyaeducationalct@sbi

## மதரஸாவின் கல்வி பிரிவுகளின் முழு விளக்கம்

| பிரிவுகள் | மாணவர்கள் | மாணவிகள் | பார்வை அற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நாழிரா | 26 | 20 | 14 | 46 |
| ஹிப்ழு | 43 | 70 | 26 | 113 |
| ஜும்ரா | 29 | 12 | 10 | 41 |
| கிராஅத் | 28 | மக்தப் 20 | 10 | 20 |
| | | | மொத்தம் | 220 |

## உலகக் கல்வி

| | | | | |
|---|---|---|---|---|
| 10th | 27 | 89 | 13 | 116 |
| 12th | 05 | 02 | 02 | 07 |
| கல்லூரி | 12 | - | 02 | 12 |

## செலவினங்கள்

| | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,500 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 66,000 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 6,60,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 79,20,000 |
| மதரஸாவின் கடன் | 10,00,000 |

## பட்டம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| மொத்த ஹாபிழ்கள் | 30 |
| மொத்த உலமாக்கள் | 17 |
| மொத்த ஹாபிழாக்கள் | 100 |

**By the Grace of Almighty we got 12A & 80G Certificate**

**THE DONOR'S CAN PAY**

Registered under section 12AA of the Income Tax Act,1961 as per
Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499

This Donation is Eligible for Deduction U/s. 80G of Income Tax Act. 1961
Vide U.R.No. AABTI2052FF20241 Dated : 09/02/2024

**In Imdadiya Educational & Charitable Trust**

நமது நிறுவனம் 12A மற்றும் 80G வரி விலக்கு சான்றிதழ் பெற்றுள்ளது. 80G – யை பயன்படுத்தி நன்கொடை செலுத்த மற்றும் இது தொடர்பான மேலும் தகவல்களுக்கு நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும் **+91–9952120340**


اَلْمَدْرَسَةُ الْاِمْدَادِيَّةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيْلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْدْ

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**

539,Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509

E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org

Contact : +91-9952120340 Telephone : 04172 268500

Regd. No:59/2014
Estd: 1431-H/2010

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் அளப்பெரும் பேரருளால்.....

**புனிதமிகு ரமளானை முன்னிட்டு**

# அள்ளி வழங்கி

# ஆதரவு தாருங்கள்!

கடந்த 40 ஆண்டுகளாய் இச்சமுதாயத்தின் கல்விப் பணிக்காக கண்ணியமாக உழைத்து, சமுதாயத்தின் வருங்காலத் தலைவர்களை ஒழுக்கமிக்கவர்களாக – சன்மார்க்கப் பேரறிவும், உயர்ந்த உலகியல் கல்வியும் பெற்றவர்களாக – உருவாக்கித் தந்திருக்கிறது.....

உங்களின்

**"அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா"** எனும்

**மதுரை J.M.S.அரபு கல்லூரி.....!**

**வரும் புனிதமிகு ரமளான் மாதத்தில் ஜகாத், ஸதகா, நன்கொடைகளை அள்ளி வழங்கி அதிக நன்மைகளைப் பெற்றிட வேண்டுகிறோம்.**

**தங்களின் மேலான உதவிகளை**

**"AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST"** எனும் பெயரில் மதுரை இந்தியன் வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code : 1437) எங்கள் கணக்கு எண். **429079510** (IFSC Code : IDIB000K136) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

# J.M.S.ARABIC COLLEGE

**Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,**

**MADURAI - 625020. S.India.**

**94430 66539, 94860 17570**

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



### Platinum Package

**(31 - 33 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

### Platinum Short Package

**(18 - 21 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

### Golden Package (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,
**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் அளப்பெரும் பேரருளால்.....

## புனிதமிகு ரமளான் மாதத்தில்

# மதுரை M.I.W.S.பைத்துல்மாலுக்கு

# வாரி வழங்குங்கள்!

இந்தியாவிலேயே கடந்த 40 ஆண்டுகளில் 982 ஏழைக்குமர்களுக்கு
திருமணத்தை நடத்தி வைத்து வாழ்வளித்துள்ள

## மதுரை M.I.W.S.பைத்துல்மாலுக்கு

நிகழும் பொன்னான புனிதமிகு ரமளானில் நீங்களும், உங்களின் அருமை நண்பர்கள், உற்றார் - உறவினர்கள் மூலமாகவும் ஜகாத், ஸதகா நிதிகளிலிருந்து உதவிக்கரம் நீட்டி ஏழைக்குமர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வாருங்கள்.

முடிந்தால்... **ஏழைக்குமர் ஒருவரின் திருமணத்தையே** இன்ஷா அல்லாஹ்

உங்கள் செலவில் நடத்தி முடித்திட ரூ. **80,000/-** ஐ

# அள்ளி வழங்குங்கள்!

**இன்ஷா அல்லாஹ் வரும் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை**
**12 குமர்களுக்கு திருமணம் நடைபெறவுள்ளது.**

தங்களின் மேலான உதவிகளை **"AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST BAITHUL MAL"** எனும் பெயரில் மதுரை கனரா வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code :5663) எங்கள் கணக்கு எண் : **1009101028635**
(I.F.S.C. Code:CNRB0005663) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண் களுக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

# M.I.W.S. BAITHULMAL


J.M.S. Arabic College Campus, Jaamiyaa Nagar,
Sivagangai Highway Road, MADURAI - 20.
9994148480, 9486017570 miws_baithulmal@rediffmail.com

GSTIN : 33DMUPA2892F1ZW

8122365636
7708696860






# அன்னிஸா பேஷன்ஸ்

## மொத்த வியாபாரம்

- புர்கா
- ஹிஜாப்
- நைட்டி
- ஷால் – நைட்டி
- துப்பட்டா
- காட்டன் ஷால்
- லெகின்ஸ்
- பட்டியாலா





மொத்த விற்பனை மட்டும்

மங்கலம் – பல்லடம் ரோடு, சிட்டி யூனியன் பேங்க் அருகில்,
HFDC பேங்க் அருகில்,
**மங்கலம்** - 641663. திருப்பூர் மாவட்டம்.

அதற்கு அம்மனிதன் சொன்னான் :

“நான் வியாபார நிமித்தம் இவ்வழியாக வந்தேன். என்னிடமிருந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்து விட்டு என்னைக் கட்டிப்போட்டு விட்டு போய்விட்டார்கள் சில கொள்ளையர்கள்.

யாதொரு பாதுகாப்பும் இல்லாத இவ்விடத்தில் நான் அல்லாஹ் ஒருவனையே துணையாகக் கொண்டு அவன்மீது தவக்குல் வைத்து அவன் மட்டுமே என்னைக் காப்பாற்றப் போதுமானவன் என்று உறுதி கொண்ட நிலையில் இங்கு கிடக்கிறேன்.

எனக்கு அந்த வல்ல அல்லாஹ் இந்த நிலையிலும் இக்காகத்தின் மூலமாக ஒவ்வொரு வேளையும் இவ்வாறு உணவளித்து வருகிறான்” என்றான்.

இந்தச் சம்பவமும், அந்த மனிதனின் இறைநம்பிக்கையும் பல்குப் பேரரசர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்தது.

அல்லாஹ் கூறுகிறான் :-

“நிச்சயமாக என் பாதுகாவலன் அல்லாஹ்தான். அவனே இவ்வேதத்தை இறக்கி வைத்தான் - இன்னும் அவனே நல்லடியார் களைப் பாதுகாக்கிறான்.” - அல்குர்ஆன் (7 : 196)


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.

செல் : 9944001362

# ஸூஃபிகளின் நோன்பு

மவ்லவி **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

ஸூஃபியாக்கள், நோன்பை ஆன்மிகம் நிரம்பப் பெற்றுள்ள செயலாகவும், படைப்பினங்களுக்கு அத்தியாவசியமான வாழ்வியலாகவும் கருதுகிறார்கள். இந்த நோன்பை மூன்றாக வகைப்படுத்தி இருக்கிறார்கள்.

1. **பொதுவான நோன்பு :** இச்சைகளை விட்டும் விலகி, உடலுறவு கொள்ளாமல், உண்ணாமல் இருப்பது. இது அனைவரும் நோற்கும் நோன்பின் அமைப்பு.
2. **தனித்துவமான நோன்பு:** அருவருப்பானவற்றை கேட்பது, பார்ப்பது, பேசுவது, தவறான இடங்களுக்குச் செல்வது, தவறானவற்றை செய்ய கைகளை பயன்படுத்துவது போன்ற அனைத்துப் பாவச் செயல்களில் ஈடுபடுவதை விட்டும் விலகி இருப்பது. அத்துடன் முதலில் சொல்லப்பட்டதையும் ஏற்று நடப்பது.

இது அனைவரும் நோற்கும் நோன்பிலிருந்து சற்று வித்தியாசப்பட்டிருக்கிறது.

3. **மிகக் குறிப்பிடும்படியான நோன்பு:** இதயமும் நோன்பு நோற்க வேண்டும். உலக காரியங்களை யோசிப்பதை விட்டும் விலகி, அது சார்ந்த சிந்தனைகளில் தொடர்ந்து மூழ்கியிருப்பதை விட்டும் விலகி இருப்பது.

இதுதான் ஸூஃபியாக்களின் நோன்பு. இதுதான் இறைவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் படியான நோன்பின் அமைப்பு.

இந்த மிகக் குறிப்பிடும்படியான நோன்பை ஸூஃபியாக்கள் ஆறு வகைப்படுத்துகிறார்கள்.

## நோன்பின் நோக்கங்கள் ஆறு :

1. **பார்வையை கட்டுப்படுத்துவது:** இழிவை ஏற்படுத்துகின்றவற்றை பார்ப்பதையும், ஆசைகளை தூண்டுகின்றவற்றை பார்ப்பதையும் விட்டு விலகி இருத்தல். அதாவது இறை நினைவிலிருந்து நம்மை திசை திருப்புகின்ற அனைத்தையும் பார்ப்பதை விட்டும் விலகி இருத்தலே நோன்பாகும்.
2. **வீண் பேச்சுகளிலிருந்து நாவைப் பாதுகாப்பது :** பொய், புறம், கோள், இட்டுக் கட்டுதல், ஆபாசம், வீண் விவாதம், அரட்டை போன்ற அவசியமற்ற பேச்சுகளை

விட்டும் விலகி, அல்லாஹ்வை திக்ரு செய்வதிலும், திருகுர்ஆனை ஓதுவதிலும் முழுமையாக நேரத்தை செலவிட வேண்டும்.

மேற்கண்ட பேச்சுகளில் ஈடுபட்டால் நோன்பு முறிந்து விடும் என்பது சூஃபியாக்களின் நம்பிக்கை. அதற்கு அவர்கள் ஆதாரப்பூர்வமான நபிமொழியையும் மேற்கோள் காட்டுகிறார்கள்.

3. **வீணானவற்றை கேட்க வேண்டாம் :** எவையெல்லாம் பேசக்கூடாதோ அவை அனைத்தையும் கேட்பதும் கூடாது.

**"அவர்கள் அதிகமாக பொய்யையே கேட்பார்கள்; தடை செய்யப்பட்டதையே சாப்பிடுவார்கள்."** - அல்குர்ஆன் (5 : 42)

**"பாவமானவற்றை அவர்கள் பேசுவதிலிருந்தும், தடை செய்யப்பட்டவற்றை அவர்கள் உண்பதிலிருந்தும் அவர்களில் உள்ள (கிறிஸ்தவ) பாதிரிமார்களும், (யூத ) ரப்பிகளும் அவர்களை தடுத்திருக்க வேண்டாமா?"**

- அல்குர்ஆன் (5 : 63)

மேற்கண்ட இரு வசனங்களில், தவறான பேச்சுகளில் இருந்து விலகி இருக்கும்படி இறைவன் உத்தரவிடுகிறான். எனவே நோன்பு காலங்களில் அதை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. **பிற உறுப்புகள் பாவங்களில் ஈடுபடாமல் பாதுகாப்பது :** கை, கால்கள் மற்றும் அனைத்து உறுப்புகளையும் பாவமானவற்றை விட்டும், சந்தேகத்திற்குரியவற்றை விட்டும், சிறு குற்றங்களை விட்டும் முழுமையாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நோன்பு திறக்கும் நேரத்தில் சந்தேகத்திற்குரியவற்றை சாப்பிடுவதை விட்டும் விலகி இருக்க வேண்டும்.

ஏனென்றால்ஹலாலானதை சாப்பிட்டு நோன்பு நோற்றுவிட்டு நோன்பு திறக்கும்போது ஹராமானதை சாப்பிடுவதால் என்ன பயன்?

5. **நோன்பு திறக்கும் போது கவனமாக இருப்பது :** இஃப்தார் - நோன்புதிறக்கும் போது வயிறு நிரம்ப சாப்பிடுவது நல்லதல்ல!

ஹலாலான உணவை நோன்பு திறக்கும் நேரத்தில் சாப்பிடுவது ஆகுமானதாக இருந்தாலும், வயிறு நிரம்ப உண்பது அல்லாஹ்விடத்தில் கோபத்தை ஏற்படுத்தும்.

## நோன்பின் நோக்கம் :

மன எழுச்சிகளை அடக்குவதும், அல்லாஹ்வின் விரோதியான ஷைத்தானை கட்டுப்படுத்துவதும் தான்.

பகலில் நோன்பின் காரணமாக சாப்பிட முடியாமல் போன வண்ணமயமான பல உணவு

# இராஜகிரி
## மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்
## (பொது மற்றும் அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி)

### புனித ரமலான் நல்வாழ்த்துக்கள் !

# அன்பான வேண்டுகோள்

அல்லாஹ்வின் அருளால் கடந்த 50 ஆண்டுகளாக அரபி மற்றும் பொது கல்வியில் முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் பேணுதல் உணவு, தங்குமிட வசதியுடன் மார்க்க கல்வி, உலக கல்வி அளித்து வரும் நிறுவனம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை கொண்டு கல்வி கற்பித்து வருவதுடன் இதுவரை 1000க்கு மேற்பட்ட ஆலிமாக்களை உருவாக்கியுள்ளோம். பொது தேர்வில் 100% தேர்ச்சியினை தொடர்ந்து பெற்று வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதரஸா சிறப்பாக செயல்பட ஏற்பட்டுள்ள பொருளாதார பற்றாக் குறைகளை ஈடு செய்யவும், மதரஸா விரிவாக்க பணிகளை மேற்கொள்ளவும், உணவு கூடம், சுகாதாரவளாகம் வசதியினை விரிவுபடுத்தவும் மற்றும் கல்வி துறையின் நெறிமுறைகளின்படி உள்கட்டமைப்பினை மேம்படுத்த வசதியினை செய்யவும். சமுதாய சகோதரர்கள் ரமலான் நிதி ஜகாத் மற்றும் இதர காலங்களிலும் தங்களின் ஸதகா, ஹதியா நன்கொடையினை வழங்கி மதரஸாவின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அல்லாஹ் மார்கத்திற்காக தாங்கள் உதவும் எல்லா வகை பங்களிப்பையும் அமல்களிலும் பொருந்தி கொள்வானாக. ஈருலக வாழ்க்கையையும் மேன்மையாக்கி வைப்பானாக! ஆமின்.

**OUR BANK DETAILS**

| | | |
|---|---|---|
| Name | MADARSA YE HIDAYATHUN NISWAN | |
| Bank Name | Indian Overseas Bank | |
| Branch | Rajagiri - (0555) Branch | IFSC Code IOBA0000555 |
| ஜகாத் நிதி | A/c No : 05550200006666 | |
| ஸதகா, ஸதகத்துல் ஜாரியா, மாணவர்களின் பள்ளிக்கட்டணம், உணவுக் கட்டணம். | | A/c No : 05550100002661 |


**மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்**

(பொது அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பிரைமரி பள்ளி)

ராஜகிரி P.O - 614207, தஞ்சாவூர் மாவட்டம்,

**04374-250711 / 9944886757.**

களையும், பானங்களையும் நோன்பு திறக்கும்போது உண்பதால் நோன்பின் நோக்கம் முழுமை பெறாது.

நோன்பின்போது காலி யான வயிற்றோடு இருப்பவர், நோன்பு திறக்கும்போது வயிறு நிரம்ப சாப்பிட்டால், சாப்பிடுகிற அவரால் பிறருக்கு ஏற்படும் அபாயத்தை நினைத் தும், அவருக்கே ஏற்படும் அபாயங்களை நினைத்தும் சூஃபியாக்கள் அஞ்சுகிறார்கள்.

விரும்பியதை சாப்பிடும் போது அவரின் ஆன்மா இரண்டு மடங்கு அதிகமான ஆசை களுக்கும் மன எழுச்சிகளுக் கும் உள்ளாகிறது. அதாவது நோன்பு காலத்திற்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது அவருடைய ஆன்மா அதிக மான ஆசைகளையும், மன இச்சைகளையும் பெறுகிறது. எனவே நோன்பு திறக்கும் போது சாப்பிடுவதில் கவனம் வேண்டும் என சூஃபியாக்கள் வலியுறுத்துகிறார்கள்.

நோன்பு நோற்காத காலை நேரத்தில் சாப்பிடுவதை விட நோன்புநோற்கும்ஸஹரில் அதிக மாக சாப்பிடுவதில் சூஃபியாக் களுக்கு உடன்பாடில்லை.

நோன்பு காலம் வருவதற்கு முன்பு நோன்பு நோற்பதின் மீது ஆசையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும், இறைவனோடு நெருக்கத்தை ஏற்படுத்தி விடும் என்கிற நம்பிக்கையும் இருக்கும். ஆனால் நோன்பு காலத்தில் அதிகமாக உண்பதால் இவற்றில் எதையும் பெற்றுக் கொள்ள மாட்டோம்.

அதனால் நோன்பு குறித்த நல்லெண்ணம், மதிப்பு ஆகியன குறைந்து, நோன்பை துச்சமாக மதிக்கும் நிலை உண்டாகிவிடும் எனவும் சூஃபியாக்கள் அஞ்சுகிறார்கள்.

நோன்பு திறக்கும்போது அளவு கடந்து சாப்பிடுகிற வருக்கு உலகியல், உடலியல் மற்றும் மறுமையின் பயன் மிகக் குறைவாகவே கிடைக்கும்.

6. **நோன்பு திறந்த பிறகு உள்ள நிலை :** நோன்பாளி நோன்பு திறந்த பிறகு அச்சத்தோடும் எதிர்பார்ப் போடும் காணப்படுவார்.

அவருடைய நோன்பு ஏற்கப்பட்டு அல்லாஹ்விற்கு நெருக்கமாக இருப்பாரா? அல்லது அவரது நோன்பு இறை வனால் நிராகரிக்கப்பட்டு இறைவனை விட்டும் தூரமாக்கப்படுவாரா என்கிற தடுமாற்றத்தில் இருப்பார்.

சூஃபியாக்களை பொறுத்தமட்டில் ஒருவர் அருவருப்பான செயல்களை செய்தாலே நோன்பு முறிந்து விடும் என்பார்கள்.

மேற்கூறப்பட்ட அருவருப் பான காரியங்களை செய்

கிறவர்கள், பார்ப்பவர்கள், கேட்பவர்கள் நோன்பு நோற்காமல் இருப்பதே நல்லது என்றும் சூஃபியாக்கள் கருதுகிறார்கள்.

உண்ணாமல், உடலுறவு கொள்ளாமல் தம்மை தற்காத்திருந்து, பாவங்கள் செய்ததின் காரணமாக ஒருவரின் நோன்பு முறிவது, குளிப்பு கடமையான நிலையில் உள்ள ஒருவர் குளிக்காமல் ஒளுவின் உறுப்புகளை முறையாக மூன்று முறை கழுவிய பிறகு அவர் தொழுவதை போன்று உள்ளது.

இவரின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாதது போலவே அவரின் நோன்பும் ஏற்றுக் கொள்ளப்படாது.

## இருளை விரட்டும் ஒளி – நோன்பு :

சூஃபி ஷகீக் அல் பல்கி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

"நாற்பது நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்றால் அது இதயத்தின் இருளை ஒளியாக மாற்றிவிடும்".

இரண்டு பெருநாட்கள், அய்யாமுத் தஷ்ரீக் உடைய மூன்று நாட்கள் என ஐந்து நாட்கள் தவிர வருடத்தின் அனைத்து நாட்களிலும் நோன்பு நோற்பதையே பல சூஃபியாக்கள் விரும்பி இருக்கிறார்கள். அதை செயல்படுத்தியும் இருக்கிறார்கள்.

ஒரு சில சூஃபியாக்கள் நபி தாவூத் (அலை) அவர்கள் நோன்பு நோற்றது போல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்றும் இருக்கிறார்கள்.

## நோன்பில் இறைத்தன்மை :

"நோன்பு எதற்காக நோற்கப்படுகிறது?" என்று கேட்டால் "பசியை நாம் நன்றாக உணர்வதற்காக" என்று சிலர் பதில் சொல்கிறார்கள்.

இப்படி பதில் சொன்னவரிடம் நான் சொன்னேன். "இல்லை. நோன்பு என்பது பசியை உணர்வதற்கு அல்ல! பசியை உணராமல் இருப்பதற்கு" என்று சொன்னேன். அவர் புரியவில்லை என்று சொன்னார்.

"உணவு சாப்பிடாத போது பசியும், தாகமும் ஏற்படுவது மனிதனின் இயற்கை. ஆனால் நோன்பு என்பது ஒரு வழிபாடு (இபாதத்).

அடிமை தன் இயற்கைபடி பசியில் மூழ்கியிருப்பது வழிபாடு ஆகாது. தன் அடிமைத் தனத்திலிருக்கும்போதே தன் எஜமானனின் கருணையைக் கவனிப்பதுதான் வழிபாடாகும்.

அனைத்து வழிபாடுகளின் நோக்கமும் இறைவனை நினைவில் நிறுத்த வேண்டும் என்பதுதான். நோன்பு என்பதும் அடியான் தன் பசி எனும் இயற்கை பண்பின் பக்கம் கவனம் வைப்பதற்கல்ல!

மாறாக அந்த பசியின் நிலையிலும் இறைவன் பக்கம் தன் கவனத்தை நிறுத்துவதற்குத் தான் நோன்பு. அந்நிலையிலும் அவனை வழிபடுவது தான் உண்மையான வழிபாடு!

அதாவது இறைவன் சொன்னான் என்பதற்காக பசித்திருப்பதும், உணவு அருகில் இருந்தும் சாப்பிடாமல் இருப்பதும், அவனது உத்தரவிற்கு அடிபணிந்து நடப்பதுமே நோன்பு.

பசியும், தாகமும் மனிதனின் இயற்கை பண்பு. உணவு, தண்ணீர் தேவை எனும் நிலை மனிதனின் பண்பு.

பசி, தாகம் அற்ற நிலை இறைவனின் பண்பு. உணவு தேவை இல்லை எனும் நிலை இறைவனின் பண்பு.

நோன்பு நோற்றிருக்கும் போது பசி மற்றும் தாகத்தின் பக்கம் நம் கவனம் செல்லக் கூடாது. அது நம்மையே நாம் கவனித்துக் கொண்டிருப்பதாக ஆகும்.

பசி மற்றும் தாகம் ஏற்படும் போதும் நம் நினைவை அல்லாஹ்வின் பக்கம் திருப்பி நம் கவனத்தை அவனில் நிலை நிறுத்த வேண்டும். மேலும் பசி மற்றும் தாகம் ஏற்படுகிற உணர்வே இல்லாத ஒரு நிலையை அடைவதுதான் நோன்பின் உண்மையான நிலை!

நோன்பு நோற்றிருக்கும் ஒருவரிடம் அல்லாஹ் சார்ந்த நினைவுகள் அதிகரிக்கும். அல்லாஹ்விற்கு உணவு, தண்ணீர், உடை, இருப்பிடம் போன்ற எதன் தேவையும் இல்லை.

நோன்பு நோற்றிருக்கும் ஓர் அடியானிடம் அல்லாஹ் தன் பண்புகளை அவனில் பிரதிபலிக்கச் செய்கிறான்.

நம்மில் அல்லாஹ்வுடைய பிரதிபலிப்பை கண்டு, அதில் மூழ்கியிருப்பதை விரும்பியே ஸூஃபிகள் அதிகமாக நோன்பு நோற்றார்கள்.

நோன்பு மனிதனுக்கே உரித்தான செயலாக இருந்தாலும் அதில் இறைவனின் ஸிஃபத்து - பண்புகள் இருப்பதை ஞானவான்கள் புரிந்து கொண்டு அதில் லயித்திருக்க விரும்புகிறார்கள்.

நோன்பு நோற்பதின் நோக்கம் என்ன? என்று எவரேனும் கேட்டால் அதனை கடமையாக்கிய அல்லாஹ்வே தெளிவாக பதில் சொல்லி இருக்கின்றான். அதாவது "நீங்கள் இறையச்சமுள்ளவர்களாக ஆவதற்கே".

எனவே ஒரு முஸ்லிம் நோன்பு நோற்பதின் மூலம் இறையச்சத்தையும், அதன் வழியாக அல்லாஹ்வையும் அடைய முடியும்.

இஸ்லாத்தின் அனைத்து வழிபாடுகளும் வெளிப்படையான வழிபாடுகளாகும். ஆனால்

Since 1977-2023
46 Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

நோன்பு ஓர் இரகசியமான வழிபாடு. இந்த வழிபாட்டை நிறைவேற்றுகின்றபோது அந்த மனிதருக்கும், அல்லாஹ்வுக்கும் தவிர வேறு யாருக்கும் அது தெரியாது.

ஒரு மனிதன் நோன்பு நோற்கின்றான். திருட்டுத்தனமாக அவன் சாப்பிடுவதுமில்லை. குடிப்பதுமில்லை. கடும் வெப்பத்தினால் தொண்டை வறண்டாலும் அவன் ஒரு துளி நீரும் அருந்துவதுமில்லை. கடும் பசியினால் கண்பார்வைக் குறைந்தாலும் அவன் ஒரு கவளம் உணவையும் உண்பதுமில்லை.

இறைவன் எல்லா மர்மங்களையும் அறிந்தவன் என்பதில் அந்த மனிதன் எவ்வளவு நம்பிக்கையாக இருக்கின்றான். தன் செயல்கள் முழு உலகத்திற்கும் தெரியாமல் இருந்துவிட்டாலும் இறைவனுக்கு தெரியாமல் இருக்காது என்பதை எவ்வளவு உறுதியாக நம்புகிறான்!

மிகப்பெரும் சிரமங்களையெல்லாம் அவன் தாங்கிக் கொள்கிறான். ஆனால் இறையச்சத்தால், தான் நோற்கின்ற நோன்பை முறிக்கும் எந்தக் காரியத்தையும் அவன் செய்வதில்லை என்றால், அவன் உள்ளத்தில் எப்படிப்பட்ட உறுதியான இறையச்சம் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

## நோன்பின் கூலியை நானே தருவேன் :

"ஆதமுடைய மகனின் [மனிதனின்] ஒவ்வொரு செயலும் அவனுக்கே உரியதாகும், நோன்பைத் தவிர" என்று அல்லாஹ் கூறுவதை சிந்தித்துப் பாருங்கள்.

நோன்பாளி தூங்கும்போது நோன்பு முறிவதில்லை. அதாவது நோன்பு என்பது அடியான் நிகழ்த்தும் ஒரு செயலாக இருக்குமேயானால் அவன் தூங்கினால் அது முறிந்துவிடும். அதாவது தூங்குகிறவர் நோன்பு நோற்கக் கூடாது என்று ஆகிவிடும்.

தொழுகை அடியான் நிகழ்த்தும் செயல். எனவே தூங்கிக் கொண்டே தொழுதால் தொழுகை கூடாது.

எனவே நோன்பு அடியானின் செயலைச் சார்ந்ததாக இல்லை. அவன் தூங்கினாலும் நோன்பு தொடர்கிறது.

நோன்பு என்பது சோர்வும், தூக்கமும் அறவே இல்லாத இறைவனுக்கு உரியது. அதாவது தூங்கும் அடியானில் நோன்பு என்பது தூங்காத இறைவனால் பேணப்படுகிறது.

அடியான் விழித்திருக்கும் போதும் அவனில் நோன்பைப் பேணுவது இறைவன்தான்.

இங்கே இன்னொரு நபிமொழியும் கவனத்திற்கு உரியது.

"ஒருவர் மறதியாக சாப்பிட்டாலோ குடித்தாலோ அவர் தன் நோன்பை முழுமைப் படுத்தட்டும்; ஏனெனில் அவரை அல்லாஹ்வே உண்ணவும், பருகவும் வைத்தான்" (புகாரி)

நோன்பு எனக்கானது எனக் கூறிய அல்லாஹ் அடியானுக்கு உணவை சாப்பிட வைத்த போதும் நோன்பு முறியாமல் பாதுகாக்கிறான். ஏனெனில் நோன்பு அவனுக்குரியது; அடியானுக்கு உரியதல்ல!

உணவின் தேவையே இல்லாத அல்லாஹ் அடியானை உண்ணவும் பருகவும் வைத்து, அவனில் நோன்பையும் பாதுகாக்கிறான்! எவ்வளவு அற்புதமான நிலை!

## நோன்பின் நன்மைகள் :

"மனதை கட்டுப்படுத்தவும், விரைவில் இறைவனை அடையவும் நோன்பைத் தவிர குறுக்கு வழி வேறு எதுவும் இல்லை" என ஹாக்கீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

நோன்புக்காக சாப்பிடாமல் இருப்பதாலும், நோன்பு அல்லாத சந்தர்ப்பங்களில் குறைவாக சாப்பிடுவதாலும் உடல் இச்சைகளும், மன ஆசைகளும் குறைகின்றன. அதனால் பாவங்கள் செய்வதிலிருந்தும் விலகி நிற்கின்றோம். எது பாவமான செயல் என்பதும் தெரிய வருகிறது.

உடல் வலிமை என்பது சாப்பிடும் உணவு மற்றும் பானத்தைப் பொறுத்து உடல் வலிமை பெறும்.

ஆன்மிக வலிமை என்பது பசி மற்றும் தாகத்தை தாங்கிக் கொள்கிற அளவிற்கு வலிமை அதிகரிக்கும்.

"பசி உடலைத் துன்புறுத்துகிறது. இதயத்தைத் தூய்மைப் படுத்துகிறது. ஆன்மாவை அன்பின் மூலம் உயிர்ப்பிக்கின்றது. இறைவனைசந்திப்பதற்காக மனதை தயார் செய்கிறது" என்று கஷ்ஃபுல் மஹ்ஜுப் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

நோன்பு, சூஃபிகளால் மிகவும் போற்றப்படும் ஒரு நல்லமல். இறைவன் புறத்திலிருந்து தமக்கு இல்ஹாம் ஞானோதயம் ஏற்பட வேண்டும் என சூஃபிகள் விரும்பும் போதெல்லாம் தொடர்ந்து நாற்பது நாட்கள் நோன்பு நோற்பார்கள்.

அதற்குப்பிறகு அவர்களுக்கு இல்ஹாம் ஞானோதயங்கள் ஏற்படும். நபிமார்களுக்கு வஹீ இறைவனால் அருளப்பட்டது போல் அவுலியா - இறைநேசர்களுக்கு இல்ஹாம் இறைவனால் வழங்கப்படுகிறது.

நோன்பு நோற்றவர்களின் முகம் பெருநாள் அன்று காலையில் பிரகாசமாகவும், உடல் வற்றி போயும் காணப்பட வேண்டும். அப்படி காணப் படுபவர்கள் தான் உண்மை

யான நோன்பாளிகள் என ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். இன்று அப்படி யாரேனும் இருக்கிறார்களா?

ஸஹருக்கு ஆக உயர்தர மான உணவு; நோன்பு திறக்கும் போது அத்தனை வெரைட்டிகளையும் வைத்துக் கொண்டு நோன்பு திறப்பது; தராவீஹ் தொடங்குவதற்கு முன் ஒரு சிற்றுண்டி; தராவீஹ் தொழுத பிறகு மற் றொரு முறை சாப்பிடுவது என வழமையாக சாப்பிடுவதை விட நோன்பு காலங்களில் அதிகமாக சாப்பிட்டால் பெருநாள் அன்று அவர் முகம் வாடிப் போயா இருக்கும்?

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் பத்து நாட் கள், இருபது நாட்கள் என தொடர்ந்து நோன்பு நோற்பார் கள். அதாவது ஸஹரில் சாப்பிடு வது சுன்னத் என்பதற்காக சிறி தளவு தண்ணீர், ஒரு பேரீத்தம் பழம் ஆகியன மட்டுமே உண்டு நோன்பு நோற்பார்கள்.

அதேபோல் நோன்பு திறக் கும்போதும் சிறிது தண்ணீர், ஒரு பேரீத்தம் பழம் மட்டுமே சாப்பிடுவார்கள். இவ்வளவு குறைந்த உணவைச் சாப்பிட்டு பலமுறை மாதக் கணக்கில் நோன்பு நோற்றிருக்கிறார்கள்.

“இறைவன் பசி, தாகம் இல்லாதவன். அவனை அடைய அவன் வழியில் பசி, தாகம் ஆகியவற்றை திறக்க வேண்டு மல்லவா!” என்று அடிக்கடி கூறுவார்கள்.

## பசி, மருந்துகளின் அரசன்

யார் தனக்குப் பசி ஏற் படுவதைவிரும்புவதில்லையோ அவன் ஆயிரக்கணக்கான நோய்களின் பிறப்பிடமாக இருக்கின்றான்.

நோய்களினால் ஏற்படும் வலிகளை விட பசியினால் ஏற்படும் வலிகள் குறைவுதான்.

பசித்திருந்தால் உடல் சுத்தமாகவும், உடல் எடை குறைவாகவும் காணப்படு வதோடு விரைந்து செயல்படும் உற்சாகம் இருக்கும்.

பசி மருந்துகளின் அரசன். எனவே பசிக்கு மனதிலே இடம் கொடுக்க வேண்டும். பசித்தவர் களை இழிவாகக் கருதாதே!

சுவையில்லாத பொருட்கள் பசியின் காரணமாக சுவை மிக்க தாகக் கருதப்படுகின்றன. சுவை யான பண்டங்கள் அனைத்தும் பசி இல்லாததினால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன.

பசித்தவனுக்கு தவிடும் அல்வா தான்!

ஓர் ஏழை பசிக்கும்போது மட்டுமே சாப்பிடுகிறான். அவன் எப்போதெல்லாம் சாப் பிடுகிறானோ அவன் சாப்பிடு வது அனைத்தும் உயர்தரமான உணவு வகைகள்தான்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேருதவியால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

IATA

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ரூ. 85,000/- | ரூ. 98,000/- | ரூ. 1,08,000/- | ரூ. 1,35,000/- | ரூ. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |
| மே | 02-05-2024 | வியாழன் | 16-05-2024 | வியாழன் | 15 நாள் |
| மே | 12-05-2024 | ஞாயிறு | 26-05-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜூலை | 24-07-2024 | புதன் | 07-08-2024 | புதன் | 15 நாள் |
| ஜூலை | 24-07-2024 | புதன் | 22-08-2024 | வியாழன் | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

விபரங்களுக்கு: உரிமையாளர்.

**அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு** செல்: 9994254304

பசி பெரும்பாலானவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாதது.

பசியை கட்டுப்படுத்திய வர்கள் புலியைப் போல் பலசாலிகளாக ஆகிறார்கள்.

உண்பதில் இன்பம் கண்டவர்கள் ஆன்மிகத்தில் தேர்ச்சி பெற முடியாது.

"முறையாக நோன்பு நோற்று, நோன்பு காலங்களில் முறையாக அனைத்து நேர தொழுகைகளை யும் தொழுதால் அவர் மிஹ்ராஜ் - இறைவனை சந்திப்பார்" என பீரப்பா அவர்கள் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்கள்.

**நோன்பாளிக்கு முதலிடம் :**

ஸஹ்ல் பின் அப்துல்லாஹ் அல்இஸ்கந்தரீ (ரஹ்) (ஹிஜ்ரி 815) அவர்களிடம் நோன்பு குறித்து ஒரு சீடர் வினவினார். அதற்கு அவர்கள் கூறிய பதில் நம்மை சிந்திக்க வைக்கிறது.

"பசி உடலுக்குப் பலவீன மளிக்கும். உணவு உடலுக்குப் பலத்தைத் தரும். ஆனால், பட்டினியும், ஒட்டிய வயிறும் தான் என் ஞானப் பசியைத் தணித்தன.

உணவும், நிரம்பிய வயிறும் எனக்குப் பலத்தை அளித்தன. பசி என் உடலை பலவீனப் படுத்தின.

இந்த ஒட்டிய வயிற்றால் என் புறப்பார்வை மறைந்து அகப்பார்வை விரிந்தது.

இதனால், என் விரிவான ஞானம் முழுவதையும் பக்தியில் செலுத்தியதால் என் அகங் காரம் தொலைந்து போனது".

உலகில் எந்த தேவையும் இல்லாமல் வாழ்ந்த இவர் அவ்வப்பொழுது திருகுர்ஆன் தஃப்ஸீர் - விரிவுரை நடத்துவார்.

அந்த விரிவுரையை கேட் பதற்கு பள்ளிவாசலில் மக்கள் கூட்டம் அலைமோதும். கூட்டத் தில் அந்த நாட்டு மன்னரும், மந்திரிகளும் அடங்குவர்.

தஃப்ஸீரை தொடங்குவதற்கு முன்பு அவர்கள் கூறுவார்கள் :

"நோன்பு நோற்றவர்கள் எனக்கு எதிரில் அமருங்கள். காலையில் சாப்பிடாதவர்கள் அதற்கு அடுத்து அமருங்கள்.

காலை விழித்தவுடன் என்ன சாப்பிடலாம் என்று நினைத்த வர்கள், எப்பொழுதும் நினைப்ப வர்கள் கொஞ்சம் பின்னால் அமர்ந்து கொள்ளுங்கள்."

தஃப்ஸீரை கேட்க வந்தி ருந்தவர்களுக்கு இடையில் இந்த பாகுபாட்டை தவிர வேறு எந்த பந்தா - அலப்பரையை யும் அவர் செய்ததில்லை.

உடலுக்குள் உணவும், தண் ணீரும் இல்லாமல், இறைவன் நம்மை தாயின் கருவறையிலி ருந்து வெளியேற்றியது போல் எல்லா காலத்திலும் உடலிருக் கும்பட்சத்தில் அவன் அல்லாஹ் விற்கு அருகிலேயே இருக் கின்றான். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும் நோன்பை நோற்போம்.

## மத வழிபாட்டு தலங்கள் சட்டத்தை ஒன்றிய அரசு அமல்படுத்த வேண்டும்

கியான்வாபி, காசி மற்றும் மதுரா மஸ்ஜித் விவகாரங்களுக்கு தீர்வு காண 1991ஆம் ஆண்டு மதவழிபாட்டுதலங்கள் சட்டத்தை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியை வலியுறுத்தி ஹைதராபாத்தில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் நிர்வாகக் குழு கூட்டம் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்திலுள்ள அல்-மஹத்-உல்-அலீ-இஸ்லாமியில் நடைபெற்றது.

வாரியத்தின் தலைவர் மவ்லானா காலித் ஸைஃபுல்லாஹ் ரஹ்மானி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், துணைத் தலைவர் ஜனாப் சையத் சஅததுல்லாஹ் ஹுஸைனி, மவ்லானா முஹம்மது உமரின் மஹ்ஃபூஸ் ரஹ்மானி, மவ்லானா அஹ்மத் வாலி பைசல் ரஹ்மானி, நீதியரசர் சையத் ஷா முஹம்மது காதிரி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய மகளிர் அணி தலைவி பாத்திமா முஸப்பர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

### தீர்மானங்கள் நிறைவேற்றம்

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. வாரியத்தின் உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

கியான் வாபி, காசி மற்றும் மதுரா மஸ்ஜித் விவகாரங்களுக்கு தீர்வு காண 1991ஆம் ஆண்டு மத வழிபாட்டுதலங்கள் சட்டத்தை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியை வலியுறுத்தி நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு மவுனம் சாதித்து வருவதால் மாநில அரசுகள் இந்த சட்டங்களை நீதிமன்றங்களில் தவறாக எடுத்துக்காட்டி வருகின்றன என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வாரணாசியில் உள்ள கியான் வாபி பள்ளிவாசல் மற்றும் மதுராவிலுள்ள ஷாஹி ஈத்கா தொடர்பாக கீழமை நீதிமன்றங்களில் எழுந்துள்ள புதிய சர்ச்சைகள் குறித்து கவலை தெரிவித்த முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் டெல்லி கன்ஹாரி பள்ளிவாசல் விவகாரம் உள்ளிட்ட புதிய பிரச்சனைகளை தற்போது கிளப்பியிருப்பது வேதனையளிப்பதாகவும் கூறியுள்ளது. கன்ஹாரி பள்ளிவாசல் மற்றும் பிற பள்ளிவாசல்கள் பாரம்பரிய கட்டுமானங்களில் சேர்க்கப்பட்டுள்ளதால் அவற்றைச் சீர்குலைப்பது நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியத்தை சேதப்படுத்துவதற்குச் சமம் என்றும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## பலஸ்தீனம் இந்திய அரசுக்கு வேண்டுகோள்

பலஸ்தீனப் பிரச்சனை ஒரு மனிதாபிமானப் பிரச்சனை என்று கூறியுள்ள வாரியம், அங்கு இஸ்ரேல் வடிவிலுள்ள ஓர் அடக்குமுறை சக்தி, அந்நாட்டின் பூர்வீகக் குடிகளை அழிப்பதில் குறியாக உள்ளது என்றும், சத்தியத்திற்காக போராடும் பலஸ்தீன மக்களுக்கு இஸ்லாமிய உலகம் துணையாக நிற்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. பலஸ்தீன் விவகாரத்தில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட இந்தியத் தலைவர்கள் கடைபிடித்த நிலைப்பாட்டை தற்போதுள்ள பாரதீய ஜனதா அரசும் கடைபிடிக்க வேண்டும் என்றும் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.

## பொது சிவில் சட்டம் வேண்டாம்

பல்வேறு மதம், மொழி மற்றும் கலாச்சாரம் கொண்ட இந்திய நாட்டிற்கு ஒரே மாதிரியான சிவில் சட்டம் முற்றிலும் பொருத்தமானது அல்ல என்பதை வாரியம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளதை மீண்டும் சுட்டிக்காட்டிய வாரியம், இதுபோன்ற முயற்சிகள் நாட்டின் அரசியலமைப்பின் நெறிமுறைகளுக்கு எதிரானது என்றும் தெரிவித்துள்ளது. நாட்டில் பெண்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்க அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று வேதனை தெரிவித்த வாரியம், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது மட்டுமே பிரச்சனைக்கு தீர்வாகாது என்றும் கூறியுள்ளது.

# பள்ளிவாசல் கட்டிட வேலைகள் நிறைவு பெற உதவிக்கரம் நீட்டுங்கள்!

**"எவர் அல்லாஹ்விற்காக இறை இல்லத்தை கட்டுகிறாரோ அது காடை கூடு அளவிற்கு இருந்தாலும் அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை கட்டுகிறான்."**

– நபி (ஸல்) அவர்கள் (நூல் : இப்னு ஹிப்பான், பஸ்ஸார்)

கோவை மாவட்டம், சூலூர் வட்டம், கருமத்தம்பட்டி, **சோமனூர்** பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு மஸ்ஜிதே நூர் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசலுக்காக கட்டப்பட்ட கட்டிடம் வலுவிழந்ததன் காரணமாக அதே இடத்தில் மக்கள் தொழுமளவுக்கு பள்ளிவாசலின் உள் கட்டிட வேலைகள் அனைத்தும் அல்லாஹ்வின் அருளால் நிறைவு பெற்றுவிட்டன. அல்ஹம்துலில்லாஹ்!

வெளி வேலைகளும், மினாரா மற்றும் சுற்றுச்சுவர் வேலைகளும் பெருமளவில் நிலுவையில் இருப்பதால், மேற்படி வேலைகளை முழுமைப்படுத்தி நிறைவு செய்வதற்கு சுமார் **10 இலட்சம் ரூபாய்** வரை தேவைப்படுகிறது.

எனவே, நல்லுள்ளம் கொண்ட சகோதரர்கள் மேற்படி பொருளாதாரத்திற்கு உதவி செய்து **சுவனத்தைப் பெற அன்புடன் வேண்டுகிறோம்.** உதவி செய்ய முன்வருபவர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.

| 9843042027 | 9944685559 | 9443899786 | 9443426137 |
|---|---|---|---|
| தலைவர் | செயலாளர் | முத்தவல்லி | கௌரவ ஆலோசகர் |

**Account Name :** **Masjidhe Noor & Madhrasa Sunnath Jamath Paribalana Sabhai**

**Bank Name** : UNION BANK OF INDIA

**Branch** : SOMANUR

**Account No.** : **334902010010940**

**IFSC Code** : UBIN0533491

G Pay PhonePe **94438 99786**

# MASJIDHE NOOR MADHRASA SUNNATH JAMATH PARIBALANA SABHAI

**Somanur - 641668. Coimbatore Dt. Tamilnadu**

## வக்பு சட்டங்கள்

வக்பு சட்டங்கள் மீதான சர்ச்சைகளை குறித்துவிவாதித்த வாரியம், அந்த சட்டங்களை ரத்து செய்வதற்கான முயற்சிகளுக்கும் கண்டனம் தெரிவித்துள்ளது. வக்பு சட்டங்களை மேலும் வலுப்படுத்த வேண்டும்என்றும், வக்பு சொத்துக்கள் மீதான ஆக்கிரமிப்புகளை அகற்ற வக்பு வாரியங்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் வாரியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. வக்பு சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவதற்கும் வாரியம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

திருமணங்களை எளிமையாக நடத்த முஸ்லிம்கள் முன்வர வேண்டும்என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. குடும்பம் மற்றும் சமுதாய விஷயங்களில் ஷரீ அத்தின் விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் இக்கூட்டம் அனைத்துமுஸ்லிம்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

## மதுரை J.M.S. அரசு கல்லூரியில் குடியரசு தின விழா!

"குர்ஆனின் குரல்" ஆசிரியர் மாஹூிம் "அஸ்அதுல் மில்லத்" மவ்லானா முஃப்தீ **அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத்** (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்டு, சிறப்புடன் நடைபெறும் மதுரை J.M.S. அரசு கல்லூரியில் கடந்த 26.01.2024 வெள்ளிக்கிழமையன்று 75வது குடியரசு தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மதுரை J.M.S. அரசு கல்லூரி மற்றும் M.I.W.S . பைத்துல் மாலின் தலைவர் மவ்லானா **S.ஸபூர் முஹ்யித்தீன்** ஹள்ரத் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்தார்கள்.

J.M.S. அரசு கல்லூரியின் பேராசிரியர்கள் குடியரசு தின சிறப்புப் பற்றி உரையாற்றினார்கள்.

J.M.S. அரசு கல்லூரி பேராசிரியர் மவ்லானா **S.நைனார் முஹம்மது** ஹள்ரத் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகிகளும், பேராசிரியர்களும், மாணவர்களும், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 30 ஆஸ்திரேலிய பெண்கள்!

பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீன முஸ்லிம்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டம் சுமார் 70 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், கடந்த 4 மாதங்களுக்கு முன்பு இஸ்ரேலிய

எங்கள் நோக்கம் எல்லா புகழும் இறைவனுக்கே உங்கள் மனநிறைவு

## மீரா டாக்குமெண்டேஷன் & லா அசோசியேட்ஸ்

சட்ட ஆலோசனைகள் வழங்கி பத்திர பதிவிற்கு தேவையான அனைத்து விதமான ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து தரப்படும்.

**M.ஷேக் பரீத் அலீ, M.Com.,M.L., அட்வகேட்,**

100, சார்பதிவாளர் அலுவலக தெரு, அரவக்குறிச்சி – 639201. கரூர் Dt.



**9940787789 / 04320-231789**

எங்கள் இதர நிறுவனம் :

## மீரா இன்ஃபோநெட் இ-சேவை மையம்

அனைத்து விதமான ஆன்லைன் சேவைகளும் செய்து தரப்படும்

100/2, S.R.O. தெரு, அரவக்குறிச்சி.

**9843062785 / 8148148177**

## MEERA DIGITAL HUB மீரா டிஜிட்டல் ஹப்



அனைத்து விதமான கம்ப்யூட்டர், லேப்டாப், பிரிண்டர்ஸ், மொபைல் போன், CCTV கேமரா அனைத்தும் குறைந்த விலையில் கிடைக்கும்.

72, A.R.S. பில்டிங், கரூர் மெயின் ரோடு, அரவக்குறிச்சி.

**8248522455 / 9080360049**

---

shabnamsilks@ymail.com www.facebook/shabnamsilk.com

## Shabnam

**SILKS & READYMADE**

**No.74, J.N.STREET, PUDUCHERRY-1.**

**Ph : 0413-2222600, 2333600**

## Sagar Foot Wear



**269, M.G.ROAD, PUDUCHERRY-1.**

**Ph : 0413-2344600**

படைகளை எதிர்த்து ஹமாஸ் போராளிகள் நடத்திய திடீர் தாக்குதல்காரணமாக இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தப்போரில்இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீன மக்களை குறி வைத்து கொடூர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் அப்பாவி குழந்தைகள், பெண்கள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் உள்ள மருத்துவமனைகளையும் குறி வைத்து தாக்குதல் நடத்தியதால் ஏராளமான நோயாளிகள் உயிரிழந்தார்கள். எனினும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீன மக்கள் மன உறுதியுடன் தைரியமாக போராடி வருகிறார்கள். ஏக இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்து இந்தப் போரில் பலஸ்தீன மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். பல ஆண்டுகளாக நீடிக்கும் இந்தப் போராட்டத்தில் பலஸ்தீன மக்களின் உறுதியும், தைரியமும், நம்பிக்கையும், உலகிலுள்ள பல்வேறு நாட்டு மக்களை ஆச்சரியப்படுத்தி வருகிறது. அத்துடன் அவர்களை சிந்திக்கவும் வைத்துள்ளது.

**உலகம் முழுவதும் போராட்டங்கள் :**

பலஸ்தீனத்தின் மீதான ஆக்கிரமிப்பு மற்றும் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களை கண்டித்து உலகம் முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன. குறிப்பாக, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் நடக்கும் இந்த கண்டன போராட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக முழக்கங்களை எழுப்பி வருகிறார்கள். அப்பாவி பொது மக்களை குறி வைத்து இஸ்ரேல் நடத்திவரும் கொடூரத் தாக்குதல்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற குரல் தற்போது உலகம் முழுவதும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் போராட்டங்களில் மனிதநேயம் உள்ள சில யூதர்களும் கலந்து கொண்டு இஸ்ரேலிய அரசுக்கு எதிராக களத்தில் இறங்கி இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்களை கண்டித்து வருகிறார்கள்.

**பலஸ்தீன மக்களின் மன உறுதி**


பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலிய இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்தி வந்தாலும், பலஸ்தீன மக்கள் மிகவும் மனஉறுதியுடன் அதனை எதிர்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில், சுமார் மூன்று மாதங்களாக காஸாவில் இஸ்ரேலின் கொடூரமான ஆக்கிரமிப்புக்கும், தாக்குதலுக்கும் எதிராக பலஸ்தீன முஸ்லிம்களின் மன உறுதி, உலகில் அமைதியின் மதமான இஸ்லாத்தை பரப்ப

## வாங்கி விட்டீர்களா...

# பிரார்த்தனை செய்வது எப்படி?

### ஒன்று வாங்கினால்
### மற்றொன்று இலவசம்!

வரக்கூடிய ரமளானை முறையாக முழுமையாக பயன்படுத்தி, நம் அதிகமான நேரங்களை துஆகளிலேயே செலவு செய்வதற்கு வழிகாட்டக்கூடிய அற்புதமான நூல்தான் **“பிரார்த்தனை செய்வது எப்படி?”** எனும் நன்நூல் ஆகும்.




ஆசிரியர் : அல்லாமா

**அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹள்ரத் (ரஹ்)

**நூல் விலை : ரூ.25/- மட்டுமே!**

தபால் செலவு தனி!

**உடன் இந்த நூலை வாங்குங்கள்!**

**“நமக்கு உதவும் நாற்பது துஆகள்”**

**எனும் நூலை இலவசமாக பெறுங்கள்!!**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## குர்ஆனின் குரல்

தபால் பெட்டி எண் : 45, 4/25, எழில் நகர்,
மேலமடை, **மதுரை - 625 020.**

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு :

**9442056547, 9486729192**

உதவி செய்துள்ளது. இதன் காரணமாக இஸ்லாமிய போதனைகளால் மக்கள் வேகமாககவரப்பட்டு, இஸ்லாத்தால் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள். இது போன்ற பல சம்பவங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன.

### இஸ்லாத்தில் ஆஸ்திரேலிய பெண்கள்

இத்தகைய சூழ்நிலையில் காஸா மக்களின் மனஉறுதியையும், ஒற்றுமையையும் கண்டு வியப்படைந்த ஆஸ்திரேலிய பெண்கள் 30 பேர், இஸ்லாம் என்ற மிக உன்னதமான வட்டத்திற்குள் நுழைந்து தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியாவின் மெல்போர்னிலுள்ள Meadow Heights பள்ளிவாசலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள் வதற்கான இந்த ஆன்மிக விழா அண்மையில் நடைபெற்றது. அப்போது 30 பெண்கள், கலிமாவை சொல்லி தங்களை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டனர்.

துருக்கிய ஊடகம் ஒன்று தனது இன்ஸ்டாகிராமில் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளது. அதில் பெண்கள் கண்ணியமான இஸ்லாமிய உடையணிந்து கலிமா ஷஹாதத்தை ஓர் ஆலிமின் உதவியுடன் ஓதுவதைக் காணலாம். இஸ்லாத்தை ஏற்றுகொண்ட புதிய முஸ்லிம் பெண்ணான கிறிஸ்டின் கொனோகோனாக், இஸ்லாத்தில் ஓர் இறைக் கொள்கை என்ற கருத்துடன் தனது ஆழமான தொடர்பை வெளிப்படுத்தினார். பலஸ்தீனர்களின் போராட்டம் தனது இதயத்தைத் தொட்டதாக ஒப்புக் கொண்ட அவர், பலஸ்தீன மக்களின் உறுதியான போராட்டமே தன்னை இஸ்லாமின் பக்கம் மாறுவதற்கு வழி வகுத்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு புதிய முஸ்லிம் பெண்ணான ஜாக்குலின் ரெட்சாக், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, தான் மிகவும் நிம்மதியாக இருப்பதாகக் கூறியுள்ளார். மேலும், காஸாவின் நிலவரத்தை பார்த்துதான் இது போன்ற முடிவை எடுத்ததாகவும், இப்போது இஸ்லாம் மற்றும் அல்லாஹ்வுடன் நெருக்கமாக இருக்க விரும்புகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வேகமாக பரவும் இஸ்லாம்

பலஸ்தீன மக்கள் தங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றை மிகுந்த தைரியத்துடன் எதிர்கொண்டு வருவதன் மூலம் இஸ்லாம் குறித்து பிற மத மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உறுதி செய்துள்ளனர். இதன் மூலம் ஓர் இறைக் கொள்கை உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவி வருகிறது என்றே கூறலாம். உலகில்

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com



# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**
**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்,** M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : +91-7373030412, 414, 421.
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

தற்போது மக்களிடையே அதிகம் கவரப்பட்டு வரும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருவதை அண்மை கால பல புள்ளி விபரங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில் இஸ்லாமிய மார்க்கத்தை நோக்கி மக்கள் வேகமாக வருவதை உண்மையான செய்தி ஊடகங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். பல்வேறு நெருக்கடிகள், சிரமங்களுக்கு மத்தியிலும் இஸ்லாமிய நெறி உலக மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருவதை கண்டு பாசிஸ அமைப்புகள் கலக்கமடைந்துள்ளன. எனினும், இஸ்லாமிய நெறி அனைத்து தரப்பு மக்களிடையே பரவுவதை இனி யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அந்த வகையில் பலஸ்தீன மக்களின் தியாகங்கள் ஏக இறைவனால் நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும் என உறுதியுடன் கூறலாம்.

## குடியரசு தினத்தில் பள்ளிவாசல் திறப்பு!

சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம், கல்லலுக்கு அருகில் ஆலம்பட்டு, குந்தப்பட்டு என்ற இரு குக்கிராமங்களின் மத்தியில் 350 ஆண்டுகளுக்கு மேல் இருந்த பள்ளிவாசலை பழமை மாறாமல் அன்று எவ்வளவு பரப்பளவு எவ்வாறு இருந்ததோ அதே பரப்பளவில் அதே வடிவத்தில் புனரமைப்பு செய்து கடந்த 26.01.24 வெள்ளிக்கிழமையன்று சிறப்புடன் திறப்பு விழா நடந்தது. திறப்பு விழாவில் மேற்கண்ட இரண்டு ஊர்களிலும் உள்ள சகோதர சமுதாயத்தினர் ஆண், பெண் அனைவரும் சீர்வரிசை எடுத்து வந்து விழாவில் கலந்து கொண்டு மிக உற்சாகத்துடனும், பாசத்துடனும் கலந்து கொண்டு பெருமைபடுத்தினர். ஆலம்பட்டியிலிருந்த முஸ்லிம்கள் பெரும் பான்மையினர் பிழைப்பை நாடி வெளியூர் சென்று குடியேறி விட்டனர். தற்போது 5, 6 குடும்பத்தினர்தான் ஊரில் நிலையாக உள்ளனர்.

இந்த நிலையில், ஞானவேல் சோமசுந்தரம் என்ற முன்னாள் இராணுவ வீரர் அவர்கள் முன்னின்று அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றிகரமாக புனரமைப்பு செய்துள்ளார். கட்டிட மேஸ்திரி, தொழிலாளிகள் அனைவரும் சகோதர சமுதாயத்தினரே! 26.01.24 அன்று குடியரசு தினமாக இருந்தபடியால் பள்ளிவாசல் வளாகத்தில் தேசியக் கொடியேற்றப்பட்டு தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் முழங்க பள்ளிவாசல் திறப்பு விழா நடைபெற்றது. முன்னாள் நீதியரசர் கே.என்.பாஷா தலைமையேற்க திரு. ஞானவேல் சோமசுந்தரம் அவர்களும், ரஹ்மத் பதிப்பக

# இறையில்லம் விசாலமடைய உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகர், 1வது தெரு, கதவு எண்.1, முகப்பேர் கப்ருஸ்தான் பின்புறம் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் & மதரஸா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதிகளிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்கு முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஸ்கூல் படிப்புடன் ஹிஃப்ழு மதரஸாவில் ஓதக் கூடியவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லை. இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் ரூபாய் 36 இலட்சத்தில் விலைக்கு வந்திருக் கிறது. நல்லுள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்யுங்கள். ஸதக்கத்துல் ஜாரியாவின் வகையில் நாம் மரணித்த பிறகும் நன்மை வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது ஆமிரி : 9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
G-pay No. : **9444273674**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289**
SWIFT Code : **KVBLINBBIND**

நிறுவனர் எம்.ஏ.முஸ்தபா அவர்களும் முன்னிலை வகிக்க, பள்ளிவாசல் திறப்பு விழா இனிதே தொடங்கி, இஸ்லாமிய பெருமக்களும், சகோதர சமுதாயத்தினரும் வாழ்த்துரை வழங்க, இனிதே ஜும்ஆ தொழுகை நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்தளிக்கப் பட்டது. பள்ளிவாசல் வளாகத்தைச் சுற்றி தேசியக்கொடிகளும், பிறைகொடிகளும் பட்டொளி வீசிப் பறக்க முஸ்லிம்களும், பெரும்பான்மையான சகோதர சமுதாயத்தினரும் உற்சாகமாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தது பள்ளிவாசல் திறப்பு விழாவாகவும், மத நல்லிணக்க மாநாடாகவும் அமைந்திருந்தது.

## அரசு அதிகாரி ஆலிம் ஆகிறார்

**அல்ஹாஜ்** Er. S.**சுல்தான்** B.E. அவர்கள், தமிழக அரசின் குடிநீர் வடிகால் வாரியத்தின் அரசு பணியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு திருநெல்வேலி பேட்டை "ரியாளுல் ஜினான்" அரபுக் கல்லூரியில் சேர்ந்து பாடம் படித்து "மவ்லவீ ஆலிம் - ரியாஜி" பட்டம் பெற்றுள்ளார். நாம் அனைவரும் அவரை பாராட்டி வாழ்த்துவோம்!

தொகுப்பு : **பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**


நம்பகமான சேவையில் நம்பிக்கையான மருந்தகம்

**பாவா மெடிக்கல்ஸ்**

294/1, சாலை தெரு,
**இராமநாதபுரம் - 623 501.**

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

# வாய்த் தூய்மை

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

வாயின் தூய்மை இன்றியமையாதது. சுவாசம், உணவு ஜீரணம் ஆகியவற்றை இயக்கும் உறுப்புகளின் நுழைவாசலாகவும் வாய் அமைந்துள்ளது. வாயின் நலம் சீர்கெடும் போது உடல் முழுவதும் பாதிக்கப்பட்டுவிடும்.

வாயில் நுண்கிருமிகள் நிறைந்துள்ளன. 200 முதல் 300 வகையான நுண்கிருமிகள் பல இலட்சமாக அவற்றின் எண்ணிக்கை அறியப்பட்டுள்ளன. இவற்றில் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் (Streptococcus) என்ற நோய்க்கிருமிகளும், அதன் பல வகை இனக் கிருமிகளும் நோயை அதிகம் தூண்டுகின்றன. சர்க்கரை, மாவுச்சத்து உணவுகள் ஆகியவற்றை அமிலங்களாக இக்கிருமிகள் மாற்றம் செய்து பல் சிதைவை ஏற்படுத்தி விடுகின்றன.

பல் துலக்குதல், உணவு உண்டபின்பு பற்களுக்கிடையில் தங்கி நிற்கும் உணவுத் துகள்களை நீக்குவதன் மூலம் வாயின் நலத்தைப் பேண முடியும். இல்லையெனில் பற்சொத்தை, ஈறு நோய் ஆகியன தோன்றி சீரழிவைத் தூண்டும்.

ஈறு வீக்கம் நோய் ஏற்படின் அது ஈறுகள் இணைந்திருக்கும் எலும்புகளையடைந்து எலும்பு வீக்கத்தைத் தூண்டும். இது பெரிவோடன்டைடிஸ் (Periodontitis) என்றழைக்கப் படுகிறது. இந்நோய் அதிகம் பல் சிதைவைத் தூண்டி விடும்.

**1) நிமோனியா** (Pneumonia)

வாயின் நோய்க்கிருமிகள், நுரையீரல்களுக்குள் சென்று நுரையீரல் வீக்கத்தைத் தூண்டுகின்றன. இது கடுமையான நோயாகும்.

**2. கர்ப்பம் சார்ந்தவை**

பெரிவோடன்டைடிஸ் என்ற எலும்பு வீக்க நோய் குறை மாதக் குழந்தையாகவும், எடை குறைந்த குழந்தையாகவும் பிறக்கச் செய்யும்.

**3.ஆஸ்டியோபோரோசிஸ்** (Osteoporosis)

இந்நோய் எலும்புகளை வலிமை இழக்கச் செய்கிறது.

பற்கள் இணைந்துள்ள எலும்புகளையும், பற்களையும் சிதைக்கின்றன. இதற்குரிய சில மருந்துகள் தாடை எலும்பையும் சிதைக்கின்றன.

**4. அல்ஸீமர்ஸ்நோய்**
(Alzheimer's Disease)

மனிதன் முதுமை அடையும்போது மூளைச் செல் அணுக்கள் தேய்ந்து இந்த மறதி நோயைத் தூண்டுவதோடு வாய் நலமும் பாதிக்கப்படுகிறது.

**5. இதயநோய்**

இதயத்தின் சுத்த இரத்தப் பகுதி மற்றும் அசுத்த இரத்தப் பகுதி ஆகியவற்றின் நான்கு அறைகளின் உட்பகுதியை மெல்லிய சவ்வுப்படலம் போர்த்தியுள்ளது. மேலும் மேலறையிலிருந்து கீழ் அறைக்குள் பாயும் இரத்தம் பின்னோக்கிப் பாய்ந்து விடாமல், தடுக்கிதழ்களும் உள்ளன. மெல்லிய சவ்வுப் படலம் இவற்றின் மீதும் படிந்துள்ளன.

வாயிலுள்ள நோய்க் கிருமிகளின்தூண்டுதலால், இச்சவ்வுப் படலத்தில் வீக்கம் ஏற்பட்டு விடும். இந்நோய் எண்டோ கார்டைடிஸ் (Endocarditis) என்றழைக்கப்படுகிறது.

உடலின் மற்ற பாகங்களிலுள்ள நோய்க்கிருமிகளாலும், இந்நோய் தூண்டப்படலாம். கடுமையான இந்நோய், இதயத்தை சிதைக்க வல்லது.

ஆகவே, பற்கள், ஈறுகள் மற்றும் அவை இணைந்திருக்கும் எலும்புகள் நோய் வாய்ப்படும்போது இதயம் பாதிக்கப்படுகிறது. கொலஸ்ட்ரால் (Cholestrol) என்ற கொழுப்புச் சத்து, இரத்தக் குழாய்களில் படிவது அதிகரித்து, இரத்த ஓட்டத்தை தடுப்பதன் மூலம் மாரடைப்பைத் தூண்டலாம். மூளையில் ஸ்ட்ரோக் (Stroke) என்ற இரத்தக் குழாய் அடைப்பு நோயும், இரத்தச் சிதறலும் ஏற்படலாம். பக்கவாத நோய் அல்லது மரணம் நேரலாம்.

கொலஸ்ட்ரால், இரத்தக் குழாய்களின் மீது படிவதை அதிரோஸ்கிலிரோஸிஸ் (Atherosclerosis) என்று அழைக்கப்படுகிறது. ஈறு நோயும், பெரிவோடென்டிஸ் என்ற எலும்புநோயும் நீங்கி நலமடையும்போது கொழுப்புப் படிதலும் குறையத் தொடங்கும் என்று அறியப்பட்டுள்ளது.

## வாய் நலம் பேணும் வழிமுறை

1. மிருதுவான பல் துலக்கும் பிரஸைப் பயன்படுத்தி தினம் 2 முறை பல் துலக்குதல். துலக்கும் நேரம் 2 நிமிடங்கள். பிளோரைட் கலந்த பற்பசையைப் பயன்படுத்த வேண்டும்.

மக்களின் சேவையில் 18 ஆண்டுகள்!
நம்பிக்கையோடு வாருங்கள்!!
இன்ஷா அல்லாஹ் சுகம் பெறுவீர்கள்!!!

Rx

# சன் மெடிக்கல்ஸ்

## SUN MEDICALS

1/180-A, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்,
திருப்பூர் ரோடு, **மங்கலம் - 641663.** திருப்பூர் மாவட்டம்.

**9865261670**



சுப முகூர்த்தப் பட்டுகளுக்கு...

SILK MARK

மக்களின் பாராட்டில்... மயிலாடுதுறை சீமாட்டி...

# சீமாட்டி

**பட்டு - ஜவுளி - ரெடிமேட்ஸ்**

**மயிலாடுதுறை. ☎: 222587**

: seemattiali@gmail.com

: +91 80564 02677

2. பற்களுக்கிடையில் தங்கும் உணவுத் துகள்களை நீக்கி விட வேண்டும் (Flossing).
3. வாய் கழுவும் திரவத்தை (Mouth wash) வாயில் ஊற்றிக் கொப்பளித்து சுத்தம் செய்ய வேண்டும்.
4. சத்துணவு உண்பதோடு, இனிப்புப் பதார்த்தங்கள் மற்றும் குடிப்புகளைத் தவிர்த்தல் நல்லது.
5. 3 அல்லது 4 மாதங்களுக்கு ஒரு முறை பல் துலக்கும் பிரஸை மாற்ற வேண்டும்.
6. புகையிலையைத் தவிர்க்க வேண்டும்.
7. பல் மருத்துவரிடம் சென்று வாய்த்தூய்மையை குறிப்பிட்ட தவணைகளில் மேற்கொள்ள வேண்டும்.

## இஸ்லாம் காட்டும் வழி

வாய்த் தூய்மையின் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்வதுடன் 'அழகிய முன் மாதிரி'யான அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழியில் இதனையறிந்து பின்பற்றுவது நலவாழ்விற்கு வழி நடத்தும் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

தொழுகைக்காக ஒளுச் செய்யும்போதும், நள்ளிரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுந்தவுடனும், உணவருந் திய பின்பும், வெளியில் புறப் படுவதற்கு முன்பும், திரும்பி வந்தவுடனும், உரை நிகழ்த்து வதற்கு முன்பும், இரவு உறங்கு வதற்கு முன்பும் பல் துலக்கு வதை நபி (ஸல்) அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்களின் புனித உயிர் உடலிலிருந்து பிரிவதற்கு முன்பும் கூட பல் துலக்கி, பல் துலக்குவதன் இன்றியமை யாத நிலையை வலியுறுத்தி யுள்ளனர்.

“சிரமம் ஏற்படுவது இல்லையென்றால் ஒவ்வொரு தொழுகையின் ஒளுவின் போதும் பல் துலக்குமாறு என் தோழர்களுக்கு கட்டளை யிட்டிருப்பேன்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினர்

(புகாரீ)

பேரறிஞர் லுக்மான் ஹக்கீம் (அலை) அவர்கள் “உங் களின் பற்களைக் கொண்டே உங்கள் புதைகுழியைத் தேடிக் கொள்ளாதீர்கள்” என்ற வார்த்தைகள் வாயின் அசுத்தம் மரணத்தைத் தூண்டும் என்பதை உணர்த்துவதாகக் காண்கிறோம்.

“உஹா” மரத்தின் வேரினால் பல் துலக்குவது, மிகவும் விரும்பத்தக்கதாகும். ஏனெ னில், நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் என்ற விண் பயணத் திற்கு முன்பாக வானவர்கள் அண்ணலாரின் நெஞ்சைப்

பிளந்து இதயத்தை ஜம்ஜம் என்ற புனித நீரால் கழுவி தூய்மைப்படுத்தி இறை ஞானத்தால் நிறைத்த பின்பு மீதமிருந்த நீர் கொட்டப்பட்ட இடத்தில் முளைத்த மரம் என்ற சிறப்பு உஹா மரத்திற்கு உண்டு என்பதே அதற்குக் காரணமாகும்.

முகத்திற்கு அழகையும், குரலுக்கு இனிமையையும், சிந்திக்கும் ஆற்றலை சீராக்கியும், நரையையும், முதுமையையும் தாமதப்படுத்தும் சிறந்ததோர் செயல் பல் துலக்குதலாகும்!

## விளையும் நன்மைகள்

★ "பல் துலக்குதல் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்கிறது."

"சளியைப் போக்கி துர் நாற்றமுள்ள எச்சிலை நீக்கி விடுகிறது" என்று கூறினார்கள் ஹள்ரத் அலீ இப்னு அபூதாலிப் (ரளி) அவர்கள் (இஹ்யாஉல்உலூம்)

★ உணவு தோற்றுவிக்கும் வாயு, வாய் நாற்றத்தைத் தூண்டுகிறது. உணவின் சுவை குறைகிறது. எனவே, உறங்கி எழுந்தவுடன் பல் துலக்குவதால்வாய் சீர் பெறுகின்றது" என்று ஹள்ரத் இப்னு தாக்கி (ரளி) அவர்கள் கூறினர். (நலெவதாலிக்)

★ அறிவு கூர்மை பெறுகிறது (திப்பு நபவி)

★ நான்கு செயல்கள் அறிவை கூர்மையாக்குகின்றன. 1. மிஸ்வாக் செய்தல். 2.அறிவற்ற பேச்சுகளைத் தவிர்த்தல். 3. இறையச்ச மிக்கவர்களுடன் இருத்தல். 4. உலமா (அறிஞர்)களுடன் உரையாடுதல்.

★ "தொடர்ந்து மிஸ்வாக் செய்யும்போது மரணத்தை தவிர்த்து மற்ற நோய்கள் அனைத்திற்கும் அது மருந்தாகி விடுகிறது" என்று அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறினார்கள் என்று "அல்ஜாமிஉ" எனும் நூல் குறிப்பிடுகிறது.

★ மிஸ்வாக் வாய்க்கு நறுமணம் நல்குகிறது.

★ ஈறுகள் உறுதியடைகின்றன.

★ பற்சிதைவைத் தடுக்கிறது. ஏற்கனவே பற்சிதைவு ஏற்பட்டிருப்பின் மேலும் பரவாமல் தடை செய்கிறது.

★ தலைவலி, பல்வலி ஆகியனவற்றைத் தடுக்கிறது.

★ பற்களுக்கு நூர் (ஒளி) தருகிறது.

★ பற்கள் பளிச்சிடவும் உதவுகிறது.

★ பற்களின் மஞ்சள் கறைகளை நீக்குகிறது.

★ கண்பார்வை கூர்மை யடைகிறது.

★ உடல் முழுவதும் நலம் பெறுகிறது

★ ஜீரண சக்தி அதிகரிக்கிறது.

★ பசி உணர்வைத் தூண்டு கிறது.

★ குரல் இனிமை பெறுகிறது.

★ சொல்லாற்றலை வளர்க் கிறது என்று ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் கூறினார்கள்.

★ மரண வேதனை குறைகிறது. (சாஹில் சுதூர்)

★ மிஸ்வாக் செய்தபிறகு ஒளு செய்து தொழும் தொழுகை 70 முதல் 400 நன்மைகளை ஈட்டித் தருகிறது. (நபிமொழி)

★ சுவனத்தில் உயர் பதவியைப் பெற்றுத் தருகிறது.

★ வானவர்கள் புகழ்கிறார்கள். துணை நிற்கிறார்கள்.

★ ஷைத்தான் வேதனைப்படு கிறான்.

★ அனைத்திற்கும் மேலாக அல்லாஹ்வின் மகிழ்ச்சி யைப் பெற்றுத் தருகிறது.

## பல்குச்சி

♦ இதன் நீளம் 1 சாண் அளவு

♦ பெருவிரலும், சுண்டுவிரலும் பல்குச்சிக்குக் கீழும் மற்றவை மேலுமாகப் பிடிக்க வேண்டும்.

♦ தொழுகைக்காக ஒளு செய்யும் முன் பல் துலக்கு வது சுன்னத் என்ற நபி வழியாகும்.

## இதன் நேரங்கள் :

♦ குர்ஆன், ஹதீஸ் ஓதுவதற்கு முன்பு.

♦ வாயில் துர்நாற்றம் தோன்றும் போது.

♦ இஸ்லாமியக் கல்வியை கற்பிக்கும் முன்பும், கற்றுக் கொள்வதற்கு முன்பும், திக்ர் என்ற இறை தியானத்திற்கு முன்பும்.

♦ மனைவியுடன் உடலுற விற்கு முன்பு.

♦ வெளியே சென்றுவிட்டு வீட்டிற்குள் நுழைந்தவுடன்.

♦ பொதுச் சபைகளுக்குச் செல்லும் முன்பு.

♦ பசி, தாகம் ஏற்படும்போது

♦ ஸஹர் நேரம்.

♦ உணவு உண்பதற்குமுன்பு

♦ பயணம் புறப்படும்முன்பும், பயணம் முடிந்து வீடு வந்தவுடனும்.

♦ உறங்குவதற்கு முன்பு.

♦ உறங்கி எழுந்தவுடன்

♦ ஒருவர் இறந்தவிட்ட அடையாளம் தெரிந்தவுடன்.

(தொடரும்)

# நிலையான நன்மைகள் பெற்றிட நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற்பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400** சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கனவான்கள் தங்கள் மனம் திறந்து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

Bank Name : INDIAN BANK    Branch : ARIYUR

A/C No. : **6845938157**

IFSC Code : IDIB000A198

+91 9080005537

+91 9080005537@akbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா மவ்லவீ **உபைதுல்லாஹ்** காஸிமி, நிறுவனர் & முதல்வர்,

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

# நுகர்ந்தவை

நூல் : ஹக்கீம் அஜ்மல் கான் எனும் சமூக மருத்துவர்

ஆசிரியர் : ஆர்.வெங்கடேசன்

பக்கங்கள்: 48; விலை : ரூ.50/-

வெளியீடு :

**நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்,**
43, யூனிகான் காம்ப்ளக்ஸ்,
குருவிக்காரன் சாலை,
அண்ணாநகர், மதுரை–625020.
அலைபேசி : 9080330200

இந்தியவிடுதலைப்போராட்ட காலத்தில் வாழ்ந்த மருத்துவர் ஹக்கீம் அஜ்மல் கான் என்னும் சமூக சேவகரைப் பற்றி இந் நூலில் பேசப்படுகிறது. இந்து, முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் மேற்கொண்ட பல முயற்சிகள் வியந்துரைக்கப்பட்டுள்ளன.

யுனானி மருத்துவரான இவர், தன் தந்தை டில்லியில் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேத மருத்துவத்தை கற்றுத் தர ஏற்பாடு செய்தார் என்றும், துருக்கியில்கிலாஃபத் ஆட்சி முடிவுக்கு வந்தபோது, அதைத் தடுப்பதற்கான வழிகளில் ஈடுபட்டார் என்பதும் அழுத்தமாக உணர்த்தப்பட்டுள்ளன. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னரே மரணித்த இவரின் பெயர் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் பெயர் பட்டியலில் இடம் பெறவில்லையே என்ற நூலாசிரியரின் ஆதங்கத்தைச் சொல்லும் அருமையான நூல் இது.

* * * * * *

நூல் : இயேசு

ஆசிரியர் : மவ்லவீ எம். முஹம்மது **அப்துல்லாஹ்** மன்பஈ

பக்கங்கள்: 48; விலை : ரூ.35/-

வெளியீடு : **மின்னல் பதிப்பகம்,**
எண்.1, 2வது தளம், காமாட்சிபுரம்,
மதுரை – 625009.
அலைபேசி : 7373510786

ஹள்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றிய உண்மைகளை எடுத்துரைக்கும் அருள் மறை குர்ஆன் வசனங்கள் இந் நூலை அலங்கரிக்கின்றன. சிலை வணக்கத்தைத் தடுத்து பைபிள் குறிப்பிடும் வசனங்களும் இந் நூலில் வந்துள்ளன. இமாம் அபூபக்கர் அல்பாக் கில்லானி (ரஹ்) அவர்களுக்கும், ஒரு பாதிரியாருக்குமிடையே நடைபெற்ற உரையாடல்களும், அஹ்மத் தீதாத் அவர்களுக்கும் ஒரு பாதிரியாருக்குமிடையே நடந்த உரையாடலும் இடம் பெற்றுள்ளன. அந்த உரையாடல்களில் இமாம்களின் புத்தி சாதுர்யமும், விவாதத் திறமையும் வெளிப்படுகின்றன. முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் இணைக்கும் பாலமாகத் திகழும் பண்பான நூல் இது.

ஆய்வு : பாவா

# தமிழக மதரஸாக்களுக்கான
# அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் **"சொல்லிலக்கணம்"** என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹள்ரத்** அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

## மிக பயனுள்ள நூல்!

**பக்கங்கள் : 800;** **விலை ரூ. 500/-** (தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் :** **குர்ஆனின் குரல்**
மதுரை 9486729192



வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786, 222528 (E)

**மலைவலம் வரும் நகரில்**
**கலை நயம் பொருந்திய**

# பூம்புகார்

துணியகம் & ஆடையகம்!

55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601

# வரலாற்றில் ஓர் ஏடு

ஒரு நாள் பகலில் அல்லது இரவில் நபி (ஸல்) அவர்கள் வெளியே வந்தபோது, அங்கே ஹள்ரத் அபூபக்ர் (ரளி), ஹள்ரத் உமர் (ரளி) ஆகியோரைப் பார்த்தபோது, "இந்த நேரத்தில் நீங்கள் வீட்டிலிருந்து வரக் காரணம் என்ன?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "பசி தான்" என்று அவர்கள் பதில் சொன்னார்கள். "உங்கள் இருவரையும் வெளியாக்கிய பசியே என்னையும் வெளியாக்கியது. இருவரும் எழுந்து வாருங்கள்" என்று சொல்லி அன்சாரி ஒருவரின் வீட்டிற்கு வந்தார்கள். அவர் வீட்டில் இல்லை. அவரின் மனைவி "மர்ஹபன் வ அஹ்லன்" என வாழ்த்துக் கூறி வரவேற்றார்கள். வீட்டிற்கு தண்ணீர் கொண்டு வரச் சென்ற அந்த அன்சாரித் தோழர் வீடு திரும்பினார். அல்ஹம்து லில்லாஹ்! இன்று மிகச் சிறப்பு மிக்க விருந்தாளிகளைப் பெற்றவர் என்னைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது" என்று மூவரையும் பார்த்துச் சொன்னார்.

அவர் நடந்து சென்று காயும், பழமும், கனிந்த பழமும் இருந்த ஒரு பேரீத்தம் பழக்குலையைக் கொண்டு வந்தார். கத்தியை எடுத்து ஆட்டை அறுப்பதற்காக அவர் புறப்பட்டார். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், "பால் கொடுக்கும் ஆட்டை (அறுப்பதை விட்டும்) எச்சரிக்கிறேன்" என்றார்கள். பின்னர் அவர்களுக்காக (ஓர் ஆட்டை) அறுத்தார்.

அதன்பின் அவர்கள் சமைத்த ஆட்டிறைச்சியையும், பேரீத்தம் பழங்களையும் சாப்பிட்டு தண்ணீர் குடித்தார்கள். அனைவரும் உண்டதும் நபி (ஸல்) அவர்கள், "மறுமையில் இந்த அருட்கொடை பற்றிக் கேட்கப்படுவீர்கள். உங்கள் வீடுகளிலிருந்து உங்களைப் பசி தான் வெளியேற்றியது. பின்பு இந்த அருட்கொடைகளைப் பெற்று நீங்கள் உங்கள் இல்லங்களுக்குத் திரும்புகிறீர்கள்" என்று சொன்னார்கள்.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் 497,
முஸ்லிம் 2038

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

**தாலீக் - இ- முபாரக் சாகி**

கியாசுத்தீன் துக்ளக் மரணம் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டதல்ல என்று தாலீக் - இ - முபாரக் சாகி கூறுகிறதை ஆர்.சி.மஜும்தார் கோடிட்டுக் காட்டுகிறார்.

கியாசுத்தீன் துக்ளக் 1325 பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் மறைந்தார் என்று கூறப்படு கிறது. அம்மாதத்தில் இடி ஏற்பட வாய்ப்பில்லை. மே மாதத்தில் நடந்திருக்கலாம் என்று ஆகா மகதி ஹுசைன் கருதுகிறார்.

**6.9.1320**

கியாசுத்தீன் துக்ளக் 6.9.1320 சனிக்கிழமை பதவி யேற்றார். (ஷஅபான் மாதம் முதல் நாள் ஹிஜ்ரி 720) நான்கு வருடங்கள் நான்கு மாதங்கள் ஆட்சி புரிந்தார் என்பார் உல்ஸிஹுக்.

**நான்கு வருடங்கள் பத்து மாதங்கள்**

கியாசுத்தீன் துக்ளக் நான்கு வருடங்கள் பத்து மாதங்கள் ஆட்சி புரிந்தார், அவரது ஆட்சியின் கீழ் முஹம்மது பின் துக்ளக் இருந்தார் என்பர் ஆகா மஹதி ஹுசைன்.

**கியாசுத்தீன் மரணம்**

ஆட்சிக்கு வந்தது 6.9.1320. சர் உல்ஸிஹுக் கூற்றுப்படி 4 வருடங்கள் 4 மாதங்கள் அதாவது 1325 பிப்ரவரி அல்லது மார்ச் வரை. ஆப்கன்பூரில் கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது 1325 பிப்ரவரி. ஆகா மஹதி ஹுசைன் கூறுவது கியாசுத்தீன் துக்ளக் ஆட்சி 4 வருடங்கள் 10 மாதங்கள் அதாவது 1325 ஜூலை வரையில். கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது கி.பி.1325 ஜூலையில் என்கிறார் ஆகா மஹதி ஹுசைன். இதற்கு என்ன ஆதாரம்?

**முஹம்மது பின் துக்ளக் நினைவுகள் எச்சக்கூறு முறிந்த துண்டு**

முஹம்மது பின் துக்ளக்கின் வரலாற்றின் முறிந்த துண்டுப் பகுதி, துண்டு துணுக்குகள் கொண்ட மீதியிருந்த பகுதி, முடியாத பகுதி, எச்சக்கூறு அல்லது அரை குறையாகவிடப் பட்ட பகுதி ஒன்றுள்ளது.

## பிரிட்டிஷ் மியூசியத்தில்

இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் முஹம்மது பின் துக்ளக்கின் வரலாற்றின் ஓர் எச்சப்பகுதி உள்ளது. அதன் பிரதியை ஆகா மஹதி ஹுஸைனின் “துக்ளக் பரம்பரை” நூலில் தந்துள்ளார்.

## 1325 ஜுலை

இலண்டனில் பிரிட்டிஷ் மியூசியத்தில் நான்கு பக்கங்கள் அரபியிலுள்ள முஹம்மது பின் துக்ளக் வரலாற்றின் துண்டுப்பகுதியில் கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது 1325 ஜூலை மாதம் என்றுள்ளது.

## வங்காள அரசர் ஷம்ஸுத்தீன்

வங்காள அரசர் ஷம்ஸுத்தீன் பிருஷ்ஷா கி.பி. 1322இல் இறந்தார். அதையடுத்து அவரது நான்கு பிள்ளைகளும் பதவிக்காகப் போட்டியிட்டனர்.

## கியாசுத்தீன் பகதூர் Ghiyasudddin Bahadur

நான்கு பிள்ளைகளில் கியாசுத்தீன் பகதூர் மிகுந்த பேராசைக்காரராய் இருந்தார். லக்னோதி (Lakhnauti) யிலிருந்து தமது சகோதரர் ஷிஹாபுத்தீனைத் துரத்தினார். பிறிதொரு சகோதரர் குத்லூ கான் கொல்லப்பட்டார். நசீருத்தீன் என்ற சகோதரரை பலவாறு துன்புறுத்தினார்.

## ஷிஹாபுத்தீன் - நசீருத்தீன்

ஷிஹாபுத்தீனும், அரசர் நசீருத்தீனும் (Shihabuddin) (Nasiruddin), கியாசுத்தீன் துக்ளக்கினுடைய உதவியை நாடினார்கள். வங்காள பிரபுக்கள் சிலரும் அவர்களுக்கு ஆதரவளித்தனர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி டெல்லியின் ஆதிக்கத்தை வங்காளத்தில் நிலைநாட்ட கியாசுத்தீன் துக்ளக் படையுடன் சென்றார்.

## பகர ஆட்சிக் குழுவில் முஹம்மது பின் துக்ளக்

முஹம்மது பின் துக்ளக்கை தாம் டெல்லியில் இல்லாத போது அரச காரியங்களைக் கவனிக்கப் பகர ஆட்சிக் குழுவை அமைத்து அதில் அவரை இடம் பெறச் செய்தார் கியாசுத்தீன் துக்ளக். அவரைக் கொல்ல சதி செய்தார் முஹம்மது பின் துக்ளக் என்பதனை ஏற்கத்தான் முடியுமா?

## திர்ஹுத்

கியாசுத்தீன் துக்ளக் திர்ஹுத்தை (Tirhut) அடைந்தார். அங்கு அவரை வங்காள நசீருத்தீனும், கியாசுத்தீனும் சந்தித்தனர். தங்களுக்கு ஆதரவு வேண்டினர்.

## பஹ்ராம்கான் (Bahramkhan)

பஹ்ராம்கான் தலைமையில் படை லக்னோதிக்குச் சென்றது. கியாசுத்தீன் பகதூர் போரில் தோற்றார். நசீருத்தீன் லக்னோதி அரசரானார்.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

المدرسة الجنة ودارالأيتام

Regd. No. : 28/BK IV/15

# அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா

**தேவாரம் - 625 530. தேனி மாவட்டம்.**

## அன்பான வேண்டுகோள் ...

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

பெரு மதிப்பிற்குரிய இஸ்லாமிய சகோதரர்களே!

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் நமது அல்ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா-வில் 50-க்கும் மேற்பட்ட எத்தீம் மாணவியர்கள் ஈருலக நற்கல்வி பயின்று வருகிறார்கள். முழுமையான மார்க்க கல்வியுடன் பள்ளி, கல்லூரிகளிலும் பயின்று வருகிறார்கள். அவர்களின் கல்விக்கும், வாழ்வின் உயர்விற்கும் தங்களது **ஜகாத்/ஸதகா** போன்ற உதவிகளை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**Google Pay/PhonePe:**
**87542 22470**

**வங்கி விபரம்**

**AL JANNATH YATHEEMKHANA MADRASA**
**A/C No : 35486597490 State Bank of India**
**Thevaram Branch, IFS Code : SBIN0014441**
**Theni District. TamilNadu. S.India**

**C.அபூபக்கர் சித்தீக்** தஃவத்தி, D.T.T., நிர்வாகி
27/2, W-17, 5-வது தெரு, தேவாரம் - 625 530. தேனி Dt.
தொடர்புக்கு : 04554-254021, 099443 77681

## அஹமத்கான்

வங்காளத்திலிருந்து திரும்பும்போது கியாசுத்தீன் துக்ளக்திர்ஹத்தைத் தாக்கினார். வென்றார். அஹமத்கான் (Ahmad Khan) அங்கு ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். இதற்குப்பிறகுதான் டெல்லிக்கு வருகிறார் கியாசுத்தீன் துக்ளக்.

## அஹமத்ஹஸன்

Sadr-i-Ala Ahmad Hasan சத்ரி அலா அஹமது ஹஸன், கியாசுத்தீன் துக்ளக்கின் அரசவையைச் சார்ந்தவர் மற்றும் மன்னரது பரிவாரத்தினர் (Courtier) ஆவார். (அவர் கியாசுத்தீன் துக்ளக்கோடு லக்னோதி படையெடுப்பில் பங்கேற்றவர். கியாசுத்தீன் துக்ளக் டெல்லிக்குத் திரும்பும்போது அவருடன் திரும்பி வந்தவர்.

## பாஸ்டின் - அல் - அன்ஸ்

சதரி அலா அஹமது ஹஸன் எழுதிய நூல் பாஸ்டின் அல் அன்ஸ். அது பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ளது.

## கியாசுத்தீன் துக்ளக் நோய்வாய்ப்படுதல்

வங்காள லக்னோதி படையெடுப்பிற்குப் பிறகு டெல்லி திரும்பும் வழியில் கியாசுத்தீன் துக்ளக் அதிக உஷ்ணத்தாலும், பருவமாற்றங்களாலும் துன்பத்திற்குள்ளாகி மிகவும் அபாயகரமாக நோய் வாய்ப்பட்டார். இதனை அஹமது ஹஸன் தெரிவித்துள்ளார். கியாசுத்தீன் துக்ளக் 1325 ஜூலை 25ல் மறைந்ததை "முஹம்மது பின் துக்ளக் நினைவுகள் சிறுபகுதி" என்ற பிரிட்டிஷ்மியூசிய ஆவணம் தெரிவிக்கிறது. இவ்வாறு இருக்கிற போது கி.பி.1325 பிப்ரவரி - மார்ச் மாதத்தில் ஆப்கன்பூரில் புதிதாக கட்டிய அரண்மனை இடிந்து விழ கியாசுத்தீன் துக்ளக் மறைந்தார் என்பது சரியா? என்று கேட்கிறார் ஆகா மஹதி ஹுஸைன்.

The author of the Basatin - ul - Uns, Sadr-i-Ala - Ahmad Hasan - a courtier of Sulthan Ghiyas-ud-din Tuqhuluq was in his suite in the Lakhnauti expedition and accompanied him to Delhi. He describes most vividly the over whelming heat, hot winds and hard ships that he, with his companions, had suffered during the return Journey to Delhi, where he at last fell dangerously ill. This is brone out by the memories of Muhammad bin Tughluq, which fix Ghiyas - ud -din Tughluq's death about the month of July 1325.

என்ன இது! காலங் காலமாகச் சொல்லப்பட்டு வந்த கியாசுத்தீன் துக்ளக் மரணம் குறித்த செய்தியை மாற்றச் சொல்கிறாயே என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. சான்றுக்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும். (தொடரும்)

# நோன்பு நம்முடைய உரிமை!

மவ்லவி ஹாஃபிழ் எஸ்.ஃப்பக்கீர் முஹம்மது ஜலாலீ

இந்தியச் சிறைகளில் கஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை முஸ்லிம் கைதிகள் ரமளானில் நோன்பிருப்பதைப்போல் முஸ்லிமல்லாத நிறைய கைதிகள் நோன்பிருக்கிறார்கள். நோன்பின் உள்ளமை அவர்களுக்கு புரிகிறதோ, இல்லையோ முஸ்லிம்களுடன் தங்களுக்கான அன்பை பரிமாற அதை ஒரு வாய்ப்பாக நினைக்கிறார்கள். நீதி என்பது அரசியல்வாதிகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் ஒரு பக்கச் சார்பாக இருக்கலாம். ஆனால் நீதி வாழும் ஒரே இடம் சிறைகள் மட்டுமே.

சிறைக்கு வெளியே கூட முஸ்லிம்களின் மனம் கவர மாலையில் இஃப்தாரில் மட்டும் கலந்து கொள்ளும் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். முழுமையாக அன்று நோன்பு இருந்து அன்றைய பொழுதை முஸ்லிம்களுடன் கழித்து நோன்பு திறப்பில் தங்களின் நேசத்தை பேச்சால் வெளிப்படுத்தி இஃப்தார் செய்யும் அரசியல் ஆளுமைகளும் உண்டு.

முஸ்லிம்களிடம் நோன்பு பெற்றிருக்கும் இடம் என்ன? நோன்பு என்பது என்ன? ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்களுக்கு 40 நாள் தவத்துக்கு (நோன்புக்கு) பின் தவ்ராத் வேதம் கிடைத்தது என்றால், குர்ஆனை பெற்ற பிறகு நாம் முப்பது நாள் நோன்பிருக்கிறோம். வேதம் என்பது புத்திமதி நூல் அல்ல. இறைவனின் பிரதிநிதியாக இருந்து ஆளும் மகா சக்தியான மனிதனுக்கான முழுமையான ஆளுமை சட்டங்கள்!

அதை பெற்றதற்கான நன்றிக்கடன் நோன்பு. ஹள்ரத் நபி ஆதம் (அலை) அவர்கள் வயிற்றில் சேரக்கூடாத ஒன்று (தடுக்கப் பட்ட கனியின் துகள்கள்) வயிற்றில் சேர்ந்ததால் அவர்களை முப்பது நாள் பரிபூரண நோன்பு இருக்கச் செய்து அல்லாஹ் சுத்தப் படுத்தியதாக நபிமார்கள் வரலாற்றில் குறிப்பிடப்பட்டு அதுவே மனித சமுதாயத்தின் வழிவழியாக கடமையாக்கப்பட்டது. அதனால் தான் அதை தூய்மைப்படுத்தும் ஆயுதமாக அல்லாஹ் தந்துள்ளான். மனித இனத்தின் வழிவழியாக வந்த வழிபாடு நோன்பு.

இன்று நம்மிடம் நோன்பு எந்நிலையில் உள்ளது? கடின உழைப்புள்ளவர் நோன்பிருக்கத் தேவையில்லை. ஊர் ஊராய்

சுற்றுபவர் (அதாவது மொத்தமே ஒரு கிலோமீட்டருக்குள் சுற்றும் சர்வேயர் போன்றவர்) நோன்பு வைக்கத் தேவையில்லை. அதுபோல பெண்கள் வைத்துள்ள நோன்புத்தடைகள், திருமணம் முடிப்பதற்கு முன்னுள்ள சில மாதங்களுக்குள், திருமணம் முடிந்த சில மாதங்களுக்குள் நோன்பு வந்தால் மாப்பிள்ளையும், பெண்ணும் நோன்பு வைக்கக் கூடாது என்ற கட்டாய கட்டுப்பாடு! ஏன் இப்படி?

ஏழு வயதானால் ஏவ வேண்டிய நோன்பை சிறு பையன், பிள்ளை என்பதற்காக பள்ளிக் கூடம் போகும் பிள்ளைகளை நோன்பு வைக்க பெற்றோர் தடுத்தல், சில பள்ளிக் கூடங்களே 'எங்கள் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் நோன்பு வைக்கக் கூடாது' என்று தடுப்பது, இவையெல்லாம் சாதாரணம்! 'நோன்பு எங்கள் உரிமை. நீங்கள் தடுக்க முடியாது' என பள்ளிகளில் போய் பேசுவோர் எத்தனை பேர்?

பிள்ளைகளுக்கு கறி, மீன், பழம், இனிப்பு என தேடித்தேடி வாங்கிக் கொடுக்கும் பெற்றோர், சொர்க்கத்துக்குப் போக வேண்டிய பிள்ளைகள் நரகம் போகும் நிலையும், அப்படியே மாற்றமாக பெற்றோர் சொர்க்கத்துக்கு போகும் நிலையும் மறுமையில் வந்தால்...? சிந்தியுங்கள்.


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்



**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
மதுரை-625020.

அலுவலக அலைபேசி எண் :
94420 56547
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

என் இரட்சகனே எனக்கு கல்வி ஞானத்தை அதிகப்படுத்துவாயாக (அல்குர்ஆன் 20 : 114)

جامعة منبع الاسرار للعلوم الشرعية الاسلامية والعلوم العصرية

# ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி

# JAMIA MANBAUL ASRAR ARABIC COLLEGE

**D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், திருவாரூர் ரோடு, மன்னார்குடி–614001. திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.**

**D.G. Town, Near Markas Pallivasal, Thiruvarur Road, MANNARGUDI - 614001. Thiruvarur Dist, Tamil Nadu.**

## இரு கல்வியும் கற்போம்! கண்ணியம் காப்போம்!!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

அன்பான பெற்றோர்களே... அல்லாஹ்வின் கிருபையால் புதியதாக துவங்கப்பட்டுள்ள எங்கள் மத்ரஸாவில் மார்க்கக் கல்வியுடன் கூடிய பள்ளி மற்றும் காலேஜ் படிப்புகளும் சேர்த்து கற்றுத்தருவதுடன், தங்களின் குழந்தைகளின் ஈருலக வாழ்வில் சிறந்த மார்க்கக்கல்வி பெற்ற மாணவர்களாக திகழ்வதற்கு எங்களின் மதரஸாவில் இனிதே பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## கல்லூரியின் சிறப்பம்சங்கள்

**மார்க்கக்கல்வி பாட திட்டம் மவ்லவீ ஆலிம் பட்டப்பிரிவு**

- ★ உயர்நிலை 10, மேல் நிலை +2 பள்ளி படிப்பு
- ★ B.Com., B.B.A., போன்ற பட்ட படிப்பு (Annamalai University)
- ★ C.F.A., (Certificate in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ D.F.A., (Diplama in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ B.A., Arabic படிப்பு (Chennai University)
- ★ D.F.U., (Diplama in Functional Urdu)
- ★ கிராஅத் பட்ட பயிற்சி பிரிவு
- ★ அரபி, உருது, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமை பெறச் செய்தல்
- ★ கம்யூட்டர் பயிற்சி

**குறிப்பு : மாணவர்கள் சேர்க்கைப்பதிவு நடைபெறுகிறது.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : மவ்லானா, மவ்லவீ, ஹாஃபிழ், காரீ, அஃப்ஜலுல் உலமா

**B. ஜமீலுத்தீன் தாவூதி பாஜில் காஸிமி, D.F.A.,**

**நிறுவனர் & முதல்வர் : ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி**

D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், ஜவர் சமாதி பஸ் ஸ்டாப், திருவாரூர் ரோடு, **மன்னார்குடி–614001.** திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.

**Cell : 97895 18284, 96593 88904.**

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## இளம் பெண்களின் மறுவாழ்வு சீராக அமைய...

நம் சமுதாயத்தில் நிறைய இளம் பெண்கள் விவாகரத்து செய்யப் பட்ட நிலையிலும், கணவரை இழந்த நிலையிலும் அடுத்த வாழ்க்கைக்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அதில் சில பேர் குழந்தைகளை வைத்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட இளம் பெண்களின் மறுவாழ்வு சீராக அமைய இப்புனித ரமளானில் துஆ மஜ்லிஸ் குழுவினரை துஆ செய்யுமாறு மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**– குரல் வாசகர்கள், திருப்பூர், கரூர் – பள்ளபட்டி.**

அப்ஸரா பானு – சென்னை; ஹலீமா – திருச்சி; ஹபீபுன்னிஸா – ஈரோடு; எம்.ஷானவாஸ் – திருச்சி; ஆர்.முஹம்மது சாதிக் – ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ – ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் – மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் – மதுரை; ஹபீப் நிஸா – ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் – மங்கலம்; பி.சுபைதா – சோழமாதேவி; முனீர் மீரான் – சென்னை; மும்தாஜ் – தஞ்சாவூர்; முஹம்மது இஸ்மாயீல், முஹம்மது ஜாவித் – விழுப்புரம்; எஸ்.சலீமா பீ – பண்ருட்டி; அ.ராபியத்துல் பஸரிய்யா – மூணார்; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் – மதுரை; எஸ்.நூருன்னிஸா – தஞ்சாவூர்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா – மதுரை; ஹாஜ்ஜா அ.அஜிமா பீவி – ஈரோடு; முஹம்மது நிஹால் – ஈரோடு; எம்.எஸ்.மன்சூர் அலீ – திருச்சி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹ்ருல் ஹஸன் – மதுரை; ஜ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் – மதுரை; ஹாஜி ம.பீர்முஹம்மது, பீ.ருகையாள் பீவி – உத்தமபாளையம்; ஹாஜ்ஜா பீ.யாஸ்மின் நிஹாரா, பீ.சுல்தானா பர்வீன்பானு – உத்தம பாளையம்; ஹாஜ்ஜா முஹையதீன் பாத்திமா – கோத்தகிரி; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா – மதுரை; குரல் வாசகி – தஞ்சாவூர்; முஹம்மது ஜாபர் சாதிக் – ஆத்தூர்; சரிபா பானு, மும்தாஜ் பேகம் – ஆத்தூர்; சுல்தான் – திருச்சி; ஏ.அஷ்ரப் நிஷா பேகம் – தேவராயன் பாளையம்; செல்லபா, எஸ்.கோரிமா – விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் – மதுரை; காதர் ஹுசைன், சுஹைல், தாதாபீர் – பெங்களூரு; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா – மதுரை; ஷானவாஸ் – சவூதி; எல்.ரேஷ்மா பேகம் – திருச்சி; ம.ஹபீபுன்னிஸா – ஈரோடு; ஷபீர் அஹமது – கோவை; குணா – ஈரோடு; சேகர் – ஈரோடு; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அராபாத்,

ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.நூருன்னிஷா -லால்குடி; முஹம்மது ஷர்புல் இப்ராஹீம் - டெல்லி; செல்வம், தங்கமணி - ஈரோடு; நுஸ்ரத் பானு - உடுமலைப்பேட்டை; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; அ.ஷாஹிதா பானு - உடுமலைப் பேட்டை; முஹம்மது ஃபயாஜ் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாருக், முஹம்மது மீரான் - மதுரை; முஹம்மது அஷ்ரஃப் அலீ, ஜஸீமா பானு, பாத்திமா ரஸ்வின், ஹாஜி எம்.காதர் இப்ராஹீம், மர்ஹூம் எஸ்.கே.ஏ.முஹம்மது இஸ்மாயீல், எம்.ஜெய்த்தூன் பீவி - திருச்சி; ஹாஜி பீர் முஹம்மது, ஹாஜ்ஜா பீ.ருகையாள் பீவி - உத்தமபாளையம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அன்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பாஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - மதுரை; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; பீ.முஹம்மது யாகூப், S/o. எம்.குல் முஹம்மது - திருச்சி; கரீம் சுஹைல் - திண்டுக்கல்; நூருல் தௌலத், அஷ்ரத் - தஞ்சாவூர்; பி.தாஹிரா - பழனி; ஆஸிப் மீரான் - திருச்சி; ரேஷ்மா - பெங்களூரு; ரகீப் சுல்தானா - தஞ்சாவூர்; எம்.எஸ்.மீரான் சாகுல் ஹமீது, ஜரீனா பானு - ஈசநத்தம்; ஜஸிமா ஜாஸ்மின் - திண்டுக்கல்; சந்தா எண் F595 - திருச்சி;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹஸ்ரத் தாமத் பரக்காத்துஹும் அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் எனக்கு இப்பொழுது லக்னோவில் (Intership) அமைந்துள்ளது. எனக்காக துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்வானாக ஆமீன்! என்னைப் போல் எத்தனை பேர் அவர்களுடைய ஹாஜத்துக்களுக்காக துஆ செய்யச் சொல்லி சொன்னார்களோ அவர்களுடைய ஹாஜத்துகளும் நிறைவேற நாம் அனைவரும் துஆ செய்வோம். **உமர் — லக்னோ.**

# இறைவா, நீ றைவருள் புரிவாயாக!

மதுரை மாவட்டம் பேரையூர் எழுமலை A.S.N. பால்பண்ணை அதிபர் அல்ஹாஜ் முஹம்மது சலீம் மற்றும் சகோதரர்களின் மைத்துனர் ஜனாப் புரோஸ்கான் அவர்கள் 30.12.23 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் பழனி பெரியகலையம்புத்தூர் அல்ஹாஜ் க.முஹம்மது பாதுஷா அவர்களின் தாயாரும், உடுமலை கல்லாபுரம் ஊராட்சி மன்ற உபதலைவர் ஜனாபா கே.ஷேக் பரீத் அவர்களின் மாமியாருமான ஜனாபா முஹமூதா பேகம் அவர்கள் 01.01.24 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மர்ஹூம் எம்.ஷேக் பரீத் (ரஹ்) அவர்களின் மனைவியும், ஜனாப் எம்.எஸ்.பீர்முஹம்மது, எம்.எஸ்.திவான் ஷரீப் இவர்களின் தாயாருமான ஜனாபா பாத்திமா அவர்கள் 16.01.24 அன்றும்,

திருப்பூர் தாராபுரம் அம்பி ஹாஜியார் அவர்களின் மகனார் ஜனாப் காஜா முஹையதீன் அவர்கள் 20.01.24 அன்றும்,

தாராபுரம் Dr. A.சுஹைல் அஹமது அவர்களின் நன்னிமா ஜனாபா ரஷீதா பேகம் அவர்கள் 27.01.24 அன்றும்,

கூடலூரைச் சார்ந்த மதுரை மாவட்ட முன்னாள் பால்வள தலைவர் மர்ஹூம் H.S. சாகுல் ஹமீது (ரஹ்) அவர்களின் மனைவியும், கூடலூர் முஹையதீன் ஆண்டகை பள்ளிவாசலின் முன்னாள் முத்தவல்லி ஜனாப் முஹம்மது ராவுத்தர் அவர்களின் மகளாரும், ஜனாப் இம்தியாஸ் அவர்களின் தாயாருமான ஜனாபா சம்சீர் பேகம் அவர்கள் 30.01.24 அன்றும்,

பழனி கீரனூர் கே.என்.எஸ்.ஹாஜி அப்துல்லாஹ் அவர்களின் மனைவியும், மேட்டுப்பாளையம் அல்ஹாஜ் அப்துல் ஹமீது அவர்களின் மகளாருமான அல்ஹாஜ்ஜா நஜ்முன்னிஸா அவர்கள் 31.01.24 அன்றும்,

திருப்பூர் மங்கலம் மர்ஹூம் C.E.நூர் முஹம்மது சாயபு (ரஹ்) அவர்களின் மகனாரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால சந்தாதாரரும் "C.E.N. கரிக்கடை" நாசர் அவர்களின் தம்பியுமான ஜனாப் C.E.N. காசிம் (எ) ஹபீபுல்லாஹ் அவர்கள் 31.01.24 அன்றும்,

கோவை மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த தமிழக SDPI மாநில செயற்குழு உறுப்பினர் ஜனாப் A.S. ஷபீக் அஹமது அவர்களின் தகப்பனார் ஜனாப் A.S. அப்துல் கலாம் அவர்கள் 04.02.24 அன்றும்,

கடலூர் மங்கலம்பேட்டை தமீமுல் அன்ஸாரி, முஸ்தாக் அஹமது, பாரிஸ் அஹமது ஆகியோரின் தந்தையும், ஹாஃபித் டெய்லா அவர்களின் மாமனாருமான மவ்லானா E.A. முஹம்மது ஃபாருக் நூரிய்யீ ஹள்ரத் அவர்கள் 09.02.24 அன்றும்,

திருப்பூர் மங்கலம் அல்ஹாஜ் M.P.ரபீதீன் அவர்களின் தம்பி ஜனாப் M.P. நஜீர் அஹமது (E.B.) அவர்கள் 13.02.24 அன்றும்,

"நுக்தா" மாத இதழின் மேனாள் ஆசிரியரும், மிகச் சிறந்த எழுத்தாளருமான திருநெல்வேலி பேட்டை மவ்லானா ஹாஃபிழ் எஸ்.பக்கீர் முஹம்மது ஜலாலி ஹள்ரத் அவர்கள் 16.02.24 அன்றும்,

ஈரோடு (பம்பாய்க்காரர்) மர்ஹூம் மைதீன் அப்துல் காதர் (ரஹ்) அவர்களின் மகனாரும், "மலர் சில்க்ஸ்" அப்பாஸ் அவர்களின் மச்சாரும், ஜுஹான் பார்சல் சர்வீஸ் சாதிக், சிட்டிசன் பாபு ஆகியோரின் மாமனாரும், பெரோஸ் அவர்களின் தகப்பனாருமான ஜீவா டிரைவர் (Retd.) ஜனாப் M.அப்துல் ரஹீம் அவர்கள் 21.02.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

## அறிவு, செல்வம் இவற்றில் எது சிறந்தது?

ஒருமுறை பத்து அறிஞர்கள் ஹள்ரத் அலீ (ரளி) அவர்களிடம் வந்து "அறிவு, செல்வத்தை விட சிறந்ததா ?" என்ற ஒரே கேள்வியைக் கேட்டு பத்து பதில்களைத் தருமாறு வேண்டினர். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அளித்த பதில்கள் :

1. அறிவு இறைதூதர்களின் வாரிசுகளுக்கு உரியது. செல்வம் செருக்குற்ற ஃபிர்அவ்னிடமிருந்து பெறப்படுவது.
2. செல்வத்தை நீங்கள் பாதுகாக்கிறீர்கள். அறிவு உங்களைப் பாதுகாக்கிறது.
3. செல்வந்தருக்குப் பகைவர்கள் பலர் இருப்பர். அறிஞர்கள் நண்பர்களைப் பெற்றிருப்பர்.
4. செல்வம் கொடுக்க கொடுக்க குறையும். அறிவு கொடுக்க கொடுக்க கூடும்.
5. செல்வன் கருமியாவதும் உண்டு. அறிஞன் தாராள தன்மையில் குறைய மாட்டான்.
6. செல்வம் திருடப்படும். அறிவைக் களவாட முடியாது.
7. மறுமையில் செல்வம் கேள்வி கணக்கிற்கு உள்ளாகும். அறிவின் செலவு சிறப்பு பெறும்.
8. செல்வம் காலத்தால் அழியும். அறிவு காலத்தை வெல்லும்.
9. அறிவால் செல்வம் பெருகும். செல்வம் அறிவை அழிக்கும்.
10. அறிவால் அல்லாஹ்வை அறியலாம். செல்வச் செருக்கு இறைவனிடமிருந்து விலக்கி வேதனையில் வீழ்த்தும்.

# வாசகர் வட்டம்

"மாதம் ஒரு மாமறை" வசனத்தை மவ்லவீ பரகத் அலீ ஹள்ரத் அழகாக படிப்பவர்களுக்கு மனதில் பதியும் வண்ணம் ஜொலிக்க வைக்கிறார். "அலட்சியம் வேண்டாம்" என்ற தலையங்கத்தில் பாரதீய ஜனதாவின் பித்தலாட்டங்களை வெளிச்சம் போட்டு சொல்லி விட்டீர்கள். இஸ்லாமிய மக்கள் ஒருபோதும் பாரதீய ஜனதாவை ஆதரிக்க மாட்டார்கள்.



"பதில்கள்" பகுதி, பதில்களை தெரிந்து கொள்வதற்கு உதவியாய் இருக்கிறது. சந்தேகங்களுக்கு விளக்கம் தந்து சர்க்கரைப் பொங்கலாய் இனிக்கிறது. இன்னும் நிறைய பக்கங்கள் வர வேண்டும்.

"இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று மாதந்தோறும் மலரும் குர்ஆனின் குரலை பாராட்டி மகிழ்ச்சி அடைகிறேன்.

அ. ஷேக்முஹம்மது,
வேடசந்தூர்.

"தண்ணீர் தண்ணீர்" கட்டுரையில் ஜம்பை ஜப்பார் ஹள்ரத் குர்ஆனின் பல ஆயத்துகளை மேற்கோள் காட்டி விளக்கமாக எழுதியிருந்தவை அனைத்தும் அருமை. படித்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். காரணம் "நீரின்றி அமையாது உலகு" என்ற மொழிக்கிணங்க தண்ணீர் அனைத்திற்கும் அவசியம். நபி மொழியும் இதனை வலியுறுத்தி கூறியுள்ளது. சிக்கனமாகப் பயன்படுத்துவது பற்றி "நீங்கள் தண்ணீர் வழிந்தோடுகின்ற நதிக்கரையில் அமர்ந்து அதனைப் பயன்படுத்தினாலும் வீண்விரயம் செய்யாதீர்கள்" என்பதாக உள்ளது.

"வாழ்க நலமுடன்" தலைப்பில் அன்வர்ஜீ எழுதியிருந்தவைகள் மிகவும் பயன்படத்தக்கதாக உள்ளன. அவற்றை விளங்கி விரும்பி கடைபிடிப்பது நன்மை பயக்கும்.

பா. ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.


நூற்றாண்டினை தொடவுள்ள நமது "குர்ஆனின் குரல்" மாத இதழ் ஆண்டுகள் பல கடந்து காலவரம்பின்றி நம்மவர்கள், சகோதர சமுதாயத்தினர்கள், பெரியோர்கள், உலமாபெருமக்கள் அனைவருக்கும் பலவித நற்கருத்துகளை மிக மிக நல்ல கொட்டை எழுத்தின் வடிவில் அச்சிட்டு துல்லியமாக அனுப்பி வரும் தங்களின் இப்பணி தங்கு தடையின்றி தொய்வில்லாமல் தொடர வாழ்த்தி துஆ செய்கிறேன்.

**S.M.S. முஹம்மது மொய்தீன்,**
**கன்னிவாக்கம்.**

# தாஜ் டிரேடர்ஸ்


**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்






No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001


Touches Your Heart®
Remains Forever ...
PMP TEX INDIA
ESTD 1968
Ulama®
LUNGIES * VESTS * BRIEFS
OUR PRODUCTS
Follow us on
ULAMA FASHION
Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India